வெளியீடு 11-6-2003 Issued 11-6-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 29, 2002 – தொகுதி 32 – எண் 1

**Tuesday the 29th October, 2002 – Volume 32 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

[Price Rs. 3.00

**29-10-2002**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| *1.* *வினாக்கள்-விடைகள்—* | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-49 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 மற்றும் 7) | 50-118 |
| *2.* தகவல் கோரல்— | |
| ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது | 119-131,136-137, 141-150, 151,152,153 |
| *திரு. துரைமுருகன் | 119-121 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 122,143,144 |
| திரு. ஜி.கே. மணி | 122,123-124, 144,150 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 124,125 |
| திரு. ஜி. பழனிசாமி | 125-127,144,152 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 127 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 127 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 128-130,136 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 145-150 |

| | பக்கங்கள் |
|---|---|
| 3. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 131-132 |
| (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 132 |
| 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு-மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 133 |
| (ஆ) குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002 | 133-134 |
| (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 135 |
| (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2002 | 197 |
| 5. அறிவிப்புகள்— | |
| (அ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ. இ.) | 134 |
| (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆ செ.) | 136 |
| (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2002 (ஆ இ.) | 197 |



| | பக்கங்கள் |
|---|---|
| 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், **2002-2003**, விவாதமும் வாக்கெடுப்பும்— | 137-141<br>151-196 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 137,173,<br>185-194 |
| *திரு. பி.எம். நரசிம்மன் | 151-160 |
| திரு. சி. ஞானசேகரன் | 160-170 |
| திரு. ஜி.கே. மணி | 170-177 |
| திரு. ராதாரவி | 177-185 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 199-200 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

4. கல்வி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

225172
சென்னை-600 008
நூலகம்

5. சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

6. இந்துசமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்துசமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

8. கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

9. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

10. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



11. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

12. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

13. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல், குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

15. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

வணிக வரிகள்.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன் :

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

17. உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், வீட்டுவசதி, வீட்டுவசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**

கால்நடை பராமரிப்பு.

19. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

20. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வ.து. நடராசன் :**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

21. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**

மீன்வளம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works and Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons.

3. **Minister for Finance** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies.

4. **Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

   Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

5. **Minister for Law and Information Technology** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law, Courts and Information Technology.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Co-operation, Food, Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

9. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan and Passports.

10. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

11. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.



12. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

13. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. **Minister for Electricity, Industries and Rural Industries** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development, Industries, Iron and Steel Control, Mines and Minerals, Electronics, Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi and Village Industries Board.

15. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Commercial Taxes.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests and Environment and Pollution Control.

17. **Minister for Local Administration, Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority.

18. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

19. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

20. **Minister for Labour** .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

21. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

22. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

23. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

24. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

25. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

*மாற்றுத் தலைவர்கள்**

திரு. அ. பாப்பா சுந்தரம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திரு. அ. அன்வர் ராஜா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

*முதன்மைச் செயலாளர்*

திரு. செ.சு. ஜானகிராமன்

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

*25-10-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. வை. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய்,<br>பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம்,<br>எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு~,<br>எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர்,<br>பேரவைத் தலைவரின்<br>தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம்,<br>எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ. கு. சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே.
எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. க. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்



179. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
180. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
181. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
182. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
183. மில்லர், திரு. அ. .. கூடலூர்
184. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
185. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
186. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
187. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
189. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
190. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
191. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
192. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
193. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
194. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
195. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
196. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்

| | | |
|---|---|---|
| 202. ராஜு, திரு. எச்.எம். | .. | உதகமண்டலம் |
| 203. ரெங்கநாதன், திரு. என். | .. | பூம்புகார் |
| 204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 205. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 207. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 208. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 209. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 211. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 212. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 213. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்காநகர் |
| 215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 217. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-I |
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேலு, திரு. ஏ.வ. | .. | தண்டராம்பட்டு |



| | | |
|---|---|---|
| 223. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 224. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 225. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 226. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 13, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 அக்டோபர் 29, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்*
*போற்றி வழங்கு நெறி."*

*வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.*

### 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 47, திரு. க. பாரமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**47—**

### அணைக்கட்டு

***6053—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் அருகிலும், கானூர் அருகிலும், வைகை ஆற்றின் குறுக்கே இரு சிறிய அணைக்கட்டுகள் கட்டி வைகையின் இருபுறங்களிலும் உள்ள கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வைகை ஆற்றின் குறுக்கே கானூர் வெள்ளப் போக்கி மதகு அருகே படுகை அணை கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. இந்தக் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பரிசீலனையை விரைவுபடுத்தி, வருகின்ற ஆண்டிலாவது நிதி நிலை அறிக்கையில் நிதியொதுக்கி, விரைவாக அந்த வேலையை முடித்துத்தர வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்வதோடு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் அருகிலும், கானூர் அருகிலும், வைகை ஆற்றின் குறுக்கே இரு சிறிய அணைக்கட்டுகள் கட்டி, வைகையின் இருபுறங்களிலும் உள்ள கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தரும் திட்டம்—திட்ட மதிப்பீடு ரூ.317 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு, மதிப்பீடு, சென்னை, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தில் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தில் கானூர் பிரிவு வாய்க்காலில் வெள்ளப் போக்கியின் தலை மதகு அருகில் ஆற்றின் குறுக்கே 190 மீட்டர் நீளத்திற்குப் படுகை அணை கட்டி, கானூர், பழையனூர் மற்றும் பொமனூர் பிரிவு வாய்க்காலில் தண்ணீர் கொண்டு சென்று 10,173 ஏக்கர் பாசன உறுதியும், 4,763 ஏக்கர் இடைவெளி நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னர், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட்டு, இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**48—**

## தடுப்புச் சுவர்

***8193—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்கள் பல ஆண்டுகளாக இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுவதைக் கருதி, தடுப்புச் சுவர் எழுப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் கடற்கரைப் பகுதிகளில் கடலரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிரந்தரத் தீர்வு காண, கடலுக்குக் குறுக்கே தடுப்புச் சுவர் எழுப்பும் பொருட்டு, கற்குறடுகள் (க்ராயன்) அமைப்பதற்கு—சுமார் 3.5 கி.மீ. நீளத்திற்கு—திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் 95.20 கோடியாகும். இதற்கான மதிப்பீடு தமிழக அரசின் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. ஆறுமுகம்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டு காலமாக, வட சென்னைப் பகுதியிலே கடல் அரிப்பு ஏற்பட்டு, கடல் அரிப்பு மூலமாகப் பல்லாயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் மற்றும் வட சென்னை, எண்ணூர் விரைவுச் சாலைகள் முழுமையான வகையிலே பாதிக்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது எழுகின்ற இயற்கைச் சீற்றங்கள் மூலமாக அரசுகள் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவு செய்து, அவற்றைத்

தடுக்க முற்பட்டுக் கொண்டு வருகின்றன. இருப்பினும், கடல் அரிப்பு நடந்து கொண்டே இருக்கின்றது. கடந்த வாரம் 25-10-2002-ல்கூட எண்ணூர் பகுதி சென்னையிலிருந்து துண்டிக்கப்பட்டு இருக்கிறது. அதை உடனே நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தபோது, அவர்கள் இரவு என்றும் பாராமல் உடனடியாக நேரடியாக வருகை தந்து, பார்வையிட்டு அந்தப் பகுதிக்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்காக, அங்கே கற்களைக் கொட்டுவதாக அறிவித்து இருக்கிறார்கள். அவை சிறிய கற்களாக இருந்து தடுப்புச் சுவர் அமைக்கும் பட்சத்தில் கடல் அரிப்பினைத் தடுத்து நிறுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், எண்ணூரிலிருந்து சென்னைக்கு அந்தப் பகுதி மக்கள் மற்றும் அனைவரும் வருகை தந்து செல்லக்கூடிய வகையில், நாள்தோறும் போக்குவரத்து ஏற்படுத்தித் தருகின்ற வகையில், விரைவிலே ஒரு டன் அல்லது 2 டன் எடையுள்ள பாறைக் கற்களை அங்கே போட்டு, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படுகின்ற வகையில், நீண்ட நாள் கோரிக்கையான மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டியும், வட சென்னைப் பகுதியை முழுமையான வகையில் கடல் அரிப்பிலிருந்து தடுப்பதற்காக வேண்டியும், அங்கே நிரந்தரச் சுவர் ஒன்றை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னைக் கடற்கரையில் இராயபுரம் முதல் எண்ணூர் வரை, எண்ணூர் நெடுஞ்சாலை மீனவர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளிலும் ஓரமாகவும், ஏற்பட்டுள்ள 11.02 கிலோ மீட்டர் நீளத்தில், கடலரிப்புகள் 6.43 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கற்குவியல் சுவர் அமைத்துப் பாதுகாக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4.59 கிலோ மீட்டரில் 2.38 கிலோ மீட்டர் நீளத்திற்கு உடனடியாக— அன்னை சிவகாமி நகர் குப்பம், எர்ணாவூர் குப்பம், சின்னக்குப்பம், பெரிய குப்பம், தாழங்குப்பம் ஆகிய மீனவர் குடியிருப்புகள் மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில்—கடற்கரை விளிம்பில் உடனடியாகப் பாதுகாப்புச் செய்ய பொதுப் பணித் துறை மூலம்



கற்குவியல் சுவர் அமைப்பதற்கும், மற்றும் ஏற்கெனவே அமைக்கப்பட்ட 2.27 கிலோ மீட்டர் நீளத்திற்கான கற்குவியல் சுவரைச் சீரமைத்துப் பலப்படுத்தவும் ரூபாய் 10.57 கோடி திட்டத்திற்கு ஹட்கோ நிதி நிறுவனம் கடன் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை உடனடியாகச் செயல்படுத்த ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அவசர நிலையினைக் கருதி, தேவையான உடனடிப் பணிகளைச் செய்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. 31-3-2003-க்குள் பெரும்பாலான பணிகள் செயல்படுத்தப்படும். மீதமுள்ள 2.21 கிலோ மீட்டர் எண்ணூர் நெடுஞ்சாலையைப் பாதுகாக்க, தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று, பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியை ஒட்டி அமைந்துள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் கடலோரமுள்ள 4-வது வட்டம், 6-வது வட்டத்திற்குட்பட்ட அண்ணா நகர், மாயாண்டி நகர், நல்ல தண்ணீர் ஓடைக் குப்பம், சீனிவாசா நகர் உட்பட 6 நகர்கள் இந்தக் கடலரிப்பால் தொடர்ந்து பாதிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. இந்தக் கடலரிப்பைத் தடுக்க வீராணம் திட்ட நினைவுச் சின்னக் குழாய்கள் மற்றும் பாறாங்கற்கள் ஆகியவை சமீப காலமாகப் போடப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இவை கடலில் கரைத்த பெருங்காயம் போலக் காட்சியளிக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3-1/2 கிலோ மீட்டர் நீளத்திற்கு 92.5 கோடி ரூபாய் செலவில் குறுக்குச் சுவர் அமைக்கின்ற பணிக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்கள். அந்த 3-1/2 கிலோ மீட்டர் நீளம், இந்த 6 நகர்களுக்கும் பாதுகாப்புச் சுவர், குறுக்குச் சுவர் கட்டித் தருகின்ற திட்டத்தில் அடங்குகிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

[2002 அக்டோபர் 29

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியினுடைய பாதுகாப்பு முக்கியத்துவத்தைக் கருதி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தச் செயற்குறிப்பினைத் துரிதப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு இப்பொழுதுதான் எழுதி, அதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, இப்போது எண்ணூர் பகுதி ஒரு தீவாக மாற்றப்பட்டு அந்த இடத்திலே பஸ் போக்குவரத்து எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே இருக்கக்கூடிய சாலைகளை பராமரிக்கப்பட வேண்டுமென்றால், செப்பனிடப்பட வேண்டுமென்றால், அதற்கு நாம் மீண்டும் மத்திய அரசை அணுகவேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே நாம் அனுமதியைப் பெற்றுத்தான்—அதாவது, இப்போது நம்முடைய தருமபுரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கல் குவாரி பகுதியில் இருக்கக்கூடிய ரோடு பூராவும் பெரிய, பெரிய கற்களைக் கொட்டி வைத்திருக்கிறார்கள். அதுபோன்ற கற்களை எல்லாம் அப்படியே கொண்டு வந்து நீங்கள் இந்த இடத்திலே போட்டால்கூட, ஓரளவுக்குக் கடலரிப்பைத் தடுக்க முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது எண்ணூர் பகுதியிலே அரிக்கப்பட்டிருக்கிற அத்தனை சாலைப் பகுதிகளிலும் முழுமையாக, இப்போது அந்தப் பாறாங்கற்களையெல்லாம் கொண்டு வந்து போட்டு—மும்பையிலே மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் கடலரிப்பைத் தடுப்பதற்காக; இது போன்ற பெரிய, பெரிய கற்களைப் போட்டு மும்பை நகரத்தை மிகச் சிறப்பாக அவர்கள் பராமரித்து வருகிற காரணத்தினால். அதேபோல இங்கேயும் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் (குறுக்கீடு) திரு. ஆறுமுகம் அவர்கள் நிரந்தரத் தீர்வாகத் தடுப்புச்



2002 அக்டோபர் 29]

சுவர் எழுப்புவது பற்றித்தான் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் அளித்திருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல், வடகிழக்குப் பருவமழையின் காரணமாகக் கடந்த சில நாட்களுக்கு முன்னால் ஏற்பட்டுவிட்ட அந்தப் பகுதியினுடைய பாதிப்பிற்கு உடனடித் தீர்வாக, அவர்கள் சொன்னதுபோல், பெரிய, பெரிய பாறாங்கற்களைப் போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இன்னும் ஓரிரு தினங்களில் அப்பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர், எண்ணூர் பகுதிகளிலே கடல் அரிப்பால் மிகப் பெரிய பாதிப்பு இருக்கிறது என்று இங்கே சொல்லப்பட்டது. அது மிகப் பெரிய அளவிலே போக்குவரத்தையும் பாதித்திருக்கிறது, மக்களையும் பாதித்திருக்கிறது. குறிப்பாக, மீனவர் குடியிருப்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்திகள் தொடர்ந்து பத்திரிகைகளில் வருகின்றன. இந்தக் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல், வெறும் பாறாங்கற்களை, மற்ற கற்களைக் கொண்டு, கற்குவியலைக் கொண்டு தடுப்பது என்ற முறை, அங்கே பலன் அளிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, நவீன முறைகளைக் கையாண்டு தடுப்புச் சுவர் அமைப்பதற்கு அல்லது வேறு வகையான முறைகளைக் கையாண்டு, இந்தக் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான முயற்சியை நமது அரசு மேற்கொள்ள முனைப்புடன் செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதியான, நிரந்தரமான தடுப்புச் சுவர் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொண்டார்கள். கடந்த காலங்களில் அந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பினைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உறுதியான தடுப்புச் சுவரை அந்தப் பகுதியில் நிரந்தமாகக் கட்டித் தருவதற்குண்டான ஆயத்தப் பணிகளை

மேற்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய இந்தியத் திருநாட்டில் மற்ற பகுதிகளில் இதுமாதிரியான தடுப்புச் சுவர்கள் எங்கெங்கு நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதைப்போல, வெளிநாடுகளிலும் இந்த மாதிரி கடலரிப்பு இருக்கின்ற எந்தெந்தப் பகுதிகளில் நிரந்தரமான தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் ஆய்வு செய்வதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அத்தனை ஆய்வுகளையும் மேற்கொண்டு, வட சென்னைப் பகுதியில், அந்தப் பகுதி மக்களை எந்தவிதத்திலும் பாதிக்காத வகையில் நிரந்தரத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. எச். ராஜா, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**49—**

## நிதி ஒதுக்குதல்

***19836—திரு. எச். ராஜா:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்தாவது நிதிக் குழுவின்கீழ், மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) பதினொன்றாவது நிதிக் குழுவின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(இ) மாற்றப்பட்டுள்ள வழிகாட்டு நெறிகளின்படி எத்தனை சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது? அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1995-2000 ஆண்டுகளுக்கு வரிப் பகிர்வில் ரூ.12,499.84 கோடியும், 2000-2005-க்கு பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரையின்



அடிப்படையில் ரூ.20,265 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிர்வாக மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கான மானியமாக ரூ.100 கோடியே 85 இலட்சம் 10-வது நிதிக் குழுவாலும், ரூ.251 கோடியே 86 இலட்சம் 11-வது நிதிக் குழுவாலும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.402.86 கோடியும், 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.659.49 கோடியும் ஆகும். இயற்கைச் சீற்ற நிவாரண நிதிக்கு மத்திய அரசின் பங்காக 10-வது நிதிக் குழுவிலே ரூ.234.33 கோடியும், 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ரூ.425.36 கோடியும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தமாக, 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.13,237.88 கோடியும், 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.21,601.71 கோடியும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-வது, 11-வது நிதிக் குழுக்களின் மூலமாக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகைகளை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தக் கேள்வியில், மாற்றப்பட்டுள்ள வழிகாட்டு நெறிகளின்படி எத்தனை சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி 6.637 சதவிகிதம் வரிப் பகிர்வு தர வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையில் அதை 5.385 சதவிகிதமாகக் குறைத்து விட்டனர். அதன் காரணமாக, ஒட்டுமொத்தமாக நமது தமிழக அரசுக்கு மட்டும் 5 ஆண்டு காலத்திற்கு ரூ.2,945 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு சராசரியாக ரூ.590 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் அந்த அடிப்படையில் நமக்கு அவர்கள் தர வேண்டிய பணத்தைத் தராமல் விட்டு விட்ட தொகை ரூ.590 கோடியாகும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை இருப்பதாகக் கூறி, மத்திய அரசிடம் 3,000 கோடி ரூபாய் நிதி கேட்கப்பட்டது. ஆனால், அந்த நிதி இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. மத்திய அரசைத் தட்டிக் கேட்டு, அந்த நிதியைப் பெற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் பாரதப் பிரதமர் தலைமையிலே நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில்கூட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நிலையினை மிகவும் அழுத்தமாகவும், ஆழமாகவும் எடுத்தியம்பி இருக்கிறார்கள். காங்கிரஸ் ஆளுகிற மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர்கள், குறிப்பாக இராஜஸ்தான், அதைப் போலவே மத்திய பிரதேச முதலமைச்சர்களின் சார்பில் அவர்களுடைய நிதியமைச்சர்களும், மற்றவர்களும் நமது மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த அணுகுமுறையை அங்கே பெரிதும் பாராட்டினார்கள் என்று கூற நான் விரும்புகிறேன். மைய அரசை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் செவிமடுக்காமல் இருக்கிறார்கள். அனைத்து மாநிலங்களும் ஒருங்கிணைந்து குரலெழுப்ப வேண்டிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. அதற்குப் புரட்சித் தலைவி அவர்கள் வித்திட்டிருக்கிறார்கள். அதில் நாளடைவில் வெற்றி கிட்டுமெனத் தமிழக அரசு நம்புகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் இயற்கைச் சீற்றத்திற்கு 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி 425 கோடி ரூபாய் கிடைக்கப்பெற்றது என்று சொன்னார்கள். இப்போது தமிழகத்திலே இயற்கைச் சீற்றத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கிற பெரிய வறட்சிக்கு நாம் நிதி உதவி கேட்டோம். மத்திய அரசு தமிழக அரசுக்கு ஏதாவது நிதி உதவி செய்திருக்கிறதா? இல்லையென்றால், அதைப் பெறுவதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி காரணமாக ஏற்பட்ட பாதிப்பை மைய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம். மைய அரசு அதற்கு இன்னும் நிதியொதுக்கீடு செய்யவில்லை. குழு வந்து ஆய்ந்து சென்றிருக்கிறது. விரைவில் மைய அரசு அதற்கு நிதி தரும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த ஆண்டுக்கு வர வேண்டிய 590 கோடி ரூபாய் வரவில்லை என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொன்னதுபோல், ஏற்கெனவே நிதி நெருக்கடி காரணமாகத் தத்தளித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் 3,000 கோடி ரூபாய் வேண்டுமென்று நமது அரசின் சார்பிலே மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதையும் கொடுக்கவில்லை. ஆகவே, நம்மை மிகவும் பாதித்த காவிரிப் பிரச்சினையில் நமது உணர்வுகளைத் தெரிவிப்பதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் சென்றதைப் போல, அனைத்துக் கட்சித் தலைவர்கள் இல்லையென்றாலும், சட்டசபையில் இடம் பெற்றிருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு, நம்முடைய நிதி நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்காகப் பிரதமரைச் சந்திப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் சார்பில், அரசினுடைய சார்பில் ஒட்டுமொத்த பிரதிநிதியாகத்தான், பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டியிருந்த முதலமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய கருத்தை மிகவும் அழுத்தமாக வலியுறுத்தியிருக்கிறார்கள். மைய அரசு இதற்குச் செவிமடுக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. நாம் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மைய அரசினுடைய முடிவு தெரிந்த பிறகு, இதுகுறித்து முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

[2002 அக்டோபர் 29

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் முன்னேறிய மாநிலங்களுக்கான நிதியைத்தான் மத்திய அரசாங்கம் குறைத்திருக்கிறது என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி முன்னேறிய மாநிலங்களினுடைய நிதியமைச்சர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து மத்திய அரசாங்கத்தின் பிரதமரைச் சந்தித்து, நிதியமைச்சரைச் சந்தித்து, அதிக அளவு நிதியைப் பெற நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை, மராட்டிய மாநிலத்தை, குஜராத் மாநிலத்தை, முன்னேறிய மாநிலங்களெனச் சில வரையறைகளுக்கு உட்பட்டு மைய அரசு அறிவித்திருக்கிறது. அந்த அடிப்படையிலே நமது மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும், per capita income அதிகமாக இருக்கிறது; Infrastructure facilities—அடிப்படை வசதிகள்—அதிகமாக இருக்கின்றன; மக்கள்தொகை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது; படித்தவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது; இதன் காரணமாக, தமிழகம் வளர்ந்த மாநிலம் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, 590 கோடி ரூபாயை இழக்க வேண்டிய ஒரு நிலையை நாம் அடைந்திருக்கிறோம். இது கூடாது என்று நாம் மைய அரசிடம் எடுத்துச் சொல்கிறோம். மாநிலங்களுக்கு அதிக பண அதிகாரம் தர வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை மைய அரசு நடைமுறைப்படுத்த, தக்க திருத்தங்களை அரசமைப்புச் சட்டத்திலேயே கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கையையும் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். 29.5 சதவீதம்தான் அனைத்து மாநிலங்களுக்கும் மைய அரசு, மாநிலங்களிலிருந்து அது பெறுகின்ற வருவாயிலிருந்து பகிர்ந்து தருகிறது. அந்த 29.5 சதவீதத்தில் தமிழகத்திற்குக் 1.56 சதவீதம்தான் கிடைக்கிறது.

உதாரணமாக, 100 ரூபாய் நமது மாநிலத்திலிருந்து மைய அரசுக்கு வருமானமாகச் செல்கிறபோது, அதிலே ஒரு ரூபாய் 56 காசுதான் மைய அரசு நமக்குத் திருப்பித் தருகிறது. இப்படிப் பண அதிகாரத்தை மைய அரசு தனது கையிலே வைத்துக்கொண்டு மாநிலங்களைப் புறக்கணிப்பதும், 35 சதவிகிதத்திற்கு மேல் வறுமைக் கோட்டிலே வாழ்கிற தமிழகத்தைப் போன்ற மாநிலத்தை முன்னேறிய மாநிலம் என்று சொல்லிப் புறக்கணிப்பதும் முறையற்றது என்பதை நாம் மைய அரசிடம் வலியுறுத்தி இருக்கிறோம்; பிரதம அமைச்சர் அவர்களிடத்திலும் வலியுறுத்தி இருக்கிறோம். முதலமைச்சர்கள் மாநாட்டிலும் வலியுறுத்தி இருக்கிறோம்.



2002 அக்டோபர் 29]

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது நிதிக் குழுவிலும், 11-வது நிதிக் குழுவிலும் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய 590 கோடி ரூபாய் இன்றைக்கு மத்திய அரசால் வழங்கப்படவில்லை. ஆனால், அதே நேரத்தில், தமிழகத்திற்கு வழங்கப்படக்கூடிய royalties மத்திய அரசால் எத்தனை கோடி வழங்கப்படுகிறது? எந்தெந்தத் தொழில் நிறுவனங்களிடமிருந்து நமக்கு royalty கிடைக்கிறது? royalty வழங்குகிறார்களா அல்லது வழங்கப்படவில்லையா என்று தங்களின் மூலமாக அமைச்சரிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி லிக்னைட் மூலமாக அவர்கள் நமக்கு royalty தர வேண்டும். ஆனால், நமக்கு 2 ஆண்டுகளுக்கு வரவேண்டிய royalty-ஐ ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே முன்பணமாகப் பெற்றுவிட்டார்கள். ஆனாலும், மைய அரசு நமக்குக் கொடுக்கின்ற royalty போதாது, அதை அதிகப்படுத்த வேண்டும் என்று மைய அரசை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிதி நமக்கு வராத ஒரு காலகட்டத்தில், தமிழகத்தில் அதிகமான வறட்சி இருக்கக்கூடிய நிலையை நாம் எடுத்துரைத்து, அதற்கான குழுவெல்லாம்கூட மத்தியிலேயிருந்து வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு, எந்த மாவட்டத்தையும் வறட்சி மாவட்டமாக அறிவிக்கவில்லை. குறிப்பாக, நம்முடைய தமிழகம் முழுமையுமே வறட்சி மாநிலம் என்ற அளவில் (மணியடிக்கப்பெற்றது) இல்லை, அறிவித்து இருந்தால்தான் நிதி கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

[2002 அக்டோபர் 29

வினா எண் 50, திரு. கே. எஸ். தென்னரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**50—**

## கலைக் கல்லூரி

***13152—திரு. கே. எஸ். தென்னரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவெடுத்து உள்ளது. எனவே, ஈரோட்டில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் எண்ணம் ஏதும் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.'

என்பது குறள். வள்ளுவரின் இந்த வாக்கிற்கேற்ப, கல்வி என்ற கல்வித் திட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் முனைப்போடு செயலாற்றுகின்ற வகையிலே, ஒரே நாளில் 3080-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பணி நியமனம் செய்தும், 67 கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களோடு இணைத்து, உறுப்புக் கல்லூரிகளாக்கியும், ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை பல்வேறு சாதனைகளைப் படைத்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகின்றேன். ஈரோடு சிக்கையா நாயக்கர் கல்லூரி என்பது 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பில், 72 ஆசிரியர்களையும், 44 பணியாளர்களையும், 1300 மாணவர்களையும்



2002 அக்டோபர் 29]

கொண்டு நடந்து வருகின்றது. தந்தை பெரியார் அவர்கள் இந்தக் கல்லூரியின் தலைவராக இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்படி இருக்கும்போது, ஒரு மாதத்திற்கு 16 இலட்சம் ரூபாயை அரசு இந்தக் கல்லூரிக்காகச் செலவு செய்துகொண்டிருக்கிறது. ஓர் ஆண்டுக்கு 1 கோடியே 92 இலட்சம் ரூபாயும், இதுபோக இன்னும் பல்வேறு இனச் செலவுகளுக்காக, ஓர் ஆண்டுக்கு 2 கோடி ரூபாயும் அரசு அந்தக் கல்லூரிக்காகச் செலவு செய்துகொண்டிருக்கிறது. அரசு இந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்வதன் மூலமாக ஒரு பைசாகூட அரசுக்குக் கூடுதல் செலவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். 1976-ல் இயற்றப்பட்ட சட்டத்தின் பிரிவு 14(ஏ)-ன்படி கோவை மாவட்டக் கல்வி இணை இயக்குநர் 19-12-2000-ல் கல்லூரி தனி அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார்கள். சட்டப்படி தனி அலுவலரின் பொறுப்பில் 2 ஆண்டுகள் மட்டுமே ஒரு கல்லூரி இருக்க முடியும். நீட்டிப்புச் செய்ய இயலாது என்று சட்டம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, 18-12-2002-உடன் 2 ஆண்டுகள் தனி அலுவலரின் பதவிக் காலம் முடிகிற நேரத்தில் அரசு இந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்வதனாலே, அரசுக்கும் இழப்பு இல்லை; பெரியார் மாவட்டத்தில் இருக்கும் மாணவர்களுக்கும், பெரியார் மாவட்ட மக்களுக்கும் ஒரு அரசுக் கல்லூரி கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்க வேண்டுமாய்த் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் கல்வித் துறையில் பல புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஈரோட்டில் உள்ள சிக்கையா நாயக்கர் கல்லூரியை அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஒரு வேண்டுகோளை வைத்து இருக்கிறார்கள். சிக்கையா நாயக்கர் கல்லூரியானது ஒரு தனியார் கல்லூரி, அது அரசினுடைய உதவி பெற்றுச் செயல்படுகிற ஒரு கல்லூரியாகும். அதிலேயுள்ள சில நிர்வாகச் சீர்கேடுகள் அதிகமானதன் காரணமாக, அரசானது ஒரு தனி அலுவலரை நியமித்து இப்போது அந்தக் கல்லூரியை நடத்தி

வருகிறது. இன்னும் 2 மாதங்களுக்குள்ளாக அந்தத் தனி அலுவலர் நியமன பதவிக் காலம் முடிவடைகிறது. ஆகவே, வினாவில் அவர் விரும்புவது: அதற்குப் பிறகு அரசு அந்தக் கல்லூரியை எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் வைக்கின்றார். இதில் பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *51*, திரு. எஸ்.எஸ். *திருநாவுக்கரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**51—**

**உயர்நிலைப் பள்ளி**

***19047—திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர்* கீழ்க்காணும் வினாக்களுக்கு *விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரத்தில் உள்ள சேக்குப்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு *உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், *எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலுள்ள சேக்குப்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசாணை (நிலை) எண் *97*, பள்ளிக் கல்வி, நாள் 4-7-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி மாநகரம், அரசியல், ஆன்மீகம், சுற்றுலா மற்றும் பட்டுக்குப் பெயர் பெற்றது என்பது அனைவருக்கும் தெரியும். இந்த மாநகரத்திலே ஏறக்குறைய 2 இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். பெண்களுக்காக அரசு சார்பிலே 2 உயர்நிலைப் பள்ளிகள்தான் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே,





பெண்கள் ஆண்களைப் போல் கல்வியிலே உயரவேண்டுமென்று திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றார்கள். ஆகையால், அந்த வகையிலே பெண்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கின்ற வகையிலே, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திய, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் அரசுக்குத் தொகுதியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி கூறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *52*, திரு. மு.பெ. *சாமிநாதன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

**52—**

**நீதிமன்றக் கட்டடம்**

***13142—திரு. மு.பெ. சாமிநாதன்:**

*மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்* கீழ்க்காணும் வினாக்களுக்கு *விடையளிப்பாரா—*

(அ) காங்கேயத்தில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் *உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், *எப்போது?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது.

(ஆ) மைய அரசிடமிருந்து கோரப்பட்ட நிதி பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினாவிற்கு அமைச்சர் அவர்கள், அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகக் கூறியிருக்கின்றார்கள்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பே காங்கேயத்தில் உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கட்டடம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையும் கிடைக்கப்பெற்றதாகத் தகவல் கிடைத்தது. ஆனால், தொடர்ந்து 1½ ஆண்டு காலதாமதம் ஆகியிருக்கிறது. அது விரைவில் அமைக்கப்படுமா? அந்தக் கட்டடத்தினுடைய மதிப்பு என்ன? நீதிபதிகளுக்கு அங்கே குடியிருப்புகள் அமைக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், வெள்ளக்கோவில், காங்கேயம் போன்ற பகுதிகளிலிருந்து சார்பு நீதிமன்றங்களுக்கு, தாராபுரம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டடம் அமையும்போது இந்த வளாகத்திலேயே, வாரத்தில் ஒரு நாளோ, இரண்டு நாளோ camp court—சார்பு நீதிமன்றமும்—அமைக்க அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் அமைக்கப்படவுள்ள கட்டடத்தினுடைய உத்தேச மதிப்பு ரூ. 1 கோடியே 78 இலட்சம். Constitution of Court and Construction of Court; ஒரு கோர்ட்டை நிர்மாணிக்க வேண்டுமென்றாலும்கூட, கோர்ட் கட்டடம் கட்ட வேண்டுமென்றாலும்கூட, மத்திய அரசினுடைய 50% நிதியுதவியுடன்தான் செய்யப்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பழைய கட்டடங்கள் எல்லாம் இடிக்கப்பட்டு, நல்ல நிலையிலே நீதிமன்றங்கள் இயங்கவேண்டுமென்கின்ற வகையிலே ஒரு கருத்துரு 140 கோடி ரூபாய்க்கு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, 7-5-2002 மற்றும் 11-7-2002 அன்று கடிதம் எழுதியும்கூட, இதுநாள் வரை மத்திய அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10-30

அதேபோன்று நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டித்தர 1993-94 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, அதாவது 31-12-2001 வரை நம்முடைய அரசு 116 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை கிட்டத்தட்ட 7, 8 வருடங்களில் நம்முடைய அரசு மொத்தம் 76 கோடி ரூபாய்





செலவு செய்துள்ளது. மத்திய அரசு ஆனால் இதுவரை 31 கோடி ரூபாயை மட்டும் release விடுவித்திருக்கிறது. எனவே, இன்னும் பழைய 1993-94-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணமே நமக்கு வந்து சேராத நிலைமை இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வது; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் சேர்ந்த கூட்டணி அரசாக மைய அரசு இருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய மண்ணின் மைந்தர்கள் அங்கே அமைச்சர்களாக இருக்கின்றார்கள். அவர்களை அங்கே வலியுறுத்தச் சொல்லி, நிதியைப் பெற்றுத் தந்தால் அந்தக் கருத்துரு இந்த ஆண்டே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 53, திரு. க.ரா. கந்தசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**53—**

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***19107—திரு. க.ரா. கந்தசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலத்தில் அருள்மிகு பன்னாரி மாரியம்மன் கோயில் சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பன்னாரி, அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில் சார்பில் கலைக் கல்லூரி கட்டுவதற்கோ, நடத்துவதற்கோ தற்சமயம் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 அக்டோபர் 29

**திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் சத்தியமங்கலம் அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில் நிதி ஆதாரத்தைக் கொண்டு இக்கோயிலுடைய சார்பாக கலை, அறிவியல் பண்பாட்டுக் கல்லூரி அமையவேண்டுமென்ற இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பினமாகக் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அதற்கு அனுமதியைப் பெற்று, அனுமதி அளிக்க வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பன்னாரி, அருள்மிகு பன்னாரி மாரியம்மன் கோயிலுக்குச் சொந்தமாக 23.13 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் கோயில், ஓய்வு விடுதிகள், கல்யாண மண்டபம், கருணை இல்லம், சேவார்த்திகள் மண்டபம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது போக, காலி இடம் மிகக் குறைவாகவே உள்ளது. இத்திருக்கோயிலுக்கு சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில், சுற்றுப் பகுதியில் நான்கு கலைக் கல்லூரிகள் உள்ளன. சத்தியமங்கலம் அருகில் ஆலத்துக்கோம்பையில் ஒரு பொறியியல் கல்லூரி அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சார்பில் கலைக் கல்லூரி துவக்கப்பட்டால், கல்லூரி கட்டுமானப் பணிகள், கல்லூரிப் பணியாளர்கள் சம்பளம், ஆய்வகம், விடுதிகள் ஆகியவற்றினை ஒவ்வொரு வருடமும் பராமரிக்கக்கூடிய அளவிற்குப் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால், முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அருகிலே கல்லூரிகள் இருந்தாலும், அரசினுடைய கல்லூரியோ, இந்து அறநிலையத் துறையினுடைய சார்புக் கல்லூரிகளோ இந்தப் பகுதிக்கு ஏதும் இல்லை. இப்பகுதி பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், மலைவாழ் மக்களும் மிக அதிகமாக இருக்கின்ற பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஒரு சிறப்பினமாகக் கருதி— அங்கு இடம் இல்லாவிட்டாலும், அருகில் வருவாய்த் துறையின் மூலம், அரசு புறம்போக்கு நிலங்கள்



2002 அக்டோபர் 29]

இருக்கின்றன. அதிலே அமைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது போதிய நிதி இல்லாத காரணத்தினால்தான் புதிய கல்லூரிகள் துவங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பன்னாரி மாரியம்மன் கோயில் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலே நன்றாக வருவாய் வரக்கூடிய ஒரு சிறந்த ஆலயம். அந்த ஆலயத்தினுடைய வருவாயைக் கொண்டே இந்தக் கல்லூரியைத் தாராளமாக அமைச்சர் அவர்கள் நடத்தலாம். ஒரு வேளை, உங்களுக்கு இதிலே அறிவியல் கல்லூரி, கலைக் கல்லூரி நடத்தக்கூடிய வாய்ப்பு இல்லாவிட்டாலும்கூட, அந்த இடத்திலே ஒரு இசைக் கல்லூரியையாவது, ஆன்மீகத்தை அந்த இடத்திலே பரப்புகின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையைப் பொறுத்த அளவிற்கு ஐந்து கல்லூரிகள், நூறு மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகள், தாங்கள் கேட்கக்கூடிய கல்லூரிகள், ஆகமக் கல்லூரிகள் நிறைய இருக்கின்றன; அங்கு வேண்டும் என்று மக்கள் நினைத்தால், பொது மக்கள் விரும்பினால், தாங்கள் கேட்கின்ற கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அறநிலையத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் *10-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் நிரம்ப இருக்கின்றன. நிதி நிலை சரியில்லை என்று அரசு சொல்லிக்கொண்டு இருந்தாலும், வடபழனி ஆண்டவர் திருக்கோயில் நிதி நிலை நன்றாக இருக்கிறது; மாத வருமானம் நல்ல நிலையிலே

இருக்கிறது. ஆகவே, அந்தக் கோயிலின் வருமானத்தைக் கொண்டு, அந்தக் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ஒரு கலைக் கல்லூரியை அரசு கட்டும் திட்டம் உண்டா? அது விரைவில் செயல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தந்த ஆலயங்களில் இருக்கின்ற நிதியை வைத்துத்தான் இப்போது ஆலயத்தில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கான மற்றும் அந்த ஆலயத்தினுடைய செலவுகள் சரிசெய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிக வருவாய் கிடைக்கின்ற நேரத்திலே அதுபற்றி யோசிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா எண் 54, திரு. ஆர். சாமி. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**54—**

## மகளிர் கலைக் கல்லூரி

***19522—திரு. ஆர். சாமி:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் தேவஸ்தானம் மூலம் மேலூர் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*அழகர் கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வசம் நிதி வசதி இல்லாத காரணத்தால், தற்போது திருக்கோயில் மூலம் மேலூர் தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்க இயலாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*



**திரு. ஆர். சாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கல்விக்கு, கல்லூரிக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற வேளையில், மதுரை மாவட்டத்திலே ஒரே ஒரு அரசு கலைக் கல்லூரிதான் இருக்கிறது. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் நிதியாதாரங்கள் நிறைய, நன்றாக இருக்கின்றன. அதேபோல, கல்லூரி அமைப்பதற்கும் அது இயற்கை வளம் வாய்ந்த இடமாக இருக்கின்ற காரணத்தினால், வசதியுள்ளவர்கள் எல்லாம் ஊட்டி, ஏற்காடு போன்ற இடங்களிலுள்ள கல்லூரிகளுக்குச் சென்று படித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், ஏழையெளிய, படிக்கின்ற மாணவர்கள் கல்லூரிகளில் படிக்கின்ற அளவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் நிதியிலிருந்து கல்லூரியை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லாமல், யோசித்து, இருக்கின்ற நிதியிலிருந்து கட்டுவதற்குப் பரிசீலனை செய்வாரா என்று மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருள்மிகு கள்ளழகர் கோயிலில் நன்செய் நிலம் 56 ஏக்கர் 25 சென்ட் இருக்கிறது. புன்செய் நிலம் 28 ஏக்கர் 53 சென்ட் இருக்கிறது. தரிசாக 35 ஏக்கர் 51 சென்ட் இருக்கிறது. ஆக, மொத்தம் 156 ஏக்கர் நிலம் இருக்கிறது. இருந்தாலும் இத்திருக்கோயிலுக்குப் பெரும்பாலும் உண்டியல், தற்காலிகக் கடைகள், நிரந்தரக் கடைகள் மூலம் வருமானம் கிடைக்கிறது. 1411 ஆம் பசலி சகாயத் தொகை வருமானம் ரூ.2 கோடியே 27 இலட்சத்து 17 ஆயிரம். மேற்படி திருக்கோயில் சார்பில் அருள்மிகு சுந்தரராஜா துவக்கப் பள்ளியும் மற்றும் உயர்நிலைப் பள்ளியும் தற்சமயம் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, பெண்களுக்கான கருணை இல்லம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் 180 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு மாதச் சம்பளமாக ரூ.4 இலட்சத்து 16 ஆயிரத்து 761 வழங்கப்படுகிறது. இது தவிர, மின் கட்டணம், ஆலய படித்தரம் வகைக்கும், அன்றாட நிர்வாகச் செலவுகளுக்கும் ஆலய உண்டியல் வருமானத்தையே நம்ப வேண்டியுள்ளது. எனவே, தற்சமயம் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க இயலாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2002 அக்டோபர் 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் கூறிய கருத்துக்கு நானும் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் நிலைமைகளைச் சொன்னாலும்கூட, மீண்டும் அதுகுறித்து—கள்ளழகர் கோயிலினுடைய வருமானம் பற்றி இன்னொரு ஆய்வுகூட நடத்துங்கள். வரக்கூடிய கணக்கைச் சொல்லியிருக்கிறீர்கள். எனக்குத் தெரியும். நன்றாகத்தான் வருமானம் இருக்கிறது. அங்கே மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்யுங்கள். இது ஒரு தேவையான கோரிக்கை என்பதைச் சொல்லி, மீண்டும் அமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வாயிலாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளழகர் கோயிலில் திருமண மண்டபம் கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற சாலைகளைச் செப்பனிடுவதற்குப் பல இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அங்கே இருக்கின்ற கட்டடங்களையெல்லாம் புதுப்பிப்பதற்கு பல இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இதையெல்லாம் முடித்துவிட்டு, அதற்குப் பிறகு நிதி வசதி இருந்தால், யோசிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், நிதி நிலை சரியாக இருந்தால் அதுபற்றி ஆலோசிக்கலாம் என்று இன்றைக்கு மட்டுமல்ல, நேற்றைக்கு முன்தினம்கூட அவர்கள் பதில் அளித்தார்கள். மற்ற துறைகள் சொல்வதைப் பற்றிக்கூட எனக்குக் கவலையில்லை. ஆனால், அறநிலையத் துறையை எடுத்துக் கொண்டால், நேற்று முன்தினம்கூட பதில் அளிக்கும்போது, அந்த இடங்களைக் கண்டறிந்து அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். சென்னையிலே தலைமை அலுவலகத்திலே ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டு இருக்கிறார். அது போதுமானதாக இருக்குமா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய ஊரான திருப்புவனத்திலே ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்குப் பல கோடி ரூபாய்



2002 அக்டோபர் 29]

மதிப்புள்ள சொத்துகள் இருக்கின்றன. அவற்றை செல்வாக்குப் பெற்றவர்கள், ஏறத்தாழ 40, 50 ஆண்டுகளாகக் கைப்பற்றி வாடகைக்கு விட்டுப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு அதிகாரி நியமனம் என்பது மட்டுமல்ல, ஒவ்வொரு region-ஆகக்கூட ஒவ்வொரு அதிகாரியை நியமித்து, அப்படிப்பட்ட நிலங்களை மீட்பதன் மூலமாக, தமிழக அரசையே நடத்தக்கூடிய அளவுக்குப் பணம் வரக்கூடிய அளவுக்குச் சொத்துகள் இருக்கின்றன. அதை வேகப்படுத்தி, அப்படிப்பட்ட இடங்களைக் கைப்பற்றி விற்பதன் மூலமாக, மற்ற துறைகளுக்கு வழிகாட்டியாக அறநிலையத் துறை விளங்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை விரைவுபடுத்துவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கிணங்க, தற்சமயம் தமிழ்நாட்டில் இருக்கிற 4,71,000 ஏக்கருக்கு மேற்பட்ட நஞ்சை, புஞ்சை நிலங்களை, எங்கெங்கு அவை இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் தனி அதிகாரி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சில இடங்களில் வேண்டுமென்றே நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். தற்போது பல இடங்களில் அப்படிப்பட்ட பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை அறநிலையத் துறை பெற உச்ச நீதிமன்றத்திலிருந்து சாதகமான தீர்ப்புகள் வந்திருக்கின்றன. அதன் அடிப்படையில், எங்கெங்கு அத்தகைய நிலங்கள் இருக்கின்றனவோ, அவை கண்டறியப்பட்டு, கூடிய விரைவில் அவற்றை அறநிலையத் துறைக்குத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக, புகழ்பெற்ற கோயில்கள் மூலமாக வரக்கூடிய உபரி வருமானத்தைத்

கொண்டு கல்வி நிலையங்களைத் தொடங்கி, நாட்டிலே படிப்பறிவு இல்லாத நிலையைப் போக்குவதற்கான முயற்சி குறித்தான கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், எல்லாக் கேள்விகளுக்கும். நிதி நிலை சரியில்லை, எனவே இயலவில்லை என்றும், வருகிற வருமானங்கள் ஆலயங்களைப் பராமரிப்பதற்கும், பணியாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்குமே போதுமானதாக இருக்கின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், எல்லாக் கோயில்களும் இதே நிலையில்தான் இருக்கின்றனவா? உபரி வருமானம் உள்ள — அதிகபட்ச வருமானங்களைக் கொண்டு கல்வி நிலையங்களைத் தொடங்குவதற்குப் போதுமான வருமானம் உள்ள— கோயில்கள் தமிழ்நாட்டில் எத்தனை இருக்கின்றன? அப்படியானால், அதிகப்படியான வருமானத்தைக் கொண்ட கோயில்கள் இருக்கிற இடங்களில் கல்வி நிலையங்களைத் தொடங்குகிற கருத்துரு அரசிடம் இருக்கிறதா? அந்த அடிப்படையில் பார்த்தால், என்னுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிற அருணாசலேஸ்வரர் கோயில் இன்றைக்கு உலகப் பிரசித்தி பெற்ற கோயிலாக மாறியிருக்கிறது. மாதந்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் அங்கே வந்து குவிகிறார்கள். அவர்களுக்கு என்று சிறப்பாகத் தனி இரயிலையே இப்போது இயக்கக்கூடிய அளவுக்கு (மணியடிக்கப்பெற்றது) — மூலக் கேள்விக்குத் தொடர்புடையதுதான், அப்படி இரயில்களை இயக்குகிற அளவுக்கு .... இன்றைக்கு இரயிலிலே வருவதற்கு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இருக்கிறதா?

**திரு. க. முருகவேல் ராஜன்:** மூலக் கேள்விக்குத் தொடர்புடையது தான். எனவே அந்த வகையில், அதிக வருமானத்தைத் தரக்கூடிய அருணாசலேஸ்வரர் கோயிலின் வருமானத்தைக் கொண்டு, என்னுடைய தொகுதியான வந்தவாசியில் கல்லூரியே கிடையாது, கல்லூரி இல்லாத ஒரு தொகுதி த்மிழ்நாட்டில் இருக்குமென்று சொன்னால், அது வந்தவாசி தொகுதிதான் என்ற அந்த அடிப்படையில் அங்கே பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விக்கு, தனிக் கேள்வி போட்டால் சரியான பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், இன்னொன்றை நான் சொல்கிறேன். திருவண்ணாமலையில் உள்ள அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலைப் பற்றிச் சொன்னார்கள். திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலை, புராதனச் சின்னங்கள் பாதுகாப்பு என்ற பெயரில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொல்பொருள் துறை கையகப்படுத்த அறிவிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட வேண்டிய ஆட்சேபனைகளை 20-11-2002 ஆம் தேதிக்குள் அந்தத் துறைக்கு அனுப்பவேண்டுமென்று தாக்கீதுகளை அனுப்பியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து, 20-11-2002 ஆம் தேதிக்குள் மனுத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் பெய்த மழையின் காரணமாக, மதுரை கள்ளழகர் கோயில் சுற்றுச்சுவர் எல்லாம் இடிந்து விழுந்துவிட்டதாக இன்றைக்குப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அந்தச் சுவரை மீண்டும் கட்டுவதற்கு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 22-10-2002 அன்று காலை சுமார் 9-00 மணியளவில், பெய்த பலத்த மழையின் காரணமாக, மதுரை மாவட்டம், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் — அழகர் கோயில் — மதில் சுவர் சுமார் 10 அடி தூரம் இடிந்து விழுந்து விட்டது. பள்ளிக்கூட மாணவர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. மதில் சுவர் சாலைப் பக்கமாக இடிந்து விழுந்தமையால் அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களில் இருந்த நான்கு நபர்கள் அடிபட்டு, மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கே சென்ற நேரத்தில், பெரிய கருப்பன் என்பவர் மரணமடைந்துவிட்டார். மீதி மூன்று பேர், பாண்டி—

வயது 22 — பெரிய அழகிரி — வயது 33— மற்றும் காத்தம்மாள்—வயது 40—என்ற பெண் ஆகிய மூன்று பேர் அடிபட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், மரணமடைந்த பெரிய கருப்பன் என்பவர் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே காயம் அடைந்த 3 பேர்களுக்கும் 15 ஆயிரம் ரூபாய் வீதம் இப்போது நிதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 55, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

(முற்பகல் 10-45

**55—**

## செவிலியர் பயிற்சி

***8565—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதவிச் செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளராகப் பணிபுரிபவர்களுக்குப் பகுதி நேரச் செவிலியர் பணிக்கான பயிற்சி 6 மாதம் சென்னையில் அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1977-ல் பணியில் சேர்ந்தவர்களுக்கு எப்போது பயிற்சி அளிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) உதவிச் செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளராகப் பணிபுரிபவர்களுக்குப் பகுதி நேரச் செவிலியர் பணிக்கான 6 மாத காலப் பயிற்சி, சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள பெண்களுக்கான பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சிப் பள்ளியில் அளிக்கப்பட்டு வருகிறது.





(ஆ) 1977 வரை பணியில் சேர்ந்தவர்கள், பிப்ரவரி 2002-ல் தொடங்கப்பட்ட பயிற்சியில் சேர்க்கப்பட்டுவிட்டனர்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதவிச் செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளராகப் பணிபுரிபவர்களுக்குப் பகுதி நேரச் செவிலியர் பணிக்கான பயிற்சி 6 மாதம் சென்னையில் அளிக்கப்படுகிறதா? ஆம் எனில், 1977-ல் பணியில் சேர்ந்தவர்களுக்கு எப்போது பயிற்சி அளிக்கப்படும் என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்,

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உதவிச் செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர் பயிற்சி பெறுபவர்கள், இப்போது சென்னையிலே எத்தனை பேர், அவர்களுக்கு ஆகக்கூடிய செலவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சியானது ஆண்டுக்கு இரண்டு தொகுதிகள் என்ற வகையில் அளிக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு தொகுதிக்கு 25 பேர் வீதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆக மொத்தம், வருடத்திற்கு 50 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு மாதச் சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்காக மாதம் 250 ரூபாய் படியாகவும்—பயிற்சிப் படியாகவும்—வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலே, வருடத்திற்கு 50 பேர் பயிற்சி கொடுக்கப்படுகிறார்கள். பயிற்சி முடித்த பிறகு, அவர்களுக்கு இந்த அடிப்படையிலே பதவி உயர்வும் கிடைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**56—**

[2002 அக்டோபர் 29

## ஆரம்ப சுகாதார நிலையம்

***15982—திரு. நா. சந்திரமோகன்.**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியை மையமாகக் கொண்டு, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள புதுப்பட்டினம் என்ற ஊராட்சி, கடற்கரையோரம் ஒட்டியுள்ள பகுதியாகும். அங்கு பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். புதுப்பட்டினம் ஊராட்சியைச் சுற்றிலும், தாண்டவன்குளம், கொடியம்பாளையம் மற்றும் புளியந்துறை ஊராட்சிகள் உள்ளன. இவற்றையும் சேர்த்து, மொத்த மக்கள்தொகை 30 ஆயிரத்திற்கும் மேல் உள்ளது. அங்கு வசிக்கிற மக்களுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டாலும் மற்றும் மகளிருக்குப் பிரசவ வலி ஏற்பட்டாலும், வேறு நோய்கள் ஏற்பட்டாலும், சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சீர்காழி சென்று மருத்துவம் பார்க்க வேண்டிய கஷ்டமான சூழ்நிலை உள்ளது. குறிப்பாக, கொடியம்பாளையம் என்ற ஊராட்சியில் 2000-க்கும் மேல் மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் இருக்கும் இடம்; 3 பக்கங்கள் கொள்ளிடம் ஆற்றாலும், ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்ட தீவில் மீனவர்கள் வசித்து வருகிறார்கள்.



2002 அக்டோபர் 29]

அவர்கள் மருத்துவமனை செல்ல வேண்டுமென்றால், கொள்ளிடம் ஆற்றில் படகு மூலமாக வந்து, கரை இறங்கிய பின்பு 13 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நல்லூர் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல், புதுப்பட்டினம், தாண்டவன்குளம், புளியந்துறை கிராம மக்கள், கொள்ளிடம் அல்லது நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவம் பார்க்கச் செல்ல வேண்டுமென்றால், கடற்கரையோரம் அருகிலுள்ள உப்பனாற்றில் படகு மூலமாகத்தான் கரையைக் கடந்து, அதன் பிறகு, மருத்துவம் பார்க்க சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக மகளிர், பிரசவம் பார்ப்பதற்கு மிகவும் கடினமான சூழ்நிலை உள்ளது. மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், எனது சீர்காழி தொகுதியிலுள்ள புதுப்பட்டினத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் மற்றும் கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்கும், அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஒன்றியத்தில் ஏற்கெனவே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சந்திரமோகன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, unserved and unreachable area-க்களுக்காகவே பிரத்தியேகமாக மருத்துவர், மருந்துகள், பரிசோதனை வசதி உட்பட அனைத்து வசதிகளுடன்கூடிய mobile dispensary—நடமாடும் மருந்தகங்கள்—அந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு, குறிப்பாக மீனவ சமுதாயம், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிகளுக்கு மருத்துவ வசதி கிடைக்கிற வகையில் இங்கே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்த வகையிலே, புதுப்பட்டினத்தை மையமாகக் கொண்டு விரைவில் மருத்துவக் குழு அடங்கிய அந்த ஊர்திகள் அங்கு அனுப்பப்படும். வாரந்தோறும் தொடர்ந்து அந்தப் பகுதிகளுக்கு அந்த ஊர்தி சென்று,

அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவச் சேவை அளிக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாகத் தரம் உயர்த்துமாறு கேட்டு இருக்கிறார்கள். கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அந்த நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்று, விரைவிலே தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ நிலையமாக அங்கே ஏற்பட இருக்கிறது என்பதையும், அந்த மருத்துவ நிலையம் விரிவுபடுத்தப்படுகின்றபோது, எக்ஸ்-ரே வசதி, ஆபரேஷன் செய்கிற வசதி, ஆகிய அனைத்தும் அங்கே கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 57, திரு கே.கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**57—**

## கட்டடம்

***7724—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள முடுக்கன்குளம் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.



**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, வரும் நிதி ஆண்டிலேயாவது கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தொடர்ந்து 3 ஆண்டுகள் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இலாபத்திலே இயங்குகிற நேரத்திலே உறுப்பினருடைய கோரிக்கையை அரசு யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 58, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**58—**

## விவசாயிகளுக்கு நிவாரணம்

***17918—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை மற்றும் அதனைச் சார்ந்த விவசாய மக்கள் (2002-ல்) சமீபத்தில் ஏற்பட்ட மழையினால் பாதிக்கப்பட்டதால், அவர்களுக்கு நிவாரணம் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். 2002 பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் பருவம் மாறிப் பெய்த கன மழையால் சேதமடைந்த நெல் மற்றும் இதர பயிர்களுக்காக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் மற்றும் இதர சேதாரங்களைச் சீர்செய்யவும் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு ரூ.49 கோடி இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து

[2002 அக்டோபர் 29

அரசு வழங்கியுள்ளது. மயிலாடுதுறை வட்டத்திலே 116 கிராமங்களிலே நெல் பயிரிட்ட 15,084 விவசாயிகளும், பருப்பு வகைப் பயிர்கள் பயிரிட்ட 13,263 விவசாயிகளும் பாதிப்பிற்குள்ளானார்கள். நெல் 5413.63.0 ஹெக்டேர் பரப்பிலும், உளுந்து போன்ற பருப்பு வகைப் பயிர்கள் 9564.99.0 ஹெக்டேர் பரப்பிலும் பாதிப்படைந்துள்ளன. இவ்வட்டத்தில் பாதிக்கப்பட்ட, நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.1,35,46,288/-ம், உளுந்து போன்ற பருப்பு வகைப் பயிர்கள் பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.57,38,994/-ம் முதன்மை விவசாயக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில்களைத் தந்த அமைச்சர் அவர்களுக்கும், நிவாரண உதவி தந்த தமிழக அரசுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கேள்வி, பருவம் தவறிப் பெய்த மழையினால் வந்த பாதிப்புகளுக்காகக் கேட்கப்பட்ட கேள்வி, அதன் பிறகு வறட்சி, அதன் பிறகு கர்நாடக காங்கிரஸ் காவிரியில் தண்ணீர் தர மறுத்ததால் வந்த விளைவு; இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்களாலும், செயற்கையாக கர்நாடக காங்கிரஸ் அரசு போட்ட முட்டுக்கட்டையாலும் என்னுடைய தொகுதி விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த நிவாரணத் தொகை வழங்குகிறபோது, சரியாகக் கணக்கு எடுக்கப்படாமல் எங்கள் பகுதியில் பல்வேறு போராட்டங்கள் நடந்தன. அகாகிரிவுடை என்ற பஞ்சாயத்திலே தலைவர் உள்ளிட்ட, ஆளுங்கட்சி உள்ளிட்ட அத்தனை கட்சிக்காரர்களும், நிவாரணத் தொகை போதவில்லை என்றும், சரியான கணக்கு எடுக்கவில்லை என்றும் சொல்லி, அந்தக் குறைபாடுகளும் அப்போது இருந்தன. வட்டாட்சியரும், கோட்டாட்சியரும் நேரில் விசாரித்து, குறைகளைத் தீர்வு செய்வதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கணக்கெடுப்பிலே விடுபட்டவர்களுக்கு மீண்டும் நிவாரணத் தொகை கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை வட்டத்திலே மொத்தம் 116 கிராமங்கள் உள்ளன. நெல் பயிரிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளை,



2002 அக்டோபர் 29]

ஆங்காங்கே இருக்கக்கூடிய வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாகவும், வேளாண்மைத் துறை அலுவலர்கள் மூலமாகவும் தீர விசாரித்து, அவர்களுடைய பட்டாக்களை எல்லாம்—அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுடைய கூட்டங்களை எல்லாம் கூட்டி—பார்த்து அந்த அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரையிலே யாருக்கும் நிவாரணம் கொடுக்கவில்லை என்ற குறை அங்கிருந்து வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *59,* திரு. கே.என். சேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**59—**

## புதிய வட்டம்

***18749—திரு. கே.என். சேகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலுமே ஒரு தாலுகா அலுவலகம் இயங்கி வருகிறது. ஆனால் திருவெறும்பூர், திருச்சி-1, திருச்சி-2 ஆகிய இந்த மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே தாலுகாவாக, பெரிய தாலுகாவாக திருச்சி தாலுகா அலுவலகம் இயங்கி வருகிறது. திருவெறும்பூர் தொகுதியைப் பொறுத்த வரையில், 24 ஊராட்சிகள், மூன்று பேரூராட்சிகள், திருச்சி மாநகராட்சியின் 60 வார்டுகளில் 12 வார்டுகள் அடங்கிய மிகப்

பெரிய பகுதியாக உள்ளது; 2,60,000-க்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட மிகப் பெரிய தொகுதியாகும். அதுமட்டுமல்லாமல், நிறைய கிராமப்புறங்களும் உள்ளன. பொன்மலை இரயில்வே தொழிற்சாலை, பி.எச்.இ.எல். தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, H.A.P.P. தொழிற்சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகளும், சிட்கோ, டான்சி போன்ற தொழில் வளாகங்களும், பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகம், மண்டலப் பொறியியல் கல்லூரி, அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி, அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் இரண்டு அரசு கலைக் கல்லூரிகளும், தனியார் நடத்துகின்ற கல்வி நிறுவனங்களும், அதேபோன்று திருச்சி விமான நிலையமும் எனது தொகுதியில் இயங்கி வருகின்றன.

கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களும், தொழிலாளர்களும், திருச்சியில் இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 25 கிலோ மீட்டருக்கு மேல் பயணம் செய்வதுடன், அதிகப் பணமும், நேரமும் செலவாகி, அதிக சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, பொது மக்களுடைய நலனைக் கருதியும், நிர்வாக வசதியைக் கருத்தில் கொண்டும், அதிக மக்கள்தொகையையும், அதிக நிலப்பரப்பையும் கொண்ட திருவெறும்பூர் தொகுதியை திருச்சி தாலுகாவிலிருந்து தனியாகப் பிரித்து, திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டமாக அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி வட்டத்திலிருந்து பிரித்து திருவெறும்பூரைத் தனி வட்டமாக ஆக்க வேண்டுமென்று உறுப்பினர் கோரிக்கை வைத்து இருக்கிறார். ஆனால், கிராமங்களுடைய எண்ணிக்கை 24தான் இருக்கின்றது. ஆனால், வருவாய்த் துறை மூலமாக ஒரு அளவு வைத்திருக்கிறோம். குறித்த நிலையிலே, அதாவது கிராமங்களின் எண்ணிக்கை 70 ஆக இருந்தால்தான், அந்த வட்டத்தைப் பிரிக்க முடியும். அதுமட்டுமல்லாமல், திருவெறும்பூர், திருச்சிக்கு அருகில் இருக்கிறது. எனவே, அவ்வட்டத்தை இப்போது பிரிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.





**60—**

## செஸ் நிதி

***18388—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி விவசாயிகளிடம் பெறப்படும் செஸ் நிதியை, அந்தப் பணம் செலுத்தும் பகுதி விவசாயிகளுக்கே பிரித்து வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியிலே நீண்ட காலப் பிரச்சினையாக இருந்த ராஜவாய்க்கால் பிரச்சினைக்காக, ராஜவாய்க்கால் நீரேற்றுப் பாசன விவசாயிகளிடம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1750 வசூல் செய்து, ரூ.95,71,000/- செலவில் அந்தப் பணியை deposit work-ஆகச் செய்வதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது சார்பாகவும், ராஜவாய்க்கால் கடைமடைப் பகுதி விவசாயிகள் சார்பாகவும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி ராஜவாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் விவசாயிகளிடம் Irrigation Cess Fund என்கிற நிதியாக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.50 வீதம் வசூல் செய்து, அரசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பொதுப் பணித் துறை ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டத்தின் இருப்புக் கணக்கில், வைக்கப்பட்டுச் செலவிடப்படுவதாகத் தெரிகிறது. மேற்படி வாய்க்கால் விவசாயிகளிடம் வசூல் செய்யப்படும் செஸ் நிதியானது, தமிழகத்திலுள்ள மற்ற வாய்க்கால் விவசாயிகளிடம் வசூல் செய்யப்படுகிறதா? ஒவ்வொரு

[2002 அக்டோபர் 29

ஆண்டும் வாய்க்கால் பராமரிப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் அரசு நிதியுடன் சேர்ந்து, அந்தந்த வாய்க்கால்களுக்காக வசூல் செய்யப்படும் செஸ் நிதியை அந்தந்த வாய்க்கால்களுக்கே செலவிட அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 61, திரு. ப.வெ. தாமோதிரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**61—**

## சத்துணவுக் கூடம்

***4394—திரு. ப.வெ. தாமோதிரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், சின்னவாளவாடி கிராமத்தில் சத்துணவுக் கூடம் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சின்னவாளவாடி கிராமத்திற்கும், பெரியவாளவாடி கிராமத்திற்கும் இடையில் உள்ள வாளவாடி ஆரம்பப் பள்ளியில் சத்துணவு மையம் இயங்கி வருகிறது. சின்னவாளவாடி கிராமத்தில் பள்ளிகள் எதுவும் தனியாக இல்லாததால், அங்கு புதிய சத்துணவு மையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



2002 அக்டோபர் 29]

**திரு. ப.வெ. தாமோதிரன்:** இந்தியாவின் நெற்களஞ்சியம் என்று சொல்லக்கூடிய தஞ்சைத் தரணிக்கு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, இன்று வெற்றி கண்டு காவிரியில் தண்ணீர் திறந்துவிட ஆசி வழங்கிய எங்களுடைய அன்புத் தெய்வம், தண்ணீரைத் திறந்துவிட்டதோடு அல்லாமல், அந்தப் பகுதியிலே வாழ்கின்ற 10 இலட்சம் குடும்பங்களுக்கு தீபாவளிப் பரிசாக 21 கோடி ரூபாயை உடனடியாகக் கொடுத்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை மக்களுடைய நல்வாழ்விற்குத் திட்டங்களைத் தீட்டி, இன்று அரிசிக்கு முழுமையாக வரியினை ரத்து செய்து தமிழக மக்களின் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் பெற்று சிங்க நடை போட்டு வரும் எங்களுடைய அன்புத் தெய்வம், காவிரித் தாயே, உலகம் போற்றும் உத்தமத் தலைவியே, தமிழகம் போற்றும் தங்கத் தலைவியே, தங்களுக்கு எங்களுடைய சக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலேயும், எங்கள் பொங்கலூர் தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னவாளவாடி கிராமத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலே 1994 ஆம் ஆண்டு கட்டப்பட்டு இன்று பழுதடைந்த நிலையிலே உள்ள அந்தச் சத்துணவுக் கூடத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்னுரிமை கொடுத்து, உடனடியாகக் கட்டித் தர ஆவன செய்யப்படுமா என அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சரிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடம் பழுதடைந்து இருந்தால், அரசினுடைய கவனத்திற்கு வந்தால், உடனடியாகச் சரி செய்வதற்குரிய அத்தனை பணிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**62—** [2002 அக்டோபர் 29

## மாணவர் விடுதி

***23537—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி தொகுதி, சேயூர் பகுதியில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி நடப்பு நிதியாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு தீபாவளிப் பரிசாக வாரி வழங்கிய வள்ளல் பெருமான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும், அம்மா அவர்களின் பாத மலர்களில் சமர்ப்பிக்கிறேன்.

ஆட்சியின் மீதான வரியை அடியோடு ரத்து செய்து தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டு இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்னும் 10 ஆண்டுகளில் தமிழகத்தில் கல்லாதவர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்க, கல்வியின் நலனைப் பேணிப் பாதுகாப்பதற்கு, பல்வேறு கோணங்களில், பல்வேறு நலத் திட்டங்களை வாரி வழங்கி உள்ளார்கள். தமிழகம் முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச மிதிவண்டித் திட்டத்தை அமல்படுத்தி, பல்லாயிரக்கணக்கான மிதி வண்டிகளை வாரி வழங்கி உள்ளார்கள். அந்த மாணவிகள் இறுதி வரை இலவசமாகப் படிக்கும் திட்டத்தையும் அமல்படுத்தி உள்ளார்கள். எனவே, அதற்கு எனது நன்றியை, அம்மா அவர்களின் பாத மலர்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன். கோவை மாவட்டத்திலேயே



2002 அக்டோபர் 29]

அதிகமாக ஆதிதிராவிட மக்கள் வசித்துக்கொண்டு இருக்கக்கூடிய அவிநாசி தொகுதியில் 500-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் மாணவ, மாணவியர்கள் பயின்று வரும் சேயூர் பகுதியிலே அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் ஆதிதிராவிடர் நல விடுதி நடப்பு நிதியாண்டில் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் 1,076 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் சுமார் 77,500 மாணவ, மாணவியர்கள் தங்கி உள்ளனர். முந்தைய தி.மு.க. ஆட்சியில் உணவுக் கட்டணமாக மாணவர் ஒருவருக்கு மாதம் ரூ. 225 வழங்கப்பட்டது. அதன் மொத்தச் செலவு ரூ. 17.43 கோடி ஆகும். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பின்பு மாணவ, மாணவியர்களுக்குத் தரமான உணவு வழங்க வேண்டும் என்று, உணவுக் கட்டணத்தை ஒருவருக்கு மாதம் ரூ.300 ஆக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். தற்போது உணவுக்காக மொத்தமாக ஆகும் செலவு ரூ.23.25 கோடியாகும்.

முற்பகல் 11-05

கடந்த தி.மு.க. ஆட்சியில் வழங்கியதைவிடக் கூடுதலாக, உணவுக் கட்டணமாக ரூ.5.82 கோடி செலவாகிறது. இதுமட்டுமின்றி, பழங்குடி மாணவ, மாணவியருக்கு 26 விடுதிகள்; மேலும் 247 உண்டு உறைவிடப் பள்ளிகள்; அதில் 17,300 மாணவ, மாணவியர்கள் தங்கியுள்ளனர். கடந்த தி.மு.க. ஆட்சியிலே அதற்கான செலவு ரூ.3.89 கோடி. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, உணவுக் கட்டணத்தைக் கூட்டியதால், உயர்த்தியதால், தற்போது ரூ.5.19 கோடியாகச் செலவு ஆகிறது. இதனால் கடந்த ஆட்சியைவிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ரூ.1.30 கோடி கூடுதலாகச் செலவு செய்யப்படுகிறது. ஆனால், விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு நல்ல தரமான உணவு வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நிதி நெருக்கடி இருக்கின்றபோதும், அம்மா அவர்கள் ரூ. 7.34 கோடி கூடுதலாக ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். கோவை மாவட்டத்தில் 36 விடுதிகள் உள்ளன. அதில் 26 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவிநாசி தொகுதியில் சொக்கம்பாளையத்தில் மாணவர்

[2002 அக்டோபர் 29

விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும், அவினாசியில் ஒரு மாணவர் விடுதியும், ஆக மொத்தம் 3 விடுதிகளும் தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற விடுதிகளைச் சொந்தக் கட்டடங்களுக்கு மாற்ற வேண்டும். மேலும் விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற அரசாக விளங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு 1991-96-க்கு இடைப்பட்ட 5 ஆண்டு கால ஆட்சியில் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் எவ்வளவு வழங்கப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**63—**

## கட்டடம்

***6966—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் உதவி செயற் பொறியாளர் அலுவலக வளாகத்தில் உதவிப் பொறியாளர்கள் அலுவலகம் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? சொந்தக் கட்டடம் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவது ஏன்?

(ஆ) வாடகைக் கட்டடங்களுக்குத் தற்போது வழங்கி வரும் வாடகை எவ்வளவு?



2002 அக்டோபர் 29]

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குலசேகரம் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் அமைந்துள்ள இடம் பொதுப் பணித் துறையிடம் உள்ளது. மின் வாரியத்திற்கென நிலம் ஒதுக்குமாறு பொதுப் பணித் துறையிடம் கோரப்பட்டுள்ளது. இடம் ஒதுக்கப்பட்ட பிறகு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

குலசேகரம், உதவி செயற் பொறியாளர் அலுவலகத்திற்கு மாதம் ஐந்து ரூபாயும், நகர மற்றும் ஊரக உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களுக்கு மாதம் ரூ. 3100/- வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செருப்பாலூரில் ஏற்கெனவே உதவிப் பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கு, பொதுப் பணித் துறை இடத்தை ஒதுக்கிக் கொடுத்து, அங்கே கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அதே வளாகத்திலே, மேலும் உதவிப் பொறியாளர்கள் அலுவலகம் கட்டுவதற்கான இடம் இருக்கிறது, வசதி இருக்கிறது. ஆகவே, அங்கே இப்போது வாடகைக்கு இருந்து கொண்டிருக்கின்ற அலுவலகங்களை, சொந்தமான இடத்திற்கு மாற்றுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, விரைவிலே கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் பிரத்தியேகக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**64—**

## கதர் கிராமத் தொழில்கள்

***16353—திரு. சோ. இராசேந்திரன்:**

*மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் கிராமம் அருகில் உள்ள கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கிராமத் தொழில்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) தற்போது வாரியத்தின்கீழ் புதியதாகக் கதர் கிராமத் தொழில்கள் ஆரம்பிக்கும் நோக்கம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. புரட்சிக் கவி பாரதி பிறந்த எட்டயபுரத்திற்கு அருகில் உள்ள இளம்புவனம் கிராமம், எட்டயபுரம் தாலுகா பகுதிக்கு உட்பட்டது. பின்தங்கிய பகுதியாக உள்ள எட்டயபுரம் தாலுகா பகுதியிலே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாகக் கையகப்படுத்தப்பட்ட அந்த நிலத்திலே கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக சிறு தொழில் தொடங்கப்பட்டால், அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்குத் தொழில் வாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையிலே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அந்தக் கிராமத்தை, அந்த இடத்தைத் தேர்வு செய்து, அங்குத் தொழில் புரிவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.







**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் கிராமம் அருகிலுள்ள கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் தற்போது புதிதாக எந்தக் கிராமத் தொழிலும் தொடங்க உத்தேசமில்லை. வாரியத்தின் நிதி நெருக்கடி நிலைமை காரணமாகவும், ஏற்கெனவே தொடங்கப்பட்ட கதர் கிராமத் தொழில் அலகுகளை மட்டுமே நன்கு செயல்படுத்திட வாரியம் கருதுவதாலும், இயங்கி வரும் அலகுகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லாததாலும், புதிதாக அலகுகளை ஆரம்பிக்க இயலாத நிலையில் வாரியம் உள்ளது. மேலும், கதர் கிராமத் தொழில் ஆணையம் அறிவித்திருக்கும் விளிம்புத் தொகைத் திட்டத்தின்படி வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற தனி நபர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு வாரியத்தின் மூலம் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**65—**

## கால்நடை மருத்துவமனை

***19068—திரு வெ. கோவிந்தராஜ்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட வேப்பனப்பள்ளி ஒன்றியம், குப்பச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2002 அக்டோபர் 29

(அ) தற்போது சொற்குறிப்பு எதுவுமில்லை.

(ஆ) எழாது.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே ஒவ்வொரு துறையாக ஆய்வு செய்து, நலிந்த விவசாயிகள்மீது அக்கறை கொண்ட அரசு இது என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, அவர்கள் பெற்ற கடனுக்குண்டான வட்டி, அபராத வட்டி, ரூ.311 கோடியைத் தள்ளுபடி செய்தும், விவசாயிகள் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக, 20 இலட்சம் ஹெக்டேர் நிலங்களை மேம்படுத்தவும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே மாபெரும் திட்டங்களை அறிவித்து, ரூ.311 கோடி தள்ளுபடி செய்து, விவசாயிகளுடைய வயிற்றில் பாலை வார்த்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. எங்கள் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில், 9 ஊராட்சிகளுக்கு மையமாக இருந்து கொண்டிருக்கிற குப்பச்சிப்பாறை கிராமத்தில், குறைந்தது 15 ஆயிரம் கால்நடைகளை வைத்துக் குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் கால்நடைகளை சிகிச்சைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 15 முதல் 20 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையைப் போக்குகின்ற வகையில் அந்தக் கிளை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, மருத்துவமனையாக உயர்த்திக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிற கால்நடைத் தொழிலை மேம்படுத்தி, அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியதாக அது அமையும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இந்த ஆண்டு பரிசீலித்து, அமைக்கப்படுமா என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி தொகுதியைச் சேர்ந்த வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் உள்ள குப்பச்சிப்பாறை கிராமத்தில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.



2002 அக்டோபர் 29]

குப்பச்சிப்பாறை கிராமத்திற்கு 6 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குருக்கனப்பள்ளி என்னும் இடத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று உள்ளது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய குப்பச்சிப்பாறை என்ற கிராமத்தில் 15 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்ற காரணத்தால், தற்போது கால்நடை பராமரிப்புத் துறையில் மறு சீரமைப்புப் பணி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் கால்நடை விரிவாக்க அலுவலர்களைக் கால்நடை பராமரிப்புத் துறைக்கே திருப்பி அனுப்புவது பற்றிய கருத்துரு உள்ளாட்சித் துறையின் ஆய்வில் உள்ளது. மேற்படி கால்நடை விரிவாக்க அலுவலர்கள் இத்துறைக்குத் திரும்ப வந்த பிறகு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது பற்றி அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து முடிவெடுக்க உள்ளது. அவ்வாறு ஆய்வு செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குப்பச்சிப்பாறை கால்நடைக் கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவது பற்றி, நிதி நிலைக்கு ஏற்றாற்போல் பரிசீலித்து, முடிவெடுக்கும் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**66—**

## மாணவியர் விடுதி

***20382—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

புறாகல் 11-15

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மொரப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக மாணவியர் விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள் 972 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த விடுதிகளில் 202 விடுதிகள்தான் அரசுக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தனியார் கட்டடங்களில் இயங்கும் மற்ற விடுதிகளில் மாணவ, மாணவிகள் அடிப்படை வசதிகள் இல்லாமல் மிகவும் சிரமப்படும் நிலையில் உள்ளனர். அதனால் இந்த அரசு மாணவ, மாணவிகளுடைய கல்வித் தரத்தை உயர்த்தவும்—அவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, அவர்களுடைய உணவுக் கட்டணத்தை உயர்த்தியது மேலும், அவர்கள் தங்கிப் படிக்கும் விடுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யவேண்டுமென்ற காரணத்திற்காகவும் இந்த வருடம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு 114 விடுதிகளில் இப்போது வேலை முடியும் நிலையில் இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மேலும் 'அரசுக் கட்டடங்கள் கட்டிய பிறகு புதிய விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த மாமன்றத்தில் நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கிற தமிழகத்திலே விடுதிகளுக்கும் இன்னும் இரண்டாண்டுகளில் அனைத்து மூலமாகச் சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் அரசாங்கத்தின் நல்ல செய்தியை இங்கே வெளியிட்டிருந்தார்கள். என்ற ஒரு அதற்காகத் தமிழகத்திலே, பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவ, மாணவியர் சார்பாக, நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா



அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, புதிதாக விடுதிகள் தொடங்குகிற எண்ணம் அரசினுடைய பரிசீலனையில் இல்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இருந்தாலும்கூட, மொரப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியானது, நம்முடைய தமிழக முதல்வர் அவர்களால் கடந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியிலே கிட்டத்தட்ட 600 மாணவர்கள்—ஏழையெளிய மாணவர்கள்—படித்துக் கொண்டிருக்கிறார்கள். புதிதாகத் தொடங்க திட்டம் இல்லையென்று சொன்னாலும்கூட—தமிழகத்திலே பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது விடுதியிலே தங்கிப் படிப்பதற்காக விண்ணப்பித்து, காத்துக்கொண்டிருக்கிறார்கள். புதிதாகத் தொடங்கவில்லையென்று சொன்னாலும்கூட—விடுதியிலே தங்கிப் படிக்கின்ற மாணவர் எண்ணிக்கையை உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிவதோடு, அப்படி இரண்டாண்டுகளில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, அனைத்து வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கிற விடுதிகளுக்கும் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்பு, அதற்குப் பின்னால் புதிதாகத் தொடங்கவிருக்கிற காலத்தில் இந்தப் பள்ளிக்கு முன்னுரிமை வழங்கி புதிதாக அரசு விடுதி தொடங்க முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர் தொகுதியில் இதுவரை ஏழு அரசு விடுதிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்விடுதிகளுக்கு இப்போது அந்த மாவட்டத்தில் புதிதாக 5 கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தக் கட்டடங்களைக் கட்டி முடித்த பிறகு நம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்களுடைய கோரிக்கையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அங்கே பயிலும் மாணவர்களுடைய, மாணவிகளுடைய விடுதி எண்ணிக்கையை உயர்த்த இந்த அரசு ஆவன செய்யும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 அக்டோபர் 29

## ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## *ஆறாம் பட்டியல்

**1—**

### பதநீர் இறக்க உரிமம்

**வினா எண் 16294—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் சுமார் 3000 பனை மரம் ஏறும் தொழிலாளர்களுக்குப் பதநீர் இறக்க உரிமம் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 2, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (13) துறை, நாள் 11-1-2002-இன்படி பனை மரம், ஈச்ச மரம் மற்றும் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், 1-1-2002 முதல் 31-12-2002 வரை உரிமம் வழங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சீர்காழி தொகுதியில் உள்ள 3000 பனை மரம் ஏறும் தொழிலாளர்களும் பதநீர் இறக்க உரிமம் கேட்டு விண்ணப்பிக்கவில்லை. இப்பகுதியிலிருந்து 2002 ஆம் ஆண்டில் இதுவரையில் 56 பனைத் தொழிலாளர்களிடம் இருந்து உரிமம் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு, உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பதநீர் வழங்க உரிமம் கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டால், அவற்றை உடன் பரிசீலித்து உரிமம் வழங்க, உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், தஞ்சாவூருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2002 அக்டோபர் 29]

**2—**

### மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 10880—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் 2002-2003 ஆம் கல்வியாண்டில் பெறப்படவில்லை. மேற்படி பள்ளி சார்பாகக் கருத்துருக்கள் அடுத்த கல்வியாண்டில் முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டால், தகுதியின் அடிப்படையிலும், அரசின் நிதி நிலைமைக்கேற்பவும் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப் பரிசீலனை செய்யப்படும்.

**3—**

### தேசிய மாணவர் படை

**வினா எண் 12471—திரு. இ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே இருந்த தேசிய மாணவர் படையை (என்.சி.சி.) வேறு பள்ளிக்கு மாற்றிவிட்டனர் என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், மீண்டும் இப்பள்ளிக்கே, தேசிய மாணவர் படை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1962 ஆகஸ்ட் முதல் தேசிய மாணவர் படைப் பிரிவு செயல்பட்டு வந்தது. அப்பள்ளியைச் சார்ந்த தேசிய மாணவர் படை அலுவலர் பணி ஓய்வு பெற்றபின், வேறு விருப்பார்வத் தொண்டர் (N.C.C. Officer) எவரும் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன் வராததால் 1974 சனவரியில் அப்பள்ளியிலிருந்து தேசிய மாணவர் படைப் பிரிவு திரும்பப் பெறப்பட்டது. தற்போது எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, 1997 செப்டம்பர் மாதம் மீண்டும் அப்பள்ளியில் தேசிய மாணவர் படைப் பிரிவை அமைக்கும்படி விண்ணப்பித்துள்ளது. அந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டு, 12 (தமிழ்நாடு) பெட்டாலியன் தேசிய மாணவர் படை அலுவலகம், சேலத்தில், இதேபோல் விண்ணப்பித்துக் காத்திருப்போர் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**4—**

## உள் நோயாளிகளுக்குப் பால் மற்றும் உணவு

**வினா எண் 23818—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள உள் நோயாளிகளுக்குப் பால் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பால் எங்கு வாங்கப்பட்டு வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள உள் நோயாளிகளுக்குப் பால் மற்றும் ரொட்டி, சாப்பாடு, உணவுப் பொருட்கள் அன்றாடம் வழங்கப்பட்டு வருகின்றன.





(ஆ) நோயாளிகளுக்குத் தேவையான பால், சேலம் கூட்டுறவு பால் உற்பத்தி நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்டு வருகிறது.

**5—**

## இரத்த வங்கிகள்

**வினா எண் 23823—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இரத்த வங்கிகள் அரசு சார்ந்து எவ்வளவு உள்ளன?

(ஆ) தனியார் இரத்த வங்கிகள் எவ்வளவு உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.**

(அ) சேலம் மாவட்டத்தில் அரசு இரத்த வங்கி ஒன்று மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்படுகிறது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் கீழ்க்காணும் ஏழு தனியார் இரத்த வங்கிகள் செயல்படுகின்றன:

(1) சேலம் ஸ்டீல் பிளாண்ட் மருத்துவமனை குருதி வங்கி, சேலம்.

(2) ஸ்ரீகோகுலம் மருத்துவமனை குருதி வங்கி, 3/60 மெய்யனூர் சாலை, சேலம்.

(3) மாருதி குருதி வங்கி (மொபைல் மெடிக்கல்ஸ் சென்டர்), பெங்களூர் பைபாஸ் சாலை, சேலம்.

(4) குவின் மேரீஸ் கிளினிகல் லாபரட்டரீஸ் மற்றும் குருதி வங்கி, 19-சி, சாரதா காலேஜ் சாலை, சேலம்.

[2002 அக்டோபர் 29

(5) சித்தி விநாயகர் குருதி வங்கி, 1-சி, வித்யாலயா சாலை, சேலம்.

(6) எஸ். பழனியாண்டி முதலியார் நினைவு மருத்துவமனை குருதி வங்கி, 5/31, காமராஜ் நகர் காலனி, அம்மாப்பேட்டை, சேலம்.

(7) வினாயகா மிஷன் கிருபானந்த வாரியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குருதி வங்கி, வின்னசக்ரகபாடி, சேலம்.

6—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 14176—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கேசவசமுத்திரம் (க) பத்தமடை மற்றும் பிராஞ்சேரியில் நியாயவிலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், மேலச்செவல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் கேசவசமுத்திரம் மற்றும் பிராஞ்சேரி ஆகிய நியாய விலைக் கடைகள் பேரூராட்சிக்குட்பட்ட வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. நியாய விலைக் கடைகளுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டியளிக்கும் திட்டம் ஏதுமில்லை. ஆனால், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சிப்



2002 அக்டோபர் 29]

பகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன. கேசவசமுத்திரம் மற்றும் பிராஞ்சேரி நியாய விலைக் கடைகள் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்படுவதால் மேற்சொல்லப்பட்ட திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை. ஆயினும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இக்கடைகளுக்குக் கட்டடங்கள் கட்ட வாய்ப்புள்ளது.

7—

## பொது விநியோகக் கடைக் கட்டடம்

**வினா எண் 15509—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, மருதாடு ஊராட்சி, மருதாடு கிராமத்தில் பொது விநியோகக் கடைக் கட்டடம் இல்லையென்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பொது விநியோகக் கடைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மருதாடு நியாய விலைக் கடை கூட்டுறவு வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது. எனவே, இந்த நியாய விலைக் கடைக்குப் புதியதாகக் கட்டடம் கட்டத் தேவையில்லை.

8— [2002 அக்டோபர் 29

## பொது விநியோகக் கடைக் கட்டடம்

**வினா எண் 15510—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, கீழ்நர்மா ஊராட்சியில் பொது விநியோகக் கடைக் கட்டடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பொது விநியோகக் கடைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ்நர்மா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள கீழ்நர்மா நியாய விலைக் கடை தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கீழ்நர்மா ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தகுதியான நிலத்தைத் தேர்வு செய்து, கட்டடம் கட்டத் தக்க முன்மொழிவினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி, தக்க அறிவுரைகள் கீழ்நர்மா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளன.

9—

## கட்டடம்

**வினா எண் 15513—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 29]

(அ) வந்தவாசி தொகுதி, அதியனூர், அதியங்குப்பம் ஊராட்சியில் பொது விநியோகக் கடைக் கட்டடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வூராட்சிக்கு விநியோகக் கடைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் அதியனூரில் ஒரு முழு நேர நியாய விலைக் கடையும், இக்கடையைச் சேர்ந்த ஒரு பகுதி நேரக் கடை அதியங்குப்பத்திலும் இயங்கி வருகின்றன. அதியனூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தக்க நிலம் தேர்வு செய்து அதியனூர் முழு நேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இலவசமாகக் கட்டட வசதி செய்து தரவேண்டும் என்ற வரையறைக்குட்பட்டு பகுதி நேரக் கடை அமைக்கப்படுவதால், அதியங்குப்பம் பகுதி நேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

10—

## நியாய விலைக் கடை

**வினா எண் 20151—திரு. ஆர். சாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உணவுப் பொருள் விநியோகிக்கப்படும் இடத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் உள்ள கிராமத்திற்கு அல்லது 200 கார்டுகளுக்கு மேல் உள்ள கிராமத்திற்குத் தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

2 கிலோ மீட்டருக்கு மேல் தூரம் உள்ள கிராமத்திற்கு அல்லது 200 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள கிராமத்திற்குத் தனியாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**11—**

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 23386—திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதி, கீரைப்பாளையம் ஒன்றியம், நங்குடி ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து, சி. தண்டேஸ்வரநல்லூர் கிராமத்திற்குப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

காட்டுமன்னார்கோயில் வட்டம், நந்தீஸ்வரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள நங்குடி தாய் நியாய விலைக் கடையில் 577 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசு வரையறைகளின்படி பகுதி நேரக் கடை அமைக்கப்பட்டபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், பகுதி நேரக் கடையில் 200 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். இவ்வரையறைகள் பொருந்தாததால் சி. தண்டேஸ்வரநல்லூர் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.



**12—**

## மண்ணெண்ணெய் விற்பனை

**வினா எண் 26470—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெட்ரோல் பங்குகளில் மண்ணெண்ணெய் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**13—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 17225—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரில் உள்ள சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரில் உள்ள சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப்

பட்டா வழங்க நத்தம் புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை. எனவே, சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

14—

## ஆத்தூர் பழப் பண்ணை

**வினா எண் 23194—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, ஆத்தூர் பழப் பண்ணையில் ஆண்டுதோறும் விற்கப்படும் பழச் செடிகள், பூச் செடிகள் விற்பனை எவ்வளவு?

(ஆ) புதிய ரகப் பழச் செடிகள், தோட்டச் செடிகள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு அருகிலுள்ள ஆத்தூர் பழப் பண்ணையில் ஆண்டுதோறும் 45,000 எண்கள் பழச் செடிகள் மற்றும் 25,000 பூச் செடிகள், ரூ.13.80 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன.

(ஆ) சப்போட்டா ஒட்டுச் செடிகள், பி.கே.எம்.2, பி.கே.எம்.3-ம், புளி ஒட்டுச் செடிகள் உரிகம், பி.கே.எம். 1-ம், பலா ஒட்டுச் செடிகள் பர்லியார் 1-ம் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

15—

## விவசாயப் பணிகளுக்குத் துளைக் கருவிகள்

**வினா எண் 27744—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் குழாய்க் கிணறுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குத் தேவையான கருவிகளைக் குறைந்த விலையில் வாடகைக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் குழாய்க் கிணறுத் திட்டத்தின்கீழ் விவசாயப் பணிகளுக்குத் துளைக் கருவிகள் குறைந்த வாடகைக்குத் தரப்பட்டு வருகின்றன. சுமார் 40 ஆண்டுகளாக இவ்வாறு செயல்பட்டு வருகிறது.

16—

## பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு மையம்

**வினா எண் 13221—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி பருத்திப்பேடு பகுதியிலுள்ள பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு மையம் சிறப்பாகச் செயல்பட அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூவிருந்தவல்லி, பருத்திப்பேடு பகுதியிலுள்ள பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு மையம், அரசு ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம், என்று அழைக்கப்படுவதாகும். அவ்விடுதி தற்போது சிறப்பாகத்தான் செயல்பட்டு வருகிறது. அதில் 46 பெண்கள் மற்றும் 88 ஆண்கள் ஆக மொத்தம் 134 இல்லவாசிகள் உள்ளனர். அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகியன அளிப்பதோடு, அவர்களுக்குக் கைத்தொழில்களிலும் (மண் பாண்டம் செய்தல், தையல் வேலை, நெசவு செய்தல் போன்றன) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாகப் புதியதாக வேறு எதுவும் தற்போது செய்யும்படியான கருத்துரு ஏதும் இல்லை.

17— [2002 அக்டோபர் 29

## ஆதிதிராவிடர் நலப் பள்ளி அமைத்தல்

**வினா எண் 12560—திரு. தி. வேல் முருகன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர், காந்தி நகர் காலனியில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காந்தி நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு, காடாம்புலியூர் ஆதிதிராவிடர் நலக் குடியிருப்புக்கு அருகில் உள்ளது. தற்போது காடாம்புலியூர் ஆதிதிராவிடர் நலக் குடியிருப்பில் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே, காந்தி நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பில் புதிய ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

18—

## மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 17028—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள வடபாதி ஆதிதிராவிடர் தெருவிற்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2002 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள, வடபாதி ஆதிதிராவிடர் தெருவிற்கு மயானக் கொட்டகை அமைக்க, பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி கிடைக்கும்போது மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19—

## மயானக் கொட்டகை

**வினா எண் 17462—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சியாளம் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சியாளம் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுத்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

[2002 அக்டோபர் 29

20—

## மயானக் கொட்டகை மற்றும் சாலை அமைத்தல்

**வினா எண் 17583—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு கிராமம், ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்து, அதற்குச் சாலை அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு கிராமம், ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்து, அதற்குச் சாலை அமைத்துத் தரும் திட்டம், சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் பட்சத்தில் நிறைவேற்றப்படும்.

21—

## மயானக் கொட்டகை கட்டிக் கொடுத்தல்

**வினா எண் 17585—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடக்கு வடகால் ஆதிதிராவிடர் தெருவிற்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2002 அக்டோபர் 29]

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடக்கு வடகால் ஆதிதிராவிடர் தெருவிற்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

22—

## மயானக் கொட்டகைக்குச் சாலை

**வினா எண் 17593—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சியில் உள்ள ஆற்றங்கரைத் தெருவில் வாழும் ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுத்து மயானச் சாலை போட்டுக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சியில் உள்ள ஆற்றங்கரைத் தெருவில் வாழும் ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுத்து மயானச் சாலை போட்டுக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது செயல்படுத்தப்படும்.

23—

## மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா எண் 17594—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சியிலுள்ள எளந்தோப்பு கிராமத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சியிலுள்ள எளந்தோப்பு கிராமத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுத்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

24—

## மாணவர் விடுதி

**வினா எண் 19174—திருமதி ஆர். சசிகலா :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள மாணவர் விடுதிகளில் வரும் கல்வியாண்டில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

25—

## உதவித் தொகை

**வினா எண் 23841—திரு. செ. வெங்கடாஜலம் :** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) இவர்களுக்குக் கல்வி, மருத்துவம் மற்றும் விபத்து நிவாரணத்திற்காக எவ்வளவு ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 3,516 வணிகர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து உள்ளனர்.

(ஆ) இவர்களில் கீழ்க்கண்ட உறுப்பினர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. (Year-wise split up details):

| வரிசை எண் | வருடம் | பயனடைந்தோர் எண்ணிக்கை | தொகை ரூபாய் | மொத்த தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| | | குடும்ப நல உதவி | | |
| 1. | 1995-96 | 1 | 20,000/- | |
| 2. | 1998-99 | 3 | 1,20,000/- | |
| 3. | 1999-2000 | 7 | 3,50,000/- | |
| 4. | 2000-2001 | 3 | 60,000/- | |
| 5. | 2001-2002 | 10 | 2,00,000/- | 7,50,000/- |
| | | மருத்துவ உதவி | | |
| 1. | 1998-99 | 1 | 10,000/- | |
| 2. | 1999-2000 | 3 | 75,000/- | 85,000/- |
| | | கல்வி உதவி | | |
| 1. | 1998-99 | 5 | 12,000/- | |
| 2. | 1999-2000 | 5 | 10,000/- | |
| 3. | 2000-2001 | 1 | 3,000/- | 25,000/- |
| | | தீ விபத்து | | |
| 1. | 2001-2002 | 1 | 5,000/- | 5,000/- |
| | மொத்தம் | 40 | | 8,65,000/- |

**26—**

## கதர்த் தயாரிப்புகள்

**வினா எண் 12496—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டிலிருந்து கதர்த் துறை மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கதர்த் தயாரிப்புகள் குறைந்துவிட்டது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஏற்றுமதியை அதிகரிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இதுவரை கதர் ரகங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

**27—**

## கதர் கிராமத் தொழில்கள்

**வினா எண் 13321—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் மற்றும் நல்லம்பள்ளி பகுதியில் கதர் கிராமத் தொழில்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தற்போது வாரியத்தின்கீழ் கதர் கிராமத் தொழில்கள் ஆரம்பிக்கும் நோக்கம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

28—

## பணி நிரந்தரம்

**வினா எண் 19048—திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியத்தின் நூற்பு நிலையங்களில் பணிபுரியும் முதல் நிலை நெசவாளர்களை அரசு பணி நிரந்தரம் செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 97 முதுநிலை நூற்பாளர்கள் நாளொன்றுக்கு தினக்கூலியாக ரூ.25/- மட்டும் பெற்று வந்தார்கள். பின்னர், அரசு ஆணை (நிலை) எண் 28, கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த் துறை, நாள் 9-2-2000-ல் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் கதர் வாரியத்தால் தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. வாரியத்தில் தற்போது கடுமையான நிதி நெருக்கடியாக இருக்கும் நிலையில் இவர்களைப் பணி நிரந்தரம் செய்ய இயலாது.

29—

## வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு

**வினா எண் 6767—திருமதி வி. சிவகாமி :** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் ஒன்றியத்தில் வீட்டுவசதி வாரியக் குடியிருப்பிற்காகக் கையகப்படுத்தப்பட்ட 336.30 ஏக்கர் நிலமும் வீடுகள் கட்டப்படாமல் காலியாக இருக்கக் காரணம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தாராபுரம் ஒன்றியத்தில் 334.63 ஏக்கருக்கு நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவற்றில் 54.02 ஏக்கர் நிலம் மட்டும் இதுவரை கையகப்படுத்தப்பட்டன. கையகப்படுத்திய 54.02 ஏக்கரில், 27.87 ஏக்கரில் திட்டம் தீட்டப்பட்டு முதல் கட்டமாக 417 தனி வீடுகளும், 72 அரசு வாடகை வீடுகளும் கட்டப்பட்டன. இரண்டாவது கட்டமாக 10.03 ஏக்கர் நிலத்தில் மனை மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, 26 உயர் வருவாய்ப் பிரிவு, 100 மத்திய வருவாய்ப் பிரிவு, 63 குறைந்த வருவாய்ப் பிரிவு மனைகள், ஆக மொத்தம் 189 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டன. மீதமுள்ள 4.04 ஏக்கரில் புதிய மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

30—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 10895—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர் ஊராட்சி, முத்துராஜபுரம் கிராமத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டிக் குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 2000-2001-ன்கீழ் முத்துராஜபுரம், மகிழ்ச்சிபுரம் ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் சேர்த்து மகிழ்ச்சிபுரம் குடியிருப்பில் இவ்விரு குடியிருப்புகளின் மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டு, 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுக்

[2002 அக்டோபர் 29

குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

31—

## குடிநீர் வசதி

**வினா எண் 13234—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெரியப்பூர் ஊராட்சியிலுள்ள அண்ணாமலைபுதூர், பொன்காளியம்மன்புதூர், காளிபாளையம் ஆகிய ஊர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், வெரியப்பூர் ஊராட்சியைச் சார்ந்த அண்ணாமலைபுதூர், பொன்காளியம்மன்புதூர் மற்றும் காளிபாளையம் ஆகிய குடியிருப்புகளுக்குத் தற்பொழுது அத்தியாவசியத் தேவைக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில், தகுதி, தேவை மற்றும் நிதி ஆதாரங்களைக் கருத்திற்கொண்டு புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

32—

## வீடுகள் கட்டிக் கொடுத்தல்

**வினா எண் 14994—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 29]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சிறிய மற்றும் நடுத்தர வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரம் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கு வீட்டுவசதிக்கான தேவை நிர்ணயம் (Demand Assessment) செய்ய, மார்ச் 1990, ஜூலை 1992 மற்றும் ஜூலை 1993, ஆக மூன்று காலகட்டங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும் வீட்டுவசதிக்கு இங்கு போதிய தேவை இல்லாமையால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பெண்ணாகரத்தில் வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்த இயலவில்லை.

(ஆ) எழவில்லை.

33—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 13639—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள அனுமந்தபுரம் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**34—**

**இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்**

**வினா எண் 13640—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள நல்லாம்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**35—**

**பட்டா**

**வினா எண் 13641—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள இராமர்கூடல் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**36—**

**மனைப் பட்டா**

**வினா எண் 13717—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பாலவாடி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

[2002 அக்டோபர் 29

37—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 13718—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

38—

## பட்டா

**வினா எண் 13719—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள கமலநத்தம் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2002 அக்டோபர் 29]

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

39—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 13720—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள முத்தம்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

40—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 13721—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 29

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள கருக்காரன்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**41—**

### பட்டா

**வினா எண் 13722—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பழனிகவுண்டன் கொட்டாய் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.



2002 அக்டோபர் 29]

**42—**

### மனைப் பட்டாக்கள்

**வினா எண் 13723—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள ஏலகிரி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**43—**

### இலவச வீடுகள்

**வினா எண் 17239—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பெருமகளூர் பேரூராட்சிப் பகுதியில் வசிக்கும் பின்தங்கிய சமுதாய மக்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திட்டம் ஏதுமில்லை.

44—

## பால் உற்பத்தியாளர் சங்கங்கள்

**வினா எண் 12447—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய பால் வள வாரியம் மூலமாக நடத்தப்படும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அந்த வாரியத்தின் செயல்பாடுகளை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஏதுமில்லை

(ஆ) வாய்ப்பில்லை.

45—

## கல்வித் தரம் உயர்த்துதல்

**வினா எண் 10668—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கலைக்கப்பட்ட கே.கே. 38 கூட்டுறவு சாம்ராஜ்பேட்டை நெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான 1.20 ஏக்கர் காலி நிலத்தை சாம்ராஜ்பேட்டை துவக்கப் பள்ளிக்கு ஒதுக்கி, குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**



(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகா, மேச்சேரி கிராமம், சாம்ராஜ்பேட்டையில் உள்ள கலைக்கப்பட்ட கே.கே. 38 கூட்டுறவு சாம்ராஜ்பேட்டை நெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான சர்வே எண் 178/1-ல் 1.92 ஏக்கர் காலி நிலத்தை விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் தொழிற்கூடத்துடன்கூடிய வீடு கட்டும் திட்டத்திற்குப் பயன்படுத்த முயற்சித்தபோதும், சங்கத்தின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும், சங்கம் அரசிற்குச் செலுத்த வேண்டிய கடன் பெருமளவில் உள்ள நிலையிலும், உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து நிலவாத நிலையிலும் சங்கத்திற்குச் சொந்தமான காலி நிலத்தினை சாம்ராஜ்பேட்டை துவக்கப் பள்ளிக்கு ஒதுக்க வழிவகை இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

46—

## விசைத் தறிகள்

**வினா எண் 16580—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலுள்ள பீளமேடு மின் விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தில் இயங்காமல் இருக்கும் விசைத் தறிகள் எத்தனை?

(ஆ) அந்த விசைத் தறிகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூரிலுள்ள பீளமேடு விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தில் இருக்கும் 669 விசைத் தறிகளும் செயல்படுகின்றன. செயலிழந்த நிலையில் விசைத் தறிகள் ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

[2002 அக்டோபர் 29

**47—**

## மூலதனம்

**வினா எண் 18589—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தில் 2001-2002 ஆம் ஆண்டு வரை எவ்வளவு மூலதனம் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மதிப்பென்ன? அதனால் வந்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தில் 2001-2002 ஆம் ஆண்டு வரை செய்யப்பட்ட மூலதனத்தின் மொத்த மதிப்பு ரூ.154.03 இலட்சம் ஆகும்.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டு காலத்தில் தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.958.95 இலட்சம் ஆகும். இதன் மூலம் இந்த நிறுவனத்திற்கு வந்த வருவாய், அதாவது தணிக்கை செய்யப்படாத நிகர இலாபத்தின் மதிப்பு ரூ.2,43,210.18 ஆகும்.

**48—**

## உதவித் தொகை

**வினா எண் 16880—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி மீன் பிடிப்போர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக வலையும், உதவித் தொகையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?



2002 அக்டோபர் 29]

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது துறையின் மூலம் வழங்கத் திட்டம் நடைமுறையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**49—**

## மீன் பிடிப்போர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 16883—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மீன் பிடிப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) மீன் பிடிப்போர் எந்தெந்த மாவட்டங்களில் அதிகப்படியான உறுப்பினர்களாகச் சங்கத்தில் சேர்ந்துள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், மீன் பிடிப்போர் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 7246 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

(ஆ) கீழ்க்கண்ட மாவட்டங்களில் அதிகப்படியான உறுப்பினர்கள் மீன் பிடிப்போர் சங்கத்தில் சேர்ந்துள்ளனர்:

| மாவட்டம் | உறுப்பினர் விவரம் |
|---|---|
| 1. சென்னை | 52,126 |
| 2. திருவள்ளூர் (பொன்னேரி) | 22,373 |
| 3. கடலூர் | 34,952 |
| 4. நாகப்பட்டினம் | 35,751 |
| 5. கன்னியாகுமரி | 70,251 |
| 6. காஞ்சிபுரம் | 11,909 |
| 7. இராமநாதபுரம் | 34,931 |

[2002 அக்டோபர் 29

50—

## போக்குவரத்துக் கழகம்

**வினா எண் 1879—திரு. க. முருகவேல் ராஜன் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுலாப் பேருந்துகளை இயக்குவதற்குத் தனிப் போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சுற்றுலாப் பேருந்துகளை இயக்குவதற்கென்றே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தனிப் பிரிவு இயங்கி வருகிறது. எனவே, சுற்றுலாப் பேருந்துகளை இயக்குவதற்குத் தனிப் போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

## *ஏழாம் பட்டியல்

1—

## ஏரிக்கரை, மதகு புதுப்பித்தல்

**வினா எண் 15865—திரு. கோ. இரவிராஜ் :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்டம், பெரிய ஏரியான கோபாலகிருஷ்ணபுரம் ஏரிக்கரையையும், மதகினையும் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2002 அக்டோபர் 29]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சந்தானகோபாலபுரம் ஏரியின் மதகு மற்றும் கரையைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை, நடப்பு நிதியாண்டில் வருடாந்திரப் பராமரிப்புத் தலைப்பில் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

## சிமெண்ட் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 15869—திரு. கோ. இரவிராஜ் :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், செஞ்சி கிராம ஏரியிலிருந்து கால்வாய்களை சிமெண்ட் கால்வாய்களாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நபார்டு நிதி உதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்தி தரப்படுத்தும் திட்டத்தின்கீழ் இப்பணியை மேற்கொள்ளப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இக்கருத்துருவிற்கு வங்கியின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றால், பணி மேற்கொள்ளப்படும்.

[2002 அக்டோபர் 29

3—

## கால்வாய் தூர்வாருதல்

**வினா எண் 15870—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சத்ரஞ்செயபுரம் கிராம மக்களின் ஏரிப் பாசனக் கால்வாயைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சத்ரஞ்செயபுரம் ஏரியின் பாசனக் கால்வாயினைத் தூர்வாரும் அகவுரைப் பணிகள் மேற்கொள்ள, நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும், ஏரிகளை நவீனப்படுத்தித் தரப்படுத்தும் திட்டத்தின்கீழ், உரிய கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்டால் பணி மேற்கொள்ளப்படும்.

4—

## கள்ளச் சாராயம் ஒழித்தல்

**வினா எண் 18869—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், மங்கலம்பேட்டை காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் பதநீர் இறக்குவதாகக் கூறி, பல இடங்களில் பனை மரத்திலிருந்து கள் இறக்கி விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?



2002 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், கள்ளச் சாராயத்தை ஒழிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், விருத்தாசலம், மங்கலம்பேட்டை பகுதியில் ஆரம்ப பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று செயல்படுகிறது. இக்கூட்டுறவுச் சங்கத்தில் 274 அங்கத்தினர்கள் உள்ளனர். 129 நபர்கள் 2002 ஆம் ஆண்டு பதநீர் இறக்குவதற்காக உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில் அலுவலகம், கடலூர் மூலம் உரிமம் பெற்றுள்ளனர். பதநீர் இறக்குவதற்கு மட்டுமே உரிமத்தினைப் பயன்படுத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பதநீர் இறக்குவதாகக் கூறி கள் இறக்குபவர்கள்மீது மங்கலம்பேட்டை காவல நிலையம் மற்றும் விருத்தாசலம் காவல் நிலையச் சரகத்திற்கு உட்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் விளைவாக இவ்வாண்டு பிப்ரவரியிலிருந்து ஏப்ரல் மாதங்களுக்குள் மங்கலம்பேட்டை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டவர்கள் 33 பேர்மீதும், விருத்தாசலம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டவர் ஒருவர்மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகத் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் 1-1-2002 முதல் 20-6-2002 வரை மங்கலம்பேட்டை காவல் நிலையத்தில் 60 கள்ளச் சாராய வழக்குகளும், அதே காலகட்டத்தில் விருத்தாசலம் காவல் நிலையத்தில் 41 கள்ளச் சாராய வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. விருத்தாசலம் அமலாக்கப் பிரிவு, மங்கலம்பேட்டை காவல் சரகத்தில் 124 கள்ளச் சாராய வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. விருத்தாசலம் அமலாக்கப் பிரிவால் 20-4-2002 அன்று நடத்தப்பட்ட விழிப்புணர்வு முகாம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்கள் கள்ளச் சாராயத்தை ஒழிக்கக் காவல் துறையால் எடுக்கப்பட்டு வரும் இந்த நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளார்கள்.

5— [2002 அக்டோபர் 29

## பி.எட். பயிற்சி

**வினா எண் 5370—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அஞ்சல் வழியில் பி.எட். பயிற்சி பெற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அஞ்சல் வழியில் பி.எட். பயிற்சியானது, ஆசிரியர் பயிற்சிக்கான தேசியக் குழு (National Council for Teachers' Education) விதித்துள்ள சில வரைமுறைகளால் தற்போது எந்தப் பல்கலைக்கழகங்களிலும் நடத்தப்படவில்லை. அஞ்சல் வழியில் பி.எட். பயிற்சி பெற வேண்டுவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

## மாதிரிப் பள்ளிகள்

**வினா எண் 10479—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசு திட்டமிட்டுள்ளது?

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மாதிரிப் பள்ளிகள் (Model schools) துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மாதிரிப் பள்ளிகள் ஆரம்பிப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2002 அக்டோபர் 29]

7—

## உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 19106—திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, ஆலம்பாடி கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அதற்குண்டான நிதியைச் செலுத்தியும் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): முகையூர் தொகுதி, ஆலம்பாடி கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசாணை (நிலை) எண் 97, பள்ளிக் கல்வி, நாள் 4-7-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

8—

## பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 17240—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகிய நாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, காலியான மருத்துவர் பணியிடங்களை நிரப்புவது அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகிய நாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இரு மருத்துவர் பணியிடங்களில் இரண்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மருத்துவர் பணியிடம் ஏதும் காலியாக இல்லை.

**9—**

**சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா எண் 18489—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுச் சுவர் அமைக்கும் பணியை முடிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, நாட்ராம்பள்ளி தொகுதியில் சுற்றுச் சுவர் இல்லாத மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**10—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 18492—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜெசல்நாயக்கன்பட்டியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, நாட்ராம்பள்ளி தொகுதி, ஜெசல்நாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**11—**

**கழிப்பிடங்கள் சரி செய்தல்**

**வினா எண் 18781—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் வார்டுகளில் உள்ள கழிப்பிடங்கள் அனைத்தும் சரியாகப் பராமரிக்கப்படாமல் நோயாளிகள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உள்ள அனைத்துப் பிரிவுகளிலும் கழிப்பிடங்கள் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் பொதுப் பணித் துறை மூலம் சீர்படுத்தப்படுவதோடு, போதிய அளவில் தண்ணீர் மற்றும் கிருமி நாசினிகள், பராமரிப்பிற்காக வழங்கப்படுகின்றன. எனவே, நோயாளிகள் இதனால் எந்தப் பாதிப்புக்கும் ஆளாவதில்லை.

12— [2002 அக்டோபர் 29

## போலியோ சொட்டு மருந்து

**வினா எண் 20071—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு அளித்ததில் எவ்வளவு குழந்தைகள் பயன்பெற்றனர்?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு தொகை செலவானது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2002ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு அளித்ததில் ஐந்து வயதிற்குட்பட்ட 75,45,105 குழந்தைகள் பயன்பெற்றனர்.

(ஆ) சொட்டு மருந்து முகாம் முற்றிலுமாக மைய அரசின் உதவியோடு நடத்தப்பட்டதால் மாநில அரசுக்கு எந்தச் செலவினமும் இல்லை.

13—

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 11181—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஈச்சம்பட்டி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2002 அக்டோபர் 29]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பாலாஜங்கமன் அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் ஈச்சம்பட்டி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்க, தருமபுரி மண்டல இணைப் பதிவாளரால் 24-5-2002 நாளிட்ட கடிதத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டால், கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

**வினா எண் 17049—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) உறுப்பினர்களுக்கு எத்தனை சதவிகிதம் பங்கு ஈவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) 28.

(ஆ) அதிகபட்சம் 14%.

[2002 அக்டோபர் 29

15—

## கடன்

வினா எண் **17057—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வீட்டைப் பழுதுபார்க்க எவ்வளவு நபர்களுக்கு அதிகபட்சமாகக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளை ஒன்று கொங்கணாபுரத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் வீட்டைப் பழுதுபார்க்கக் கடன் வழங்க இச்சங்கத் துணை விதிகளில் வழிவகையில்லாததால், சங்கத்திலிருந்து 2000-2001 ஆம் ஆண்டில் இவ்வகைக் கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

16—

## வியாபார மதிப்பு

வினா எண் **17062—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 2000-2001 ஆம் ஆண்டு செய்த மொத்த வியாபார மதிப்பு எவ்வளவு?



2002 அக்டோபர் 29]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 2000-2001 ஆம் ஆண்டு செய்த மொத்த வியாபார மதிப்பு ரூ.8104.96 இலட்சம் ஆகும்.

17—

## பணி நியமனம்

வினா எண் **17129—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்கு ஒற்றைச் சாளர முறையில் பணியாளர்களைப் பணி நியமனம் செய்யத் தேர்வு செய்யப்பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர் பணி நியமனம் செய்யப்பட்டார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

18—

## மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்

வினா எண் **21505—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 29

(அ) சேலம் மாவட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இதனால் எத்தனை பேர் பயனடைகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 15 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் செயல்படுகின்றன.

(ஆ) இதனால் 92,979 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைகிறார்கள்.

**19—**

## மஞ்சள் கொள்முதல் கிடங்கு அமைத்தல்

**வினா எண் 14218—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் மஞ்சள் கொள்முதல் கிடங்கு ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

குறைந்த அளவில் இப்பகுதியில் மஞ்சள் உற்பத்தி இருப்பதால், மஞ்சளுக்கென்று தனியே இப்பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் உருவாக்குவது சாத்தியமில்லை.

**20—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 7066—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 29]

(அ) உடுமலைப்பேட்டை, பூலாங்கிணறு, முக்கோணம் ஆதிதிராவிடர்களுக்கு மேலும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை இதுகுறித்து யாது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உடுமலைப்பேட்டை வட்டம், பூலாங்கிணறு, முக்கோணம் கிராமங்களில் க.ச.எண்.244/எ-காலையில் 1.54.5 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 82 மனையிடங்களில், 48 மனையிடங்களுக்குப் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 34 மனையிடங்களுக்குத் தகுதியின் அடிப்படையில் பயனாளிகளைத் தேர்வு செய்து பட்டாக்கள் வழங்க, மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

**21—**

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 8388—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி ஆதிதிராவிடர் நலத் துறை மாணவியர் விடுதி சுற்றுச்சுவரை உயர்த்திக் கட்டிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2002 அக்டோபர் 29

22—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 9469—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மட்றப்பள்ளி கிராமத்தில் அருந்ததியர் மற்றும் பிச்சகுண்டியர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மட்றப்பள்ளி கிராமத்தில் பிச்சகுண்டியர் இனத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. மட்றப்பள்ளி பஞ்சாயத்திற்குட்பட்ட மேற்கத்தியனூர் கிராமத்தில் சுமார் 50 (ஐம்பது) அருந்ததியர் குடும்பங்கள் உள்ளன. இவர்களில் சிலர் திருமணமாகி கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு நிலம் கையகம் செய்து, வீட்டுமனை வழங்கிட வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

## பட்டா

**வினா எண் 10302—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் அத்திக்குட்டை என்னுமிடத்தில் குடிசை போட்டுக் கொண்டு ஆதிதிராவிடர்கள் 40 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பதால் அவர்களுக்குப் பட்டா வழங்கப்படுமா?



2002 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், சிங்காநல்லூர் அத்திக்குட்டையில் ஆதிதிராவிடர் மற்றும் பிற இனத்தவர்கள் குடியிருந்து வரும் நிலம் ஓர் ஆதிதிராவிடருக்குச் சொந்தமான பட்டா நிலம் ஆகும். இந்நிலம் தொடர்பாக நில உரிமையாளர், கோவை சார்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு நிலுவையில் உள்ளதால், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் நிலை தற்போது இல்லை.

24—

## கணித ஆசிரியர் நியமனம்

**வினா எண் 16491—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பெரியகளக்காட்டூர் ஆதிதிராவிடர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கணித ஆசிரியர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பெரியகளக்காட்டூர் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில், கணிதப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம், 29-6-2002 அன்று நடைபெற்ற ஒற்றைச் சாளர முறையில் (Counselling) நிரப்பப்பட்டு விட்டது.

**25—**

## சாலை வசதி

**வினா எண் 17667—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியில் உள்ள கருங்குடி கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானத்திற்குச் செல்ல சாலை வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி, கருங்குடி கிராமத்தில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு மயானத்திற்குச் செல்ல மயானச் சாலை அமைத்திட ஊராட்சியில் பொது நிதி வரப்பெற்றவுடன் இப்பணியினைச் சிறப்பு இனமாகக் கருதிச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

## மயானச் சாலை அமைத்தல்

**வினா எண் 17670—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்பங்கூர் ஊராட்சியில் உள்ள நரிமுடுக்கு ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள மயானத்திற்குச் சாலை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்பங்கூர் ஊராட்சியில் உள்ள நரிமுடுக்கு ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள மயானத்திற்குச் சுமார் 400 மீட்டர் நீளத்தில் ஏற்கெனவே உள்ள சாலையை அகலப்படுத்தியும், உயரப்படுத்தியும் மேம்பாடு செய்ய ரூ.1.20 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அளவிற்கு ஊராட்சிப் பொது நிதியிலிருந்து கூடுதலாகத் தொகை வரப்பெற்றதும், மேற்படி சாலை சீரமைத்துத் தரப்படும்.

**27—**

## மயானக் கொட்டகை கட்டுதல்

**வினா எண் 17685—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கற்கோயில் ஊராட்சி, ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், கற்கோயில் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

53-322—9a

225 172
சென்னை-600 008

28—

### மயானச் சாலை அமைத்தல்

**வினா எண் 18037—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சியில் உள்ள காளிகாவல்புரம் ஆதிதிராவிட மக்களுக்கு மயானச் சாலை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சி, காளிகாவல்புரம் ஆதிதிராவிடர் மக்களுக்கு ஏற்கெனவே உள்ள 300 மீட்டர் நீள மயானச் சாலையை செம்மண் சாலையாக மேம்பாடு செய்திட சுமார் ரூ.95,000/- ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஊராட்சி மூலம் இந்த அளவிற்கு நிதி கிடைக்கப்பெற்றதும், மேற்படி சாலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

### மயானச் சாலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 18042—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சியில் உள்ள வடபாதி ஆதிதிராவிடர் தெரு மக்களுக்கு மயானச் சாலை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, எடக்குடி, வடபாதி ஊராட்சியில் உள்ள வடபாதி ஆதிதிராவிடர் தெரு மக்களுக்கு 150 மீட்டர் நீளமுள்ள மயானச் சாலையை மேம்பாடு செய்து தரும் பணி ஊராட்சிக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு கிடைக்கும்போது மேற்கொள்ளப்படும்.

30—

### சொந்தக் கட்டடம்

**வினா எண் 14041—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரியில் தனியார் கட்டடத்தில் இயங்கும் மோட்டார் வாகன ஆய்வு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) தமிழகத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வு அலுவலகங்கள் எத்தனை தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சொந்தக் கட்டடம் கட்டும் பொருட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைக்கேற்ப விரைவில் கட்டடம் கட்டப்படும்.

(ஆ) தமிழகத்தில் 38 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு அலுவலகங்கள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன. எஞ்சிய அனைத்து அலுவலகங்களும் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன.

[2002 அக்டோபர் 29

31—

## ஆம்னி பேருந்துகள்

**வினா எண் 14919—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முறையான அனுமதியின்றி இயக்கப்படும் ஆம்னி பேருந்துகள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மோட்டார் வாகனச் சட்டம் 1988-ல் பிரிவு 2 (7)-ன்படி சுற்றுலாப் பேருந்துகளில் பயணிகளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், முறையான அனுமதி பெறாமல் இயக்கப்படும் ஆம்னி பேருந்துகளைப் புகார்களின் அடிப்படையிலும் மற்றும் செயலாக்கப் பிரிவின் மூலமாகவும் தமிழகம் முழுவதும் சிறப்புத் தணிக்கை ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு, குற்றக் குறிப்பாணை வழங்கப்படுகிறது. தவறு இழைக்கும் ஆம்னி பேருந்தின் அனுமதியைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இணக்கக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

32—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 22679—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 அக்டோபர் 29]

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவது என்பது அரசின் கொள்கை முடிவு (Policy Decision) ஆகும். எனினும், அரசின் நிதி நிலைக்கேற்ப படிப்படியாக (phased manner) அலுவலகங்கள் கட்டப்படும்.

33—

## புதிய திட்டம்

**வினா எண் 10468—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் நட்டத்தில் செயல்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அந்நட்டத்தைத் தடுக்க அரசிடம் புதிய திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார விநியோகச் சட்டம், 1948-ன்கீழ் அமைக்கப்பட்ட ஒரு வாரியமாகும். அது மின் உற்பத்தி, செலுத்துதல் மற்றும் பகிர்மானத் தொழிலில் ஈடுபட்டுள்ளது. மின்சார விநியோகச் சட்டம், பிரிவு 59-ன்படி, மின்சார வாரியங்கள் ஆண்டுத் தொடக்கத்தில் உள்ள சொத்துகளின் மதிப்பில் குறைந்தபட்சம் 3% உபரி ஈட்ட வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்சாரக் கட்டண விகிதங்கள் தமிழக அரசின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளைச் சார்ந்துள்ளமையால், தமிழ்நாடு மின்சார வாரியம் சொந்தமாகத் தேவையான உபரி சதவிகிதம் ஈட்டக்கூடிய நிலைமையில்

[2002 அக்டோபர் 29

இல்லை. எனவே, தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக அரசின் மானியத்தை நம்பியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு வரையிலும் தமிழக அரசு தேவையான மானியத்தை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளுக்கு முறையே, ரூபாய் 1206.89 கோடி மற்றும் ரூபாய் 1443.21 கோடி மானியமாக தமிழக அரசைக் கோரியுள்ளது.

மேற்கூறிய மானியங்கள் பெறப்பட்டால் மின் வாரியத்தின் நட்டத்தை ஈடுசெய்யலாம்.

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைத்தும், மின் தேக்கிகள் பொருத்தியும், மின் பகிர்மான வலையமைப்பை மேம்படுத்தியும் மின் வழி இழப்பைக் குறைக்கவும், இயந்திரச் சுமைக்காரணியைப் பெருக்கவும், தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. இது தொடர்பாகக் கீழ்க்காணும் விவரங்கள் அளிக்கப்படுகின்றன:-

| | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| மின் வழி இழப்பு | 16.9% | 16.75% | 16.75% | 16.2% |
| இயந்திரச் சுமைக்காரணி (P.L.F.) | 65.3% | 72.29% | 77.96% | 77.98% |

தமிழ்நாடு மின்சார வாரியம் 2001-2002 ஆம் ஆண்டில் தனது மின் பகிர்மான வலையமைப்பு மேம்பாட்டிற்கு ரூபாய் 511.31 கோடி ஒதுக்கியுள்ளது.

மேலும், மின் துறைச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (S.E.R.C.) தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன.

**34—**

## இலவச மின்சாரம்

**வினா எண் 12229—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 29]

(அ) தமிழகத்தில் மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு திட்டம் ஏதேனும் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**35—**

## மணல் எடுத்தல்

**வினா எண் 17757—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூண்டிக்கும், ரெட்ஹில்ஸிற்கும் இடையே கொசஸ்தலையாற்றில் சட்ட விரோதமாக மணல் எடுப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில், பூண்டிக்கும், ரெட்ஹில்ஸிற்கும் இடையே உள்ள கொசஸ்தலை ஆற்றில் சட்ட விரோதமாக மணல்

[2002 அக்டோபர் 29

எடுப்பதைத் தடுக்க வருவாய்த் துறையினர் மற்றும் கனிம வளத் துறையினரால் தொடர்ந்து கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. அவ்வகையில் 1-3-2001 முதல் 18-4-2002 வரையிலான காலத்தில் சட்ட விரோதமாக மணல் எடுத்த 135 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, அபராதத் தொகை, கனிமத் தொகை மற்றும் உரியத் தொகையாக ரூ.25,58,160/- வாகன உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

36—

## கல் உடைக்க அனுமதி

**வினா எண் 23483—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், ராஜாக்காப்பட்டி பஞ்சாயத்து, பாறைப்பட்டியில் குடியிருக்கும் கூலித் தொழிலாளர்கள் பாறைப்பட்டி ஈஸ்வரன்காட்டில் உள்ள பாறையில் கல் உடைக்க அனுமதி வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, 'மலை வட்டம்' என அரசாணை எண் 44, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 2-4-1990-ல் ஆணையிடப்பட்டு, மலைப் பகுதிப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வருவதாலும், இப்பகுதியில் மலைப் பகுதிப் பாதுகாப்புக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே கல் குடைவுப் பணிகள் செய்ய அனுமதிக்க இயலும் என்பதாலும், மேற்குறித்த அரசாணைப்படி, பாறைப்பட்டி, ஈஸ்வரன்காட்டில் உள்ள பாறையில் கல் உடைக்கத் தற்போது அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது.



2002 அக்டோபர் 29]

37—

## பணி நிரந்தரம்

**வினா எண் 16823—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விநியோகப் பிரிவில் மின் பகிர்மான வட்டங்களில் எத்தனை தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிந்து வருகிறார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேரை அரசு பணி நிரந்தரம் செய்ய உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தொழிலாளர்கள் எவரும் நேரடியாகப் பணி அமர்த்தப்படுவதில்லை. மின் பகிர்மான வட்டங்களில் அவ்வப்பொழுது எழுகின்ற சில நிரந்தரமற்ற சில்லரைப் பணிகளைச் செய்வதன் பொருட்டு, அப்பணிகள்—சில்லரைப் பணிகள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் செய்யப்பட்டு, அப்பணிக்கான தொகை ஒப்பந்தக்காரர்கள் மூலம் வழங்கப்படுகிறது. எனவே, மின் பகிர்மான வட்டங்களில் எவ்வளவு ஒப்பந்தத் தொழிலாளர்கள் உள்ளனர் என அறிவது குறித்துத் தேவை எழவில்லை.

சென்னை, தொழிலாளர் தீர்ப்பாயத்தில் 3 தொழிற்சங்கங்களால், மின் பகிர்மான வட்டங்கள் உட்படப் பல்வேறு இடங்களில் உள்ள 41,098 ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யக் கோரி தொழிற்தாவா எண் 106/2002-ல் வழக்குத் தொடர்ந்துள்ளனர். மற்றும் சில தொழிற்சங்கங்களும்/ஒப்பந்தத் தொழிலாளர்களும், தொழிலாளர் நீதிமன்றம்/தொழிலாளர் ஆய்வாளர்/உயர் நீதிமன்றத்திலும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்கூறிய நிலையிலும், தற்போது வாரியத்தில் எழுந்துள்ள கடுமையான நிதிப் பற்றாக்குறையின் காரணத்தாலும், மின் பகிர்மான வட்டங்களில் உள்ள

ஒப்பந்தக்காரர்களின்கீழ்ப் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய இயலாது.

**38—**

## ஆழ்குழாய்ப் பம்பு அமைத்தல்

**வினா எண் 8776—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், மூலச்சி ஊராட்சி, பொன்மா நகர், பஸ் ஸ்டாண்டு ஆதிதிராவிடர் காலனி கீழ்ப்பக்கம் ஆகிய பகுதிகளில் புதிய ஆழ்குழாய்ப் பம்பு அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், மூலச்சி ஊராட்சியைச் சேர்ந்த பொன்மா நகர் பஸ் ஸ்டாண்டு மற்றும் ஆதிதிராவிடர் காலனி கீழ்ப்பக்கம் என்ற பகுதிகள் பொன்மா நகர்க் குடியிருப்புடன் இணைந்த பகுதிகளாகும். பொன்மா நகர்க் குடியிருப்பில் நடப்பு நிதியாண்டில் சிறிய மின் விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுப் பயனில் உள்ளது.

**39—**

## புதிய ஆழ்குழாய்ப் பம்பு அமைத்தல்

**வினா எண் 8778—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், மூலச்சி ஊராட்சி, கரம்பை கீழ்ப்பக்கம் புதிய ஆழ்குழாய்ப் பம்பு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், மூலச்சி ஊராட்சி, கரம்பை (கீழ்ப்பக்கம்) குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஆழ்குழாய் அமைப்புடன்கூடிய கையிறைப்பான் திட்டம் செயல்படுத்தப்பட்டுப் பயனில் உள்ளது.

**40—**

## அடிபம்பு அமைத்தல்

**வினா எண் 8938—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, குத்தபாஞ்சான் பஞ்சாயத்தில் காலத்திமடம் அருந்ததியர் காலனியில் 2 அடிபம்புகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், குத்தபாஞ்சான் ஊராட்சி, காலத்திமடம் குடியிருப்பு, அருந்ததியர் காலனிப் பகுதிக்கு நடப்பு நிதியாண்டில் ஒரு கையிறைப்பான் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

மேலும் கூடுதலாகக் கையிறைப்பான் அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**41—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 10874—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, ரம்மதபுரம் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதால், புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, ஏற்கெனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், அணைக்கரை, ரம்மதபுரம் குடியிருப்பிற்கு மார்ச் 2002-ல் ரூ.6.30 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

**42—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12052—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பஞ்சாயத்து மத்திய நகர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில், சேரன்மகாதேவி பஞ்சாயத்தைச் சேர்ந்த மத்திய நகர்ப் பகுதிக்குப் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் செயலாக்கத்தில் இல்லை. இப்பேரூராட்சியின் மக்கள்தொகை 15,735 ஆகும். தற்போது அமலில் இருக்கும் குடிநீர்த் திட்டம் தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 1983 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டுப் பயனில் உள்ளது. தற்போது இத்திட்டம் பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், பேரூராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள ஒரு புதிய 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பயனில் உள்ளது. ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தற்போதைய மக்கள்தொகைக்குப் போதுமானதாக உள்ளதால், கூடுதல் நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை. இப்பேரூராட்சிக்குப் போதுமான அளவு குடிநீர், பேரூராட்சி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**43—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 12054—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஒன்றியம், மணிமுத்தார்குளம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பத்தமடை ஊராட்சியைச் சேர்ந்த மணிமுத்தார்குளம் குடியிருப்பிற்கு 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பத்தமடை பேரூராட்சி குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்புச் செய்யப்பட்டுக் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், 1998 ஆம் ஆண்டில் ஊராட்சி நிர்வாகத்தினால் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, 5000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 3 கையிறைப்பான்களும் பயனில் உள்ளன. இத்திட்டப் பணிகளின் மூலம் இக்குடியிருப்பிற்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 35 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வரும் நிதியாண்டுகளில், தகுதி, தேவை மற்றும் நிதி ஆதார அடிப்படையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப் பரிசீலனை செய்யப்படும்.

**44—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12057—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கீடாம்பட்டி ஊராட்சி, இராஜா குடியிருப்புப் பகுதிக்குத் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, இராஜா குடியிருப்பிற்கு வெங்கடாம்பட்டி





கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குழாய் நீட்டிப்புச் செய்து, குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்பிற்குத் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**45—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 12060—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, மேலக்கோவிலூத்து கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2002 ஆம் நிதியாண்டில் மேலக்கோவிலூத்து குடியிருப்பிற்கு ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

**46—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 12062—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, துப்பாக்குடி 1-வது வார்டு, தெற்குத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, துப்பாக்குடி 1-வது வார்டு தெற்குத் தெரு என்பது, துப்பாக்குடி குடியிருப்பின் பகுதி ஆகும். இக்குடியிருப்பிற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய திட்டம் நிறைவேற்றப் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**47—**

## குடிநீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12147—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஊராட்சி ஒன்றியம், அடைச்சாணி ஊராட்சி, மலையன்குளம் கிராமத்தில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அடைச்சாணி பஞ்சாயத்து, மலையான்குளம் கிராமத்தில் கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி தற்போதுள்ள மக்கள்தொகைக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகும். எனவே, கூடுதல் மேல்நிலைத் தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.



**48—**

## குடிநீர் வசதி

**வினா எண் 12751—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சி, பின்னவாசல் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்டக் குடிநீர்த் தொட்டி ரூ.12,100/- மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 7/2001-ல் அமைக்கப்பட்டுக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**49—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 16447—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியில் 33-வது வார்டில், இந்திய உணவுக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் கடந்த 30 ஆண்டுகளாகக் குடியிருந்து வரும் நலிந்த பிரிவைச் சார்ந்த மக்களுக்கு எப்பொழுது அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள இடம் இந்திய உணவுக் கழகத்திற்குச் சொந்தமானது என்பதால், மாநகராட்சி நிதியிலிருந்து மேற்படி பகுதிக்கு அடிப்படை வசதிகள் ஏதும் செய்ய மாநகராட்சி விதிகளில் வழிவகைகள் ஏதுமில்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**50—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 16570—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு கால்நடை மருத்துவமனைக்கு தினசரி எத்தனை மாடுகள். ஆடுகள், வளர்ப்புப் பிராணிகள் மருத்துவத்திற்கு வருகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி கால்நடை மருத்துவமனைக்கு, சராசரியாக 17 மாடுகளும், 19 ஆடுகளும், 3 வளர்ப்புப் பிராணிகளும், 5 இதர பிராணிகளும், செயற்கை முறைக் கருவூட்டலுக்கு 6 மாட்டினங்களும், ஆக மொத்தம் 50 கால்நடைகள் வருகின்றன. இதுமட்டுமல்லாமல், வாரத்திற்கு 150 கோழிகளுக்கு, கோழிக் கழிச்சல் தடுப்பூசியும் போடப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (குறுக்கீடுகள்) என்ன இது? மார்கழி மாதத்தில் சுண்டல் வாங்குகிற மாதிரி? (சிரிப்பு) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்கள் மூலமாக இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். நேற்றையதினம்கூட நான் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். தமிழ்நாடு அரசு ஆசிரியர்கள்—அரசு ஊழியர்கள் சங்கங்களுடைய, கூட்டுச் சங்கங்களுடைய சார்பில் நடைபெறுகிற ஒரு போராட்டம் குறித்து நேற்றைக்கு இந்த அவையிலே விவாதித்தோம். ஆனால், அரசு அதுகுறித்து ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக, மேலும் அந்த அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை எதிரிகளாக நினைத்து, கைது செய்கிற படலத்தை... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேற்று முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்தது. இப்போது இன்றைக்கு என்னவென்று கேட்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நேற்றையதினம் நான் விஜய் டி.வி.யிலே பார்த்தேன். ஓர் அரசாங்க ஊழியரை அடித்து விரட்டி, ஏதோ காஷ்மீர் பள்ளத்தாக்கிலே இருக்கிற தீவிரவாதியை அடக்குவதைப் போல போலீஸ் இலாகா நடத்திக்கொண்டிருக்கிறது. நான் கேட்கிறேன், இன்றைக்கு நீங்கள் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் மாவட்டங்களிலே, அலுவலகங்களிலே நீதிமன்றங்களிலே, பள்ளிக்கூடங்களிலே அலுவலர்கள் ஆசிரியர்கள் இல்லை. அங்கு வெறிச்சோடிக் கிடக்கிறது. பொது மக்கள் போய்ப் பார்த்தால் ஒரு

[திரு. துரைமுருகன்] [2002 அக்டோபர் 29

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஏன் என்று கேட்பதற்கு ஆள் கிடையாது. நீங்கள் இங்கே கொலு மண்டபத்திலே உட்கார்ந்து இருக்கலாம். ஆட்சி நடத்தலாம். இன்று நீங்கள் இருக்கலாம். நேற்றைக்கு நாங்கள் வீற்றிருந்தோம். இன்றைக்கு நீங்கள். **

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். (குறுக்கீடுகள்) துரைமுருகன் (குறுக்கீடுகள்) இப்போது என்ன பிரச்சினை என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) ஆவேசத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, பிரச்சினை என்ன என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், ஆத்திரம் ஏன் என்று கேட்டால், ஆத்திரப்படக்கூடாதுதான். ** நேற்றைக்குச் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** எது? எது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று பேசுவதெல்லாம் கூடாது. முறை அல்ல அது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இப்போது பிரச்சினை என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) துரைமுருகன் அவர்கள், நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பிரச்சினை என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன பிரச்சினை என்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எது? எது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பிரச்சினை என்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எது? எது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போது எழுந்து பேசியது** என்று பேசிய அந்த வசனங்கள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 அக்டோபர் 29]

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) பிரச்சினையைச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** **என்பதெல்லாம் என்ன unparliamentary-யா? என்ன இது? எதுவும் சொல்லக்கூடாது என்றால், நாட்டிலே என்ன அர்த்தம்? எதிர்க்கட்சிகள் கேட்டால் நம்முடைய நிதியமைச்சர் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரைப் பேசவிடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** தூண்டி விடுகிறார் என்கிறார். நான் இன்றைக்கு நிதியமைச்சருக்குச் சொல்கிறேன். நாங்கள் தூண்டி விடுகிறோமா என்று அல்ல. ஆனால், எதிர்க்கட்சிகள் அத்தனையும் இன்றைக்கு ஆசிரியர்கள் பக்கம். அரசு ஊழியர்கள் பக்கம். இன்று இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், ஆட்சி மெத்தனமாக இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள். நீங்கள் என்ன கேட்கிறீர்கள். அரசிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எனவே நான் இந்த ஆட்சியினரைத் தலைவர் மூலமாகக் கேட்பது; கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்து, வழக்குகளை வாபஸ் வாங்கி, எந்த நிபந்தனையும் இல்லாமல் உடனடியாக இன்று மாலைக்குள்ளாகவே இப்போதே முதலமைச்சர் (கூச்சல்) தலையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக இந்த ஆட்சியினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள்.

*(திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், திரு. ஜி.கே. மணி, திரு. ஜே. ஹேமசந்திரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. ஹேமசந்திரன் சொல்லுங்கள் (குறுக்கீடு) இல்லை, திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள் பரிதி. அவர் சொல்லிவிட்டார். அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அரசு அலுவலகங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. தொடர்ந்து பல நாட்களாக அரசு அலுவலகங்கள் இயங்கவில்லை. பொது மக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பள்ளிக்கூடங்கள் நடைபெறவில்லை. இந்த நிலையில் மக்கள் திகைத்துப் போயிருக்கிறார்கள். அதே நேரத்திலே அரசு அலுவலர்கள் இன்றையதினம் அச்சுறுத்தப்படுகிறார்கள். ஆசிரியர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் கௌரவம் பார்க்காமல் உடனடியாக அரசு அலுவலர்களையும், ஆசிரியர்களையும் அழைத்துப் பேச வேண்டும். கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், இதற்கு மேலும் அரசு காலம் கடத்திக்கொண்டு இருக்காமல், எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அரசு அலுவலர்களுடைய இந்தப் போராட்டத்தை நீட்டிக்கவிடக் கூடாது. ஆசிரியர்கள் போராட்டத்தை நீட்டிக்கவிடக் கூடாது. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அரசாங்கம் இதற்குத் தெளிவான பதில் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த மாமன்றத்திலே எல்லா எதிர்க்கட்சிகளும் கோரிக்கைகளை வைத்து ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேச வேண்டும் என்று வேண்டியதற்கு ஏற்ப, பேசுவதற்கும் தாங்கள் வாய்ப்பு அளித்தீர்கள். எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் எல்லாம் பேசுகிற நேரத்திலே, இன்று தமிழ்நாடு முழுவதும் அரசு அலுவலகங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் மற்றும் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் சொன்ன மாதிரி, இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எல்லாம் மக்கள் பணியை நிறைவேற்ற முடியாமல் அவர்கள் எல்லாம் வெளியிலே இருக்கிறார்கள். பொது மக்கள் அலுவலகங்களுக்குச் சென்று விட்டு, எந்தப் பணியும் நடைபெறவில்லையே என்ற ஏக்கத்தோடு, வருத்தத்தோடு, வெறுப்போடு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்று கல்லூரிகள், பள்ளிகளுக்கு எல்லாம் குழந்தைகள் செல்லவில்லை. ஆசிரியர் பெருமக்கள் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மணி, இது பற்றிய விளக்கங்கள் எல்லாம் திரு. துரைமுருகனும் சொல்லி இருக்கிறார். திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நேற்று முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கமான ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். இப்போது அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதோடு முடியுங்கள்.

*முற்பகல் 11-25*

**திரு. ஜி.கே. மணி:** சொல்லிவிடுகிறேன், சொல்லிவிடுகிறேன். ஆகவே, அந்த வகையிலே, நேற்றே நாங்கள் சொன்னோம். இந்த அரசு, அரசு ஊழியர்களை விரோதிகளாக, எதிரிகளாகப் பார்க்கக்கூடாது. அவர்கள் எல்லாம், என் நாடு, என் மக்கள் என்று பணியாற்றக்கூடிய நிலையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முறையாகக் கோரிக்கைகளை வைத்து, போராட்டத்தை அறிவித்து, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கௌரவம் பார்க்காமல், அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இல்லாமல், உடனடியாக அழைத்துப் பேச வேண்டும். அழைத்துப் பேசுகின்ற நேரத்தில் நிபந்தனை எதுவும் விதிக்கக் கூடாது. அதே நேரத்தில், நடவடிக்கை இல்லை, கைது செய்யப்படவில்லை என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று அவையிலே அறிவித்தார்கள். தொடர்ந்து கைது நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது. அந்தச்

[திரு. ஜி.கே. மணி] [2002 அக்டோபர் 29

சங்கங்களின் பிரதிநிதிகள், பொறுப்பாளர்கள் எல்லாம் சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் வற்புறுத்தி, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, உடனடியாக அவர்களை அழைத்து நிபந்தனையின்றிப் பேச வேண்டும். நிபந்தனை இல்லாமல் எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டும். யாரையும் பழி வாங்கக் கூடாது. தற்காலிகப் பணிநீக்கம், நிரந்தரப் பணிநீக்கம் என்ற நிலைக்கு இந்தப் போராட்டம் சென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதோ அனுமதி அளித்த ஒரு தீர்மானத்தில் பேசுவது மாதிரியல்ல. பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி, நீங்கள் சொல்ல அனுமதி அளித்தேன். அதோடு விடுங்கள் நீங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மனம் இருந்தால் வழியுண்டு என்று சொல்வதுபோல, இந்தப் பிரச்சினையை அரசியல் ரீதியாக அரசு பார்க்கக் கூடாது என்று நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம், இல்லையென்று சொன்னார்கள். வேலைக்காக interview-க்குப் போகிறவன் certificate வாங்கிக் கொள்வதற்குக்கூட அரசு அலுவலகத்திலே போய் ஒன்றும் பண்ண முடியாத நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அரசு கௌரவம் பார்க்காமல், அரசியல் ரீதியாக இந்தப் பிரச்சினையைப் பார்க்காமல், இன்று தமிழக அரசுக்குச் சொந்தமான ஊழியர்களுடைய பிரச்சினை, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு அரசுதான் வழிவகை காண வேண்டுமே தவிர, வேறு யாராலும் அதற்கு வழி காண முடியாது. ஆகவே, அரசு அந்த ஊழியர்களுடைய பிரதிநிதிகளை எந்த நிபந்தனையும் இல்லாமல் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு எடுத்து, தமிழக மக்களுக்கு இந்த நேரத்திலே நன்மை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம். நேற்றையதினமே நாங்கள் இதை வலியுறுத்திச் சொன்னோம். ஆனால், அரசு அதைப் பற்றிக் கண்டுகொள்ளாமல் இருந்தது. அந்தப் போக்கு சரியல்ல. இந்த...



2002 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்கள் சார்பிலே நாங்கள் பணிவன்புடன் கேட்டுக்கொள்வது, அரசு உடனடியாக அவர்களை அழைத்துப் பேச வேண்டும். அடக்குமுறை நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். இன்று சிறையிலே வைக்கப்பட்டிருக்கின்றவர்களை எல்லாம் வழக்கில் மாட்டப் பட்டிருக்கின்றவர்களை எல்லாம் விடுதலை செய்து ஒரு நல்ல நிலையை உருவாக்க வேண்டும். இன்று அரசு நேரடியாக இல்லையென்றாலும்கூட, நடுநிலையாளர்களை வைத்துக்கூட அழைத்துப் பேசி ஒரு சமரசத்தை ஏற்படுத்துவது என்பது நம் நாடு நன்கு பார்த்துக்கொண்டிருக்கின்ற ஒரு விஷயம். அந்த முறையிலேயாவது அரசு—முதலமைச்சர் நீதிமன்றத்தினுடையதெல்லாம் சொன்னார்கள். அதுவெல்லாம் ஒரு சாக்குப்போக்கு. ஆனாலும்கூட, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால்,—இதற்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டுமென்ற மனப்பூர்வமான எண்ணம் அரசுக்கு இருந்தால் அதற்கு வழியுண்டு. அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பணிவன்புடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நான் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுடைய போராட்டத்திற்கு, சென்ற ஆண்டே நம்முடைய நிதியமைச்சர் அவர்களும், நிதித் துறைச் செயலாளர் அவர்களும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசினார்கள். அந்தப் பேச்சுவார்த்தையில் அவர்கள் கொடுத்திருக்கின்ற வாக்குறுதி என்னவென்று சொன்னால், அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, விரைவிலே அந்த நிதி நெருக்கடி தளர்த்தப்படும். அதற்குப் பின்னால், நீங்கள் நடைமுறையிலே என்னென்னவெல்லாம்--போனசையும், பஞ்சப்படியையும்---பெறுவீர்களோ, அதைப் பெற்றுத் தருவதற்கு நானே உத்தரவாதம் எடுத்துக்கொள்கிறேன் என்று வார்த்தையில் மட்டுமல்ல, எழுத்துபூர்வமாகக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி எழுத்துபூர்வமாகக் கொடுக்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டுதான் அவர்கள் கடந்த 10 மாத காலமாக இதைப் புரிந்து, அவர்கள்.....

[2002 அக்டோபர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி அவர்கள், இது விவாதம் கிடையாது. எல்லோருமே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், இதைப் பற்றி. (குறுக்கீடு) இல்லை, அவையினுடைய நேரம் என்பது முக்கியம். 1-30 மணிக்குள் துணை நிதி நிலை அறிக்கையிலே விவாதம் முடிக்க வேண்டும். சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் வேறு எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை. அமைச்சர் அவர்களும், பழைய நிதித் துறைச் செயலாளர் சந்தானம் அவர்களும் கொடுத்திருந்ததைத்தான் திரும்ப நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த விஷயத்தைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன். அந்த வகையிலே 10 மாத காலமாக அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்களே கூப்பிட்டு வைத்து அவர்களோடு பேசியிருந்தால் அது settleஆகி இருக்கலாம். அதற்கெல்லாம் மாறாக, இப்படி ஒரு போராட்டம்; இன்றைக்கு வேலைநிறுத்தம்; இதை அரசு ஊழியர்களுடைய பாதிப்பாக மட்டும் நான் கருதவில்லை, எந்த அளவுக்கு பொது மக்கள், தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றுதான் பார்க்கவேண்டும். ஏதோ அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துகிறவர்களைத் தூண்டிவிடுவதாகவும், இந்தப் போராட்டத்திற்கு மேலும் ஒரு ஆதரவை நாங்கள்.....

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பிரச்சினை என்று கொண்டு வாருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** பொது மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்தால் அல்லது கதவடைப்புச் செய்தால், ஓராண்டு காலத்திற்கு அந்தப் பணிகளை நிறைவேற்ற முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். இதில் விவாதத்திற்கு இடமில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) பழனிசாமி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அரசு இதை உணர வேண்டும். நல்ல நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை நீங்கள் settle பண்ண வேண்டும். தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி இதனால் தடைப்படும். அந்த நல்ல நோக்கத்தோடு, இந்தப் பிரச்சினையில் ஒரு நல்ல தீர்ப்பினை,



2002 அக்டோபர் 29] [திரு. ஜி. பழனிசாமி]

பேச்சுவார்த்தை—நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை—நடத்துவதற்கு அரசால் இங்கே வாக்குறுதி கொடுக்கப்பட வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய போராட்டம் விரிவாக 4, 5 நாட்களாக நடைபெற்று வருகின்றது. இதை மேலும் நீட்டிக்க விடாமல், ஓர் அமைதியான சூழ்நிலையை உண்டாக்கி அவர்களிடம் எந்த நிபந்தனையும் இல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். தவிர, அரசு தற்காலிக வேலைநீக்க உத்தரவு எதையும் செய்யாமல், ஒரு சுமுகமான சூழ்நிலையை உண்டாக்கி, வருகின்ற தீபாவளிக்குள் ஒரு நல்ல தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் சம்பந்தமாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், போராட்டத்தைக் கைவிட்டு என்னோடு பேச வாருங்கள் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அரசு அதிகாரிகளுக்கு, ஆசிரியர்களுக்கும் அவ்வளவு பெரிய கௌரவம் இருக்குமென்று சொன்னால், பல கோடி மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்து இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே வந்திருக்கிறவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கௌரவம் இருக்காதா? எனவே, அனைத்துக் கட்சித் தலைவர்களும், ஆசிரியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அறிவுரை கூறி போராட்டத்தை வாபஸ் பெற வைத்து, அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வருவதுதான் முறையாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதிலே நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? உங்கள் கருத்தைச் சொன்ன மாதிரி அவர் கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். மாண்புமிகு நிதியமைச்சர் (குறுக்கீடு) உட்காருங்கள்.

[2002 அக்டோபர் 29

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், point of order ஒன்றும் இல்லை. உட்காருங்கள். உட்காருங்கள். நிதியமைச்சரைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு) நிதியமைச்சரைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு) கிடையாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன், ஞானம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் சொல்லட்டும். அதற்குப் பிறகு பேசுங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் மிகவும் உணர்ச்சிகரமாக நிறையப் பேசினார்கள். அரசு அலுவலர்களுடைய போராட்டத்தைப் பொறுத்தவரைக்கும், அரசு யாரையும் அழைத்துப் பேசவில்லை என்ற குற்றச்சாட்டு, உண்மையிலேயே தவறான குற்றச்சாட்டு. C & D Union, N.G.O. Union வந்து, முதலமைச்சரைப் பார்க்க வேண்டுமென்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி தந்தார்கள். அவர்கள் பேசினார்கள். பிற பிரிவினர் பேச்சுவார்த்தை வேண்டுமென்று எங்களை அணுகவில்லை. பேச்சுவார்த்தை வேண்டுமென்று என்னையும் கேட்கவில்லை; முதலமைச்சரையும் கேட்கவில்லை. அப்படிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கோராமல், நேரடியாகப் போராட்டம், வேலைநிறுத்தம் என்று சென்று விட்டதுதான் துரதிர்ஷ்டமான ஒன்று என்பதை அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) I am coming to it. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடிக்கட்டும், துரைமுருகன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன். Kindly permit me to conclude my speech. வேலைநிறுத்தத்திற்கு முன்னால் முதலமைச்சர் அவர்களையோ, என்னையோ சந்தித்துப் பேசவேண்டுமென்ற கோரிக்கையைத் தற்போது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற சங்கங்கள் கோரவில்லை என்றுதான் நான் கூறினேன். ஆனால், அதற்கு மாறாக, பெரும்பான்மைச் சங்கங்களான N.G.O. சங்கமும்,



2002 அக்டோபர் 29] [திரு. சி. பொன்னையன்]

C & D பிரிவும் பேச்சுவார்த்தை வேண்டுமென்று கேட்டு, பேச்சுவார்த்தைக்கு வந்து பேசினார்கள். பேசியபோது, பேச்சுவார்த்தையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின் அடிப்படையில்தான் D.A. 4 சதவீதம் என அறிவிக்கப்பட்டது. மத்திய பிரதேசத்திலே 4 சதவீதம் D.A. இல்லை; ஆந்திர பிரதேசத்திலே 4 சதவீதம் D.A. இல்லை; மேற்கு வங்கத்திலே 4 சதவீதம் D.A. இல்லை. பல மாநிலங்களில் 4 சதவீதம் D.A. இல்லை. ஆனால், நிதி நெருக்கடி உச்சக்கட்டத்தில் இருந்தபோதிலும்கூட, அரசு ஊழியர்கள் இந்த அரசு இயந்திரத்தை இயக்கக்கூடியவர்கள், அவர்கள் அரசின் கஷ்ட நிலையிலும் பரிவுடன் நடத்தப்பட வேண்டும்; அவர்களுக்கு வசதிகள் தேவை என்ற உணர்வோடுதான், தாய் உணர்வோடு புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய நிதி நெருக்கடியிலும் 4 சதவீதம் என்பதனை அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஒரு வேளை, புரட்சித் தலைவி அவர்கள் இந்த 4 சதவீதம் அறிவிக்கமாட்டார் என்ற ஒரு கற்பனையிலோ அல்லது அறிவிக்கமாட்டார் என்று பிறர் சொன்னதை நம்பி ஏமாந்த காரணத்தினாலோ (மேசையைத் தட்டும் ஒலி) சில சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவிட்டார்கள் என்றுதான் நான் அஞ்சுகிறேன். இது வேதனைக்குரிய ஒன்றுதான்.

*முற்பகல் 11-35*

அதுமட்டுமல்ல, தற்போது கிட்டத்தட்ட 65 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் அரசு ஊழியர்கள் N.G.O. சங்கத்தில்தான் என்று கூறப்படுகிறது. Maximum strength of the employees are said to be in the N.G.O. Union. It is an open talk known to everybody. அவர்கள் முழுமையாகப் பணிக்குச் செல்கிறார்கள். C & D பிரிவினர் பணிக்குச் செல்கிறார்கள். எல்லாப் பிரிவினரும் சேர்த்து சுமார் 65 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதம் பணியாளர்கள் அரசினுடைய நிதி நெருக்கடியை உணர்ந்து, அந்த நிதி நெருக்கடியிலும் புரட்சித் தலைவி அவர்கள் 4 சதவிகிதம் D.A. கொடுத்ததை— பிற மாநிலங்கள் கொடுக்காதபோது, இங்கு கொடுத்ததை— வெகுவாகப் பாராட்டி (மேசையைத் தட்டும் ஒலி) பணிக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலையை மனதில் கொண்டு, என்னுடைய பணிவான வேண்டுகோள்; முதலமைச்சர் சார்பில் பணிவான வேண்டுகோள்; வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற பணியாளர்கள் தயவுசெய்து வேலைநிறுத்தத்தை விட்டுவிட்டு, முதலமைச்சரைச் சந்திக்க வருமாறு அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[2002 அக்டோபர் 29

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இருங்கள், பேசி முடிக்கிறேன். Mr. Parithi, I will come to it. Mr. Parithi, kindly permit me. கைது செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கையை மிகைப்படுத்திப் பேசப்பட்டது. ESMA பிரயோகப்படுத்தப்படவில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் நேற்றே தெளிவாக்கியிருக்கிறார்கள். 15 பேர்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வன்முறையில் ஈடுபட்டவர்கள். அதிலும் குறிப்பாக, பெண் அரசு ஊழியர்கள் பணிக்குச் செல்கிறபோது, அங்கு கெட்ட வார்த்தைகளில் பேசி, கேலி செய்ததாகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகக் கைது செய்யப்பட்டதே 15 பேர்தான் என்ற உண்மை நிலை இருக்கிறபோது, சிறைச்சாலைக்குப் பலரை அனுப்பிவிட்டோம் என்று சொல்வது, உண்மைக்கு மாறான ஒன்று என்பதனை நான் அவைக்குப் பணிவோடு சொல்ல விரும்புகிறேன்.

இதை அரசியல்ரீதியாக இந்த அரசு பார்க்கவில்லை; அடக்குமுறை உணர்வோடு இந்த அரசு இதைப் பார்க்கவில்லை. பணியாளர்கள் எல்லாம் பணிக்குத் திரும்பி வரவேண்டும். சுமுகமான ஒரு நிலை உருவாக வேண்டும் என்பதை உணர்ந்து, அவர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும். அதற்கு அரசியல் கட்சிகள் எல்லாம், தமிழகத்தினுடைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, இந்தியாவிலே பிற மாநிலங்களில் இந்த D.A.—அகவிலைப்படி—எப்படி நடைமுறையில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாத ஒன்று அல்ல என்பதையும் கருத்தில் கொண்டு, இந்த நிலையிலும் பெரிய மனதோடு D.A. 4 சதவிகிதம் தந்த புரட்சித் தலைவி அவர்களுடைய மன உணர்வை நீங்கள் புரிந்துகொண்டு, அந்தச் சங்கங்களை எல்லாம் வேலைக்குத் திரும்புமாறு பணிவோடு கேட்க உங்களையும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்):*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பெரும்பாலோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததற்குப் பிறகு (குறுக்கீடு) துரைமுருகன், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. சொல்வதைக் கேளுங்கள். நேற்றையதினம் ஒத்திவைப்புத் தீர்மானம் என்று கொடுத்ததற்குப் பிறகு



2002 அக்டோபர் 29] [பேரவைத் தலைவர்]

முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்குப் பிறகு அந்தப் பிரச்சினை சம்பந்தமாக எடுத்துக்கொள்வதற்கே வழி கிடையாது; எடுப்பதற்கு அனுமதி அளிப்பதும் கிடையாது. என்றாலும், பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இத்தனை தலைவர்களையும் நான் பேச அனுமதித்தேன். அரசின் தரப்பிலே அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே வேறு எதற்கும் இடம் இல்லை. அடுத்த நிகழ்ச்சிக்குப் போகலாம். (குறுக்கீடுகள்) சேலம் மாவட்டம்...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், இனி இதில் விவாதத்திற்கு இடம் கிடையாது. (குறுக்கீடுகள்) இனி இதிலே விவாதத்திற்கு நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இனிமேல் இது தொடர்பாகப் பேசுவது எதுவும் நான் அவைக் குறிப்பிலே ஏறுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) ஒத்திவைப்புத் தீர்மானத்தை நேற்றுக் கொண்டு வந்தீர்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தை அளித்தார்கள். அதற்குப் பிறகு அது சம்பந்தமான பிரச்சினையை அவையிலே எழுப்புவதற்கு யாரும் அனுமதித்ததே கிடையாது. என்றாலும், பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி உங்களை இப்போது பேசுவதற்கு அனுமதித்தேன். மீண்டும், மீண்டும் இதை விவாதப் பொருளாக ஆக்குவதற்கு நான் அனுமதிக்க முடியாது.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி. ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

முற்பகல் 11-40

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு, தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)

என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இனிமேல் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து எட்டாவது மற்றும் ஐம்பத்து ஒன்பதாவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்பாக வந்து அமர்ந்துகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

## (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன், (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

***திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதிமூன்றாவது மற்றும் பதினான்காவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)



# 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

## (அ) தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு-மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு-மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு-மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

## (ஆ) குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல், தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

[2002 அக்டோபர் 29

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.





## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003* ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205 read with clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2002-2003."

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது—தொடர்ச்சி

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கை தட்டி, கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் கண்ணியத்திற்கு மாறாகவும், அவையின் விதிமுறைகளை மீறியும், கோஷம் போட்டும், உட்கார்ந்துகொண்டு தர்ணா செய்தும், அரசினுடைய நிதி நிலை என்ன என்பதை, அரசு ஊழியர்கள் பிரச்சினையில் எத்தகைய நல்ல அணுகுமுறையை அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கூறிய பிறகும், அவையினுடைய கண்ணியத்தைப் பாதிக்கின்ற வகையில் இப்படிப்பட்ட அவை மரபை மீறிய செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக சட்டப் பேரவை உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு வழியே இல்லை. இவ்வளவு நேரமும் அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற வகையில் கோஷம் போட்டுக் கொண்டும், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் போலக் கை தட்டிக் கொண்டும் இருக்கக்கூடிய உறுப்பினர்களை அவையிலேயிருந்து வெளியேற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் தரையில் அமர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)*

திரு. துரைமுருகன் அவர்கள், இப்படி தரைமுருகன் ஆகக்கூடாது. அனைவரையும் அவைக் காவலர்கள் வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்)*

நேற்றைக்கும் இதே முறையைக் கடைப்பிடித்தார்கள். இன்றைக்கும் இதே முறையைக் கடைப்பிடிக்கிறார்கள். எனவே, இரண்டாவது முறையாக வெளியேற்றப்படுகிறார்கள்.

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003* ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கைமீது விவாதமும் வாக்கெடுப்பும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002-2003* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய *25-10-2002* ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் *2002-2003* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் தொடர்ந்து நின்று கொண்டு, கோஷமிட்டுக் கொண்டிருந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 925, திரு. எஸ்.ஏ.எம். உசேன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 10, திரு. சி. ஞானசேகரன்.

(முன்மொழியப் பெறவில்லை).

வெட்டுத் தீர்மானம் எண் 605, திரு. ஜி.கே. மணி.

(முன்மொழியப் பெறவில்லை) (குறுக்கீடுகள்)

வெட்டுத் தீர்மானம் எண் 661, திரு. ஐ. கணேசன்.

(முன்மொழியப் பெறவில்லை) (குறுக்கீடுகள்)

வெட்டுத் தீர்மானம் எண் 23, திரு. கே.சி. கருணாகரன்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 149, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுவதையும் தொலைக்காட்சியில் ive-ஆக ஒளிபரப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.45,03,000/-ல் ரூ.1/-குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 152, திரு. டி. மணி (குறுக்கீடுகள்)

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 438, திரு. வி.கே. லட்சுமணன்.

(முன்மொழியப் பெறவில்லை)



வெட்டுத் தீர்மானம் எண் 452, திரு. தி. வேல் முருகன்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 474, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 506, திருமதி எஸ். மகேஸ்வரி.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 536, திரு. க. முருகவேல் ராஜன், (குறுக்கீடு) திரு. க. முருகவேல் ராஜன், வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறீர்களா?

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 678, திருமதி காசாம்பு பூமாலை.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 724, திரு. கி. பாரிமோகன்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 822, திரு. அ.இரா. மலையப்பசாமி.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 887, திரு. டி.கே. இராஜா.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 923, திரு. எஸ். நடராஜன்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 965, திரு. என். நன்மாறன்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 220, திரு. கே. ஆறுமுகம்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 305, திரு. கோவை தங்கம்.

(முன்மொழியப் பெறவில்லை)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 802, திரு. கே.வி. முரளிதரன்.

(முன்மொழியப் பெறவில்லை)

வெட்டுத் தீர்மானம் எண் 342, திரு. கா. சுந்தசாமி.

(முன்மொழியப் பெறவில்லை)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 931, திரு. இ. புகழேந்தி.

(முன்மொழியப் பெறவில்லை)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. பேரவை விதிகளின்படி, இன்று விவாதமும், பதிலுரையும் சரியாக 1-30 மணிக்கு முடிந்து வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதை உறுப்பினர்கள் மனதிலே



கொண்டு, சுருக்கமாகப் பேசும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு. பி.எம். நரசிம்மன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் தொடர்ந்து நின்று கொண்டு, கோஷமிட்டுக் கொண்டிருந்தார்கள்.)

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுக்கான...

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அனைவரும் முதலில் உட்காருங்கள், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் மூத்த உறுப்பினர். உட்காருங்கள், மணி, உட்காருங்கள், பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் நீங்கள் அனைவரும் உட்கார வேண்டுமென்று விதி இருக்கிறது. முதலில் அந்த விதியைக் கடைப்பிடியுங்கள். அமருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அமருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அமருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, பேரவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் இங்கே கோஷம் போடுவது, கை தட்டுவது, உட்கார்ந்து கொண்டு தர்ணா செய்வது, இவையெல்லாம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல, நேற்றே அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். திரு. துரைமுருகன் அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டுப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, அவர் போனதற்குப் பிறகும் இங்கேயே அமர்ந்து கொண்டு அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த காரணத்தால் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். நீங்களெல்லாம் மூத்த உறுப்பினர்கள். நேற்று இது ஒத்திவைப்புப் பிரச்சினையாக வந்தது. நேற்று எடுத்துக்கொள்ளப்படுவதாகவே இல்லை. ஆனாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி அளித்து, அவர்களைப் பேசவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள்.

பொன்முடி அவர்கள் பேசினார்கள். அவர்களின் விருப்பம்போல் பேசுவதற்கெல்லாம் இடம் அளிக்கப்பட்டது. எல்லாவற்றையும் கேட்டதற்குப் பிறகு, முதலமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட அறிக்கையை, விளக்கமாக, தெளிவாக அவர்கள் பதிலுரையாகப் படித்தார்கள். அதற்குப் பிறகுதான் அந்தப் பிரச்சினையில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இன்றைக்கு எல்லாத் தலைவர்களையும் நான் பேசுவதற்கு அனுமதித்தேன். எல்லோரும் உங்களுடைய உணர்வுகளைச் சொன்னீர்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். அரசின் சார்பிலே கண்ணியமாக, சொல்ல வேண்டிய கருத்துகளை அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு சொன்னதற்குப் பிறகும், உங்களுடைய பிரச்சினையை நீங்கள் பதிவு செய்வதற்கு நான் இடம் அளித்ததற்குப் பிறகும், மீண்டும், மீண்டும் இதிலே தகாறு செய்து கொண்டிருப்பது முறையல்ல. அரசு ஊழியர்கள், அலுவலர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். மிக முக்கியமான பிரச்சினை. இன்றைக்கு திரு. ஹேமச்சந்திரன், திரு. பழனிசாமி போன்றவர்கள் என்னுடைய அறையிலேகூட வந்து கேட்டார்கள். நான்கூடச் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் இருந்தால், நீங்கள் பிரச்சினையைக்கூடக் கிளப்புங்கள், நான் அனுமதி அளிக்கிறேன் என்றுதான் சொன்னேன். பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதித்தான் அனைத்துத் தலைவர்களுக்கும் நான் பேச அனுமதி அளித்தேன். அப்படி அனுமதித்ததற்குப் பிறகும், இப்படி அவைக்குள்ளே குழப்பம் விளைவிப்பது என்பது முறையற்றது. இது அரசியல் காரணத்திற்காகச் செய்யப்படக்கூடியது என்பது எனக்குத் தெரிகிறது. அரசியல் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகள், விதிமுறைகள் ஆகியவை எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மூத்த உறுப்பினர்கள் கொஞ்சம் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-50*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது மிக முக்கியமான பிரச்சினை. தமிழகம் முழுவதும் இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அரசு அலுவலகங்களில் 65 சதவிகிதம், 70 சதவிகிதம் வேலைக்கு வருவதாக நிதி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டாலும்கூட, எங்களுக்கு மாவட்டங்களிலிருந்து வருகின்ற செய்திகள்; அரசு அலுவலகங்கள் இயங்கவில்லை என்பதுதான் உண்மை. அதேபோலப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. அவர்களை அழைத்துப் பேச வேண்டும். அரசு நிபந்தனையில்லாமல் அழைத்துப் பேசவேண்டும். அழைத்துப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் இங்கே வைத்தோம். ஆனால், கொஞ்சம்கூட அந்தக் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல், தான் சொன்னதையே மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டு இருந்தாரே தவிர, புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்; எடுக்கப்படவிருக்கின்ற நடவடிக்கைகளைத் தயவுசெய்து தவிர்த்து விடுங்கள். ஏற்கெனவே கைது செய்தவர்களை விடுதலை செய்யுங்கள். யாரையும் கைது செய்வேன், நடவடிக்கை எடுப்பேன் என்று அச்சுறுத்தாதீர்கள். அரசு ஊழியர்கள்மீதும், சாலைப் பணியாளர்கள்மீதும் நடத்திய தடியடி கண்டிக்கத்தக்க ஒன்று. இத்தனை பிரச்சினை இருக்கும்போது, மீண்டும் அந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், அழைத்துப் பேச வேண்டும் என்று சொன்னால், அழைத்துப் பேச மாட்டோம் என்று சொன்னதற்குப் பின்னாலே, நாங்கள் பேசாமல் வாய் மூடி இருந்தால் மக்களுடைய பிரச்சினையை இங்கே நாங்கள் பிரதிபலிப்பதாக ஆகாது. எனவே, ** எங்களைப் பொறுத்தவரையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. ** அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதற்காகவே பிரச்சினையை விளைவிக்கிறார்கள். இங்கே வந்து முன்னாலே உட்கார்ந்ததற்குப் பிறகு, அவர்களை நான் என்ன செய்வது? இங்கே கோஷம் போடுகிறபோது என்ன செய்வது? அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிறபோது என்ன செய்வது? இதை எஸ்.ஆர்.பி. அவர்கள் இப்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு நியாயப்படுத்த முயற்சி செய்யக்கூடாது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர்கள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அப்படி வைத்துக்கொள்வோம். அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், தொடர்ந்து சபையிலே நாங்கள் இருப்பது சரியாக இருக்காது. எனவே, இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இந்த முக்கியமான பிரச்சினையில் அரசாங்கம் எடுத்திருக்கிற அணுகுமுறை சரியானதல்ல, ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைக் கூறி, அவர்களை நடத்திய விதத்தையும் நாங்கள் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் எங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேற்றும் வைத்தோம், இன்றும் வைத்தோம். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எல்லாம் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார்கள். அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக, வரவேற்கக் கூடியதாக இருந்தாலும்கூட, பேச்சுவார்த்தை என்பது நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையாக இருக்க வேண்டும். போராட்டத்தைக் கை விட்டுவிட்டு வர வேண்டும் என்று சொல்லி அழைப்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஏற்கெனவே நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி விட்டீர்கள்; பதிவு செய்துவிட்டீர்கள். இப்போது உங்களுடைய நடவடிக்கை என்ன? அதை மட்டும் சொல்லிவிட்டுப் போக வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இது அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மட்டும் பாதிப்பு என்ற நிலையிலே இல்லாமல், நாட்டு மக்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையைக் கருதி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** இந்தச் சபையிலே எதிர்க்கட்சிகளை வைத்து சபையை நடத்தமாட்டீர்களா? (குறுக்கீடுகள்)



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** கொஞ்சம் இருங்கள், (குறுக்கீடுகள்) நான் பேசுவதைக் கொஞ்சம், கேளுங்கள் (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி அவர்கள் கொஞ்சம் அமர வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசு ஊழியர்களையும், பள்ளி ஆசிரியர்களையும் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் இங்கே கூறியிருக்கிறார்கள். நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்று சொன்னால், அரசு ஊழியர்களிடம் அரசு புதிதாக என்ன பேச முடியும்? அரசின் நிலைப்பாட்டை, அரசின் நிதி நிலைமையை ஏற்கெனவே தெளிவாக அரசு ஊழியர்களுக்கு, பல்வேறு சங்கங்களுக்கு விளக்கிக் கூறியிருக்கிறோம். முதலமைச்சரை, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள் சந்திக்கவில்லையே தவிர, தலைமைச் செயலாளர் அவர்களையும், நிதிச் செயலாளர் அவர்களையும் அவர்கள் ஏற்கெனவே சந்தித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-55*

நிதிச் செயலாளர் அவர்களும், அவரைச் சார்ந்த அலுவலர்களும் ஏற்கெனவே பல முறை, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற பல்வேறு அரசு அலுவலர் சங்கங்களின் தலைவர்களோடு, பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அரசின் நிலைமையை, நிலைப்பாட்டை ஏற்கெனவே பல முறை நான் தெளிவாக்கியிருக்கிறேன். இப்போது மீண்டும் நான் எடுத்துக் கூறுகிறேன். இந்த அவையே நியாயம் கூறட்டும். பொது மக்களும் நியாயம் கூறட்டும். இன்றைய நிலைமையில், தமிழ்நாடு அரசு மிகவும் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு தத்தளித்துக் கொண்டிருக்கிறது. மூழ்கிப் போகாமல் இருப்பதற்கு, திவால் ஆகாமல் இருப்பதற்கு அரசு பல கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நடவடிக்கைகளால் ஏழையெளிய மக்களை, பொது மக்களை பாதிக்கும் வகையில்கூட சில நடவடிக்கைகளை வேறு வழியின்றி, கனத்த இதயத்தோடு இந்த அரசு எடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது.

நீங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசின் மொத்த வருவாயில், அதாவது, அரசுக்கு வரக்கூடிய வரிப் பணத்தில் 94 சதவீதம் அரசு

[செல்வி ஜெ.,ஜெயலலிதா] [2002 அக்டோபர் 29

ஊழியர்களுக்கே செலவிடப்படுகிறது. சம்பளங்கள், ஓய்வூதியம், அகவிலைப்படி, இப்படிப் பல்வேறு படிகள் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அரசுக்கு வருகின்ற மொத்த வருவாயில் 94 சதவீதம் இந்த அரசு ஊழியர்களுக்கே போகிறது என்று சொன்னால்—அரசு ஊழியர்கள் மாநிலத்தின் மொத்த ஜனத்தொகையில் 2 சதவீதம்தான்—இதில் என்ன நியாயம் இருக்கிறது? அரசுக்கு வருகின்ற மொத்த வருவாயில் 94 சதவீதம், ஜனத்தொகையில் 2 சதவீதம் பேருக்கே செலவிடப்படுகிறது. மீதமுள்ள 6 சதவீதத்தில் நாம் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டும், வட்டியைத் திருப்பிக் கட்ட வேண்டும்; அப்போது வளர்ச்சிப் பணிகளுக்கென்று என்ன இருக்கிறது? சராசரி ஏழையெளிய மக்களுக்கென்று செலவிடுவதற்கு அரசிடம் என்ன இருக்கிறது?

அரசு ஊழியர்களுக்கு ஏற்கெனவே பாதுகாப்பு இருக்கிறது, அவர்களுக்கு job guarantee இருக்கிறது. வேலைக்கு உத்தரவாதம் இருக்கிறது. அவர்கள் ஓய்வு பெற்ற பிறகும் அவர்களுக்கு pension கிடைக்கிறது. இன்னும் எத்தனையோ சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. எப்போது ஒருவர் அரசாங்கப் பணியில் சேர்ந்து விடுகிறாரோ. இனி அவர் காலம் முழுவதும். அவர் மரணம் அடையும் வரையில் அவருக்கு முழுப் பாதுகாப்பை இந்த அரசு வழங்குகிறது. அவருக்கு மட்டுமல்ல, அவருடைய வாரிசுகளுக்கும் பின்னர் இந்த அரசாங்கம் முழுப் பாதுகாப்பை அளித்து வருகிறது. ஆனால், மீதமுள்ள 98 சதவீதம் மக்கள் இருக்கிறார்களே, பொது மக்கள், அவர்களுக்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? அவர்களுக்கு இந்த அரசால் என்ன செய்ய முடிகிறது? மொத்த ஜனத்தொகையில் 2 சதவீதம் பேருக்கு அரசின் மொத்த வருவாயில் 94 சதவீதம் போகிறது என்று சொன்னால், 98 சதவீதம் மக்களுக்கு இந்த அரசு என்ன செய்ய முடிகிறது? நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது காவிரிப் படுகையில்—Cauvery Basin—இருக்கின்ற மாவட்டங்களில் குறுவைச் சாகுபடி பாதிக்கப்பட்டதால், அந்த ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு, நிலமற்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு, தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதற்குக்கூட வழிவகை இல்லாததால்தான் நேற்றையதினம் இந்த அரசால்—அந்த ஒரு வேளை, தீபாவளித் திருநாளன்றாவது அவர்கள் நன்றாகச் சமைத்து வயிறாரச் சாப்பிடட்டும் என்பதற்காக—21 கோடி ரூபாய் மதிப்பில் (மேசையைத் தட்டும் ஒலி) தீபாவளிப் பரிசு



2002 அக்டோபர் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வழங்குவதாக நேற்று அறிவிக்கப்பட்டது. அரிசி, சர்க்கரை, இனிப்பு, நெய், காய்கறி போன்ற பொருட்களோடு 50 ரூபாய் ரொக்கமும் தருவதாக அறிவித்திருக்கிறோம். இதனால் பயன் பெறுபவர்கள் 10 இலட்சம் பேர் அல்ல; 10 இலட்சம் குடும்பங்கள் என்பதை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 10 இலட்சம் குடும்பங்களுக்கு இத்தகைய ஒரு தீபாவளிப் பரிசை வழங்குவதற்கு அரசுக்கு ஆகின்ற செலவு 21 கோடி ரூபாய். ஆனால், இன்றையதினம் இவ்வளவு நிதி நெருக்கடியிலேயும் அரசு ஊழியர்களுக்கு 4 சதவீதம் அகவிலைப்படி தருகிறோம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறோமே, அதற்கு எவ்வளவு செலவாகிறது தெரியுமா? இந்த 4 சதவீதம் அகவிலைப்படி தருவதற்கு மாதம் ஒன்றுக்கு 22 கோடி ரூபாய் இந்த அரசுக்குச் செலவாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் என்ன நியாயம் இருக்கிறது? நீங்களே சொல்லுங்கள். 98 சதவீதம் பேர், ஏழையெளிய மக்களின் வாழ்வு முக்கியமா? அல்லது ஏற்கெனவே முழுப் பாதுகாப்போடு இருக்கின்ற அரசு ஊழியர்கள், 'எங்களுக்கு இன்னும் தாருங்கள். இன்னும் தாருங்கள்' என்று கேட்டுக்கொண்டே இருந்தால், அவர்களைத் திருப்திப்படுத்துவது முக்கியமா? ஆனால், அரசினுடைய நிதி நிலைமை சீராக இருந்தபோது, அரசாங்க ஊழியர்களுக்கு என்னென்ன வழங்க வேண்டுமோ, என்னென்ன படிகள் வழங்க வேண்டுமோ, அவற்றைத் தங்குதடையின்றி வழங்கியிருக்கிறது இந்த அரசு.

நண்பகல் 12-00

1991 முதல் 1996 வரை நான் முதலமைச்சராக இருந்தபோது, இந்த ஆட்சி இருந்தபோது, அன்றையதினம் நிதி நிலைமையைச் சீராக வைத்திருந்தோம். அன்றையதினம் இத்தகைய போராட்டங்கள் எழவில்லையே! அப்படி ஒரு சூழ்நிலையே வரவில்லையே! எழவில்லையே! அன்றையதினம் எப்பொழுதெல்லாம் அரசு ஊழியர்களுக்கு போனஸ் வழங்க வேண்டி இருந்ததோ, வழங்கினோம். எப்பொழுதெல்லாம் அவர்களுக்கு அகவிலைப்படி வழங்க வேண்டியிருந்ததோ, வழங்கினோம். அன்றையதினம், போனஸ் வழங்கவில்லை, அகவிலைப்படி வழங்கவில்லை என்பதற்காக யாரும் போராட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படவில்லை. அத்தகைய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கவில்லை. அத்தகைய ஒரு சூழ்நிலை எழ நாங்கள் அனுமதிக்கவில்லை. ஆனால், 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சி நடைபெற்ற காலத்தில் அவர்கள் தமிழகத்தின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 அக்டோபர் 29

பொருளாதாரத்தை, நிதி நிலைமையைக் குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள்; முற்றிலும் சீரழித்துவிட்டார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அரசு கஜானா காலி; அரசே திவால் ஆகின்ற ஒரு சூழ்நிலையிலேதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது, மாநிலத்தின் பொருளாதாரத்தை மீண்டும் எப்படி ஒரு ஆரோக்கியமான நிலைக்குக் கொண்டு வருவது என்பதற்காகப் பல்வேறு கடுமையான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நீங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொது விநியோக முறையில் நியாய விலைக் கடைகளில் ஏழை எளிய மக்களுக்கு வழங்கும் அரிசியின் விலையை ஏற்றியிருக்கிறோம் என்று சொன்னால், எவ்வளவு கனத்த இதயத்தோடு நாங்கள் அதைச் செய்து இருக்கிறோம்? ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும் 20 கிலோ ரேஷன் அரிசியில் 10 கிலோவை பழைய விலைக்கே, 3 ரூபாய் 50 பைசா என்ற விலைக்கு வழங்கி, மீதம் உள்ள 10 கிலோவை, கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய் என்ற விலைக்கு இன்றைக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழி வந்தவர்கள் நாங்கள். அதை நாங்கள் விரும்பிச் செய்வோமா? வேறு வழி இன்றிச் செய்கிறோம். ஆகவே, அரசினுடைய நிதி நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது. இப்பொழுது நியாயத்தை நீங்களே கூற வேண்டுமென்று—எதிர்க்கட்சி உறுப்பினர்களே கூற வேண்டுமென்று—கேட்டுக் கொள்கிறேன். ஏழை எளிய மக்களுக்கு, மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கின்ற மக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையை நாங்கள் உயர்த்துகின்ற கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். பொது மக்களுக்கு ஒரு பாதிப்பு ஏற்படும் வகையில் இந்தக் கசப்பான முடிவை நாங்கள் எடுத்திருக்கிறோம். அப்படி இருக்கின்றபோது, ஒரு distress, ஒரு நெருக்கடி என்று சொன்னால், அரசாங்க ஊழியர்களுக்கு அதில் பங்கு இல்லையா? எங்களுக்கு போனஸ் தந்துதான் ஆகவேண்டும், எங்களுக்கு அகவிலைப்படி தந்துதான் ஆகவேண்டும் என்று முரண்டு பிடித்தால் எப்படி? அரசிடம் இருந்தால் நாங்கள் தர மாட்டோமா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏற்கெனவே பாதுகாப்போடு இருக்கின்ற அரசு ஊழியர்கள், மேலும் தாருங்கள், தாருங்கள் என்றால், எங்கே போவது? 78 இலட்சம் குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள். இந்தக் குழந்தைகளுக்கு, ஒவ்வொரு குழந்தைக்கும் 23 பைசா, காய்கறி வாங்குவதற்கு, விறகு வாங்குவதற்கு, சமையல் எண்ணெய் வாங்குவதற்கு, இதுபோன்ற



2002 அக்டோபர் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பொருட்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இது எப்போதோ நிர்ணயிக்கப்பட்ட தொகை. இதை ஏற்ற வேண்டுமென்று சத்துணவுக் கூடங்களிலிருந்து, சத்துணவு அமைப்பாளர்கள் அனைவரும் கேட்டார்கள். அதனால், போன முறை, கடந்த பட்ஜெட் நடந்தபோது, 12 பைசா ஏற்றுகிறோம், ஒரு குழந்தைக்கு 12 பைசா ஏற்றுகிறோம், ஆக மொத்தம், ஒரு குழந்தைக்கு 35 பைசா ஒதுக்குகிறோம் என்று அறிவித்தோம். ஆனால் நேற்று வரை அதை அமல்படுத்த முடியவில்லை. அதற்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகின்ற செலவு 53 கோடி ரூபாய்தான். ஆனால், அந்த 53 கோடி ரூபாய்க்கே அரசிடம் வழியில்லை. அதனால் 78 இலட்சம் ஏழைக் குழந்தைகள் சாப்பிடுகின்ற சத்துணவுக்கு, ஒரு குழந்தைக்கு 12 பைசா வீதம் கூட்டித் தருவதற்கு இந்த அரசிடம் வழிவகை இல்லாதபோது, ஏற்கெனவே நல்ல நிலைமையில் இருக்கின்ற அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 22 கோடி ரூபாய் செலவாகும் அகவிலைப்படியை 4 சதவிகிதம் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், இதற்கு மேல் இந்த அரசு என்ன செய்ய முடியும்? பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும், பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்று சொன்னால், மீண்டும் அவர்களை அழைத்து என்ன பேச முடியும்? இந்த 4 சதவிகிதம் அகவிலைப்படியே போதும் என்று, உள்ள நிலைமையை உணர்ந்து அவர்கள் திருப்தி அடைவதாக இருந்தால், இப்பொழுதே போராட்டத்தைக் கை விட்டுவிட்டுப் பணிக்குத் திரும்பலாமே? எங்கள் நிலையை நாங்கள் சொல்லிவிட்டோம். அவர்கள் மேலும், இன்னும் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். Leave surrender encashment facility, Bonus, இன்னும் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை ஏற்கின்ற நிலைமையில் அரசாங்கம் இல்லை.

பிற்பகல் 12-05

அவர்களை அழைத்து என்ன பேசுவது? ஏற்கெனவே எங்கள் நிலையைத் தெளிவுபடுத்திவிட்டோம். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் இந்த 4 சதவிகிதம் அகவிலைப்படியே கொடுப்பது கஷ்டம். ஆனால், அதையும் மீறி, எங்கள் நெருக்கடி நிலைமையையும் மீறி, பொது மக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாதே, அரசு ஸ்தம்பித்து விடக்கூடாதே, எப்படியாவது இந்த வேலைநிறுத்தத்தைத் தடை செய்யவேண்டும், தடுத்து நிறுத்தவேண்டும் என்பதற்காக, இல்லாத ஒரு வசதியை அவர்களுக்கு நாங்கள் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே இந்த 4 சதவிகிதம் அகவிலைப்படி கொடுக்கின்ற நிலையில் இந்த அரசு இல்லை.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 அக்டோபர் 29

இருந்தாலும் ஒப்புக்கொண்டோம். அதை ஏற்றுக்கொண்டு சில சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாமல் பணிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற சங்கங்கள், எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்று திரும்பத் திரும்பக் கோரிக்கை வைப்பதன் மூலம் என்ன சாதிக்க நினைக்கிறார்கள்? எத்தனை முறை பேச்சுவார்த்தைக்கு அழைத்தாலும், எத்தனை மணி நேரம் பேசினாலும், இந்த 4 சதவிகிதம் அகவிலைப்படியைத் தவிர இந்த அரசால் வேறு எதுவும் தரமுடியாது. இதற்கு மேல் எதுவும் தரமுடியாது. ஆகவே, அதை இப்போதே இங்கேயே விளக்கிவிட்டேன். இதுதான் அரசின் முடிவு. இதுதான் அரசின் நிலைப்பாடு. அதனால், இந்த 4 சதவிகிதம் அகவிலைப்படியை ஏற்றுக்கொண்டு, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வேலைக்குத் திரும்பினால் சரி, இல்லையேல் என்ன செய்ய வேண்டுமோ, இந்த அரசு செய்யும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை, இதிலே விவாதம் எல்லாம் ஒன்றும் கிடையாது. திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன், (குறுக்கீடுகள்) இல்லை. விவாதம் எதுவும் கிடையாது. ஜி.கே. மணி, விவாதம் எதுவும் கிடையாது.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற (குறுக்கீடுகள்) 2002-2003 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை (குறுக்கீடுகள்)



2002 அக்டோபர் 29]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. பி.எம். நரசிம்மன்:** இம்மாமன்றத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற முதல் துணை மதிப்பீடுகளை ஆதரித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பினைத் தந்த, நாங்கள் வணங்குகின்ற தெய்வம், தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றரை ஆண்டு காலமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சீரிய திட்டங்களை, சிறப்பான திட்டங்களை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் இல்லாமல் திரு. ஹேமச்சந்திரன் பேசுவது எதுவும் பதிவாகாது. (குறுக்கீடுகள்) விடிய, விடிய இராமாயணம் கேட்டுவிட்டு, விடிந்ததற்குப் பிறகு, சீதைக்கு இராமன் சித்தப்பா என்று சொன்ன மாதிரி இருக்கிறது. அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கங்களை எல்லாம் சொல்லிவிட்டார்கள். இனிமேல் பேசக்கூடாது, விடுங்கள். திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

[பேரவைத் தலைவரின் இருக்கைக்குக் கீழே தரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டனர்]

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டு காலங்களிலே சாதிக்க முடியாத திட்டங்களை எல்லாம், ஒன்றரை ஆண்டு காலத்திலே மிக நேர்த்தியாக . . (குறுக்கீடு)

[2002 அக்டோபர் 29

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்பதற்காகப் பேசவில்லை. சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21 கோடி ரூபாய் அளவிற்கு காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்காக நிவாரணம் வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்கள். அதற்காக நாங்கள் அவர்களைப் பாராட்டுகிறோம், மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம். ஆனால், அதை யார் விநியோகம் செய்வது? தீபாவளிக்கு 4 நாட்கள் இருக்கின்றன. அரசு அலுவலகங்கள் முழுவதும் காலியாக இருக்கின்றன. யார் விநியோகம் செய்வது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் சொல்லுங்கள், சொல்லி வரச்சொல்லுங்கள். வேலைக்கு வரச்சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** கொடுக்காத நிதியை—யார் கொடுத்தார்கள்? 94 சதவிகிதம், அரசு ஊழியர்களுக்கு யார் வழங்கினார்கள்? ஆளுங்கட்சியினுடைய திட்டத்திலே அறிவிப்பதுதானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இதிலே மேலும் விவாதம் கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டார்கள். இதற்கு மேலும் விவாதம் கிடையாது. இனிமேல் நீங்கள், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள். திரு. நரசிம்மன், பேசுங்கள்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)



2002 அக்டோபர் 29]

பிற்பகல் 12-10

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கடமைகளை ஆற்றுவதற்கு எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இடையூறு செய்கிறார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு ஒரு சரியான முடிவினை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்னைத் தமிழகத்தை, மணக்கும் சோலையாய், இதமளிக்கும் தென்றலாய், புதிய பூபாளமாய் மாற்றுவதற்கு, புதுப் புதுத் திட்டங்களை, புரட்சிகரமான திட்டங்களை, இன்றைக்கு எல்லோரும் பாராட்டுகிற வகையிலே, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற, மற்ற மாநில முதல்வர்கள் பாராட்டுகிற வகையிலே, சிறப்பான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூபாய் 175.99 கோடி . . .(குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்—ஊழியர்கள் கைது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், வெளியே போகிறேன்; கண்டனத்தைத் தெரிவித்துவிட்டு வெளியேறிப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, மறுபடியும் இடத்தை மாற்றிக் கொண்டு, உட்கார்ந்து கொண்டிருப்பது சரியல்ல. எங்களுடைய மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள், இப்படிக் கீழே உட்கார்ந்து இருப்பது மிகுந்த வேதனையாக இருக்கிறது. ஆகவே, அவையினுடைய காவலர்கள், அவர்களை, புது மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு போவதைப் போல, மரியாதையோடு அழைத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.]

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூ.175.99 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மக்களுடைய அத்தியாவசிய, அவசியப் பணிகளை நிறைவேற்றுவதற்கு இதுபோன்ற சிறப்பான ஒதுக்கீடுகளை நம்முடைய அரசு செய்திருப்பதற்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற நிதியாண்டில், 2002 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் தேதி அன்றைக்கு இறுதித் துணை மதிப்பீடுகள் இம்மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டன. அதற்குப் பின்னால் எதிர்பாராச் செலவு நிதியிலே இருந்து, முன்பணங்களைப் பெற்று புதுப் பணிகள், புதுத் திட்டங்களுக்காகச் செலவுகள் செய்யப்பட்டதற்கு இச்சட்டப் பேரவையிலே ஒப்புதலைப் பெறுவதற்காகவும் எதிர்பாராச் செலவை ஈடு செய்வதற்காகவும் இந்தத் துணை மதிப்பீடுகள் இங்கே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(சட்டமன்றப் பேரவை லாபியில் கோஷமிடும் சத்தம் கேட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற வளாகத்திற்குள்ளும் கோஷமிட்டுக் கொண்டு இருக்கக்கூடிய உறுப்பினர்களை அவைக் காவலர்கள் சட்டமன்ற வளாகத்தை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தத் துணை மதிப்பீடுகளை இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், பொது மக்கள் எதிர்பார்க்கிற சீரிய திட்டங்களையெல்லாம், மற்ற மாநிலங்களில் பின்பற்றப்படுகின்ற வகையிலே இங்கே சீர்மிகு திட்டங்களையெல்லாம் ஏழையெளியவர்களுடைய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

நேற்றைக்குக்கூட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவிரி டெல்டா பகுதியிலே வாழ்கிற ஏழையெளிய விவசாயத் தொழிலாளிகள், 10 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுகிற வகையிலே தீபாவளிப் பரிசினை அளித்திருக்கிறார்கள். இதற்காக இந்த அரசுக்கு 21 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், இச்சிறப்பான







திட்டத்தை—ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்தத் திட்டத்தை—இன்றைக்கு நடைமுறைப்படுத்த இருக்கிறது.

பிறபகல் 12-15

உச்ச நீதிமன்றத்தின் மூலமாக நாம் பெறவேண்டிய பங்கினைப் பெறுவதில் அறிவுடைமையோடும், அஞ்சாமையோடும் செயல்பட்டு இருக்கிறார் என்பதை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்திருக்கிற கருத்தின் மூலமாக நாம் உணர முடிகிறது. ஏழையெளிய விவசாயிகள் பயன்பெறுகிற வகையிலே, இந்த ஆண்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய கழிமுக மாவட்டங்களிலே சிறப்பான திட்டம் ஒன்றினை நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது.

நெய்வேலி காட்டாமணக்குச் செடியை ஒழிப்பதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற ஒன்றை நான் இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தேசிய வேளாண்மைக் காப்புறுதித் திட்டத்தின்கீழே வரும் தொகுப்பு நிதிக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.5.50 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக நம்முடைய அரசு அளித்து சாதனை படைத்து இருக்கிறது. இன்றைக்கு நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காகவும், அவர்கள் உற்பத்தி செய்திட்ட துணிமணிகளைக் கொள்முதல் செய்யவேண்டுமென்கின்ற அரிய நோக்கத்தோடும்— 18 இலட்சம் சேலைகளையும், 9 இலட்சம் வேட்டிகளையும்-கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிமணிகளை வாங்கி, அவர்களுடைய் துயரைப் போக்க வேண்டுமென்கின்ற அரிய நோக்கத்தோடு ரூ.25 கோடியை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து சாதனை படைத்திருக்கிறார்கள்.

சில பேர் சொல்கிறார்கள். கஞ்சி ஊற்றுகிறேன் என்றும், ஏழையெளிய நெசவாளர்களின் துயரைப் போக்குகிறேன் என்றும் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் ஆண்ட 5 ஆண்டு காலத்திலே நெசவாளர்களுடைய துயரைப் போக்கினார்களா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. கடந்த 5 ஆண்டுகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிறபோது ஏதாகிலும் உருப்படியான திட்டங்களைக் கொண்டு வந்தார்களா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. அவர்கள் அறிவிக்கிற திட்டங்கள், அவர்கள் அறிவிக்கிற செயல்பாடுகள் எல்லாம் ஏட்டளவிலே இருந்தனவே தவிர, ஏட்டுச் .சுரைக்காயாக

இருந்தனவே தவிர, நாட்டு மக்களுக்கு உதவுகிற திட்டங்களாக இல்லையென்பதை இந்த நேரத்திலே நான் அறுதியிட்டுச் சொல்லியாக வேண்டும்.

இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளிய நெசவாளர்களுடைய துயரைப் போக்குவதற்காக மேலும் ரூ.27.50 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்காக வட்டிக்கான உதவித் தொகையை அளிக்கவேண்டுமென்கின்ற பெரு நோக்கத்தோடு இப்படிப்பட்ட சிறப்பான திட்டத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

5 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்குச் சாதனங்கள், அறைகலன்கள் வாங்கவும், கட்டடங்கள் கட்டவும், ரூ.28.80 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

நலிந்த சர்க்கரை ஆலைகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காகவும், கரும்பு விவசாயிகளுடைய துயரைப் போக்குவதற்காகவும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தொகையைக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குக் கடனாக வழங்க— ரூ.37.20 கோடியைக் கடனாக வழங்க— புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீர்மானித்து, இந்த ஒதுக்கீட்டினை சர்க்கரை ஆலைகளுக்கு—நலிந்த சர்க்கரை ஆலைகளுக்கு—இன்றைக்கு அளித்திருக்கிறார்கள் என்பதை நினைக்கிறபோது, நல்ல மனம் கொண்டவர்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அதேபோன்று, முதியோர் ஓய்வூதியம் பெறும் 71,974 பேர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 10 கிலோ உணவு தானியம் வழங்குவதற்காக, அன்னபூர்ணா திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நம்முடைய அரசு ரூ.6.03 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

பிற்பகல் 12-20

இப்படிப்பட்ட அரிய திட்டங்களையெல்லாம் மக்களுடைய அவசியத்திற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அரசுக்கு நிதிச் சுமை இருந்தாலும்கூட சிறப்பான முறையிலே நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இதற்கு முன்பு அவையிலே எடுத்துச் சொன்னதற்கேற்ப 1991-96 ஆம் ஆண்டின் இறுதியில், அம்மா அவர்கள் ஆட்சியை விட்டு அகலும்போது கருவூலத்தினுடைய இருப்பு ரூ.1,649 கோடி ஆகும். ஆனால் பிரதான



எதிர்க்கட்சி ஆட்சியை விட்டுப் போகும்போது, கருவூலத்தைக் காலி செய்தது மட்டுமல்லாமல், 2001-லே ரூ.242 கோடிக்கு ரிசர்வ் வங்கியிலே கடனைப் பெற்றிருக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்களுக்குத் தரவேண்டிய 700 கோடி ரூபாயைத் தராமல் திவால் செய்துவிட்டதை யாரும் மறந்து இருக்கமுடியாது. ஒட்டுமொத்தமாக, சுமார் 2,500 கோடி ரூபாய் உடனடியாகக் கட்டவேண்டிய கடன் என்கிற நிலையிலே அரசை திராவிட முன்னேற்றக் கழகம் வைத்துவிட்டுப் போனதை இந்த நாட்டு மக்கள் யாரும் மறந்திருக்க முடியாது.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சற்று முன்பு அவையிலே எடுத்துச் சொன்னதற்கேற்ப, மாநில வருவாயில் 94 விழுக்காடு அரசு ஊழியர்களுக்குச் சம்பளமாகவும், ஓய்வூதியமாகவும், அகவிலைப்படியாகவும் செலவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மீதி ஆறு விழுக்காட்டிலேதான் பொது மக்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவேண்டிய நிலையிலே அரசு இருந்துகொண்டிருக்கிறது. அந்த ஆறு விழுக்காட்டிலேயும் இலவசக் கல்வி, மருத்துவ வசதி, கிராமப்புறத்து மக்களுக்கு அடிப்படை வசதி ஆகியவற்றை நிறைவேற்றவேண்டிய காலகட்டத்திலே இருந்துகொண்டிருக்கிறோம். ஆக, வரி போட்டுத்தான் செலவு செய்யவேண்டிய நிலையிலே அரசு உள்ளது.

வசதி படைத்தவர்களிடத்திலேயிருந்து வரியை வாங்கி ஏழை எளியவர்களுக்குத் திட்டங்களாகக் கொடுக்கவேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியது உண்டு. அதற்கேற்றாற்போன்றுதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழையெளியோரைப் பாதிக்காத வகையிலே, அவர்களுக்குத் தாங்குகின்ற சக்தி இருக்கின்ற அளவிற்கு, வாங்குகின்ற சக்தி இருக்க வேண்டும் என்கின்ற பெரு நோக்கத்தோடு வரியைப் போட்டு சிறப்பான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். வரியைப் போடுகின்றபோது எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், ஏன் போடுகிறீர்கள் என்று குரல் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில், வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் கேட்கிறார்கள். அரசுக்கு இருக்கின்ற சங்கடம் எல்லாம், வரி போடுவதனாலே ஏழைகள் பாதிக்கப்படவும் கூடாது. பொது மக்களுக்கு வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றியாக வேண்டும். அந்த வகையிலேதான் இன்றைக்கு நம்முடைய அரசு, ஏழையெளியவர் களுடைய அரசு, சிறப்பான முறையிலே திட்டங்களை, ஏழை எளியோரைப் பாதிக்காத வகையிலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

[திரு. பி.எம். நரசிம்மன்] [2002 அக்டோபர் 29

மேலும் இந்த அரசுக்கு— போக்குவரத்துத் துறையிலே— திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்து இறங்கும்போது 2,600 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பை ஏற்படுத்திச் சென்றார்கள். அதுமட்டுமல்ல, 4000 பேருந்துகளை ஓட்டமுடியாத பேருந்துகளாக விட்டுச் சென்றார்கள். உதிரிப் பாகங்கள், டயர், டீசல் வாங்கியதில் சுமார் 1,800 கோடி ரூபாய்க்குக் கடன். அவர்கள் விட்டுச் சென்ற கடனைச் சரி செய்ய கொஞ்சம் கட்டணத்தை உயர்த்துகிறபோது, கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று கூக்குரலிடுகிறார்கள். இந்தக் கட்டணத்தை உயர்த்துவதற்கேகூட காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிர்வாகச் சீர்கேடுதான் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

ஒரு வேளை, இப்படியெல்லாம் ஒவ்வொரு துறையிலேயும் அவர்கள் நஷ்டத்தை ஏற்படுத்தியதற்குக் காரணம், பொதுத் தேர்தல் வருகிறபோது திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக வெற்றி பெறாது என்று நினைத்துத்தான், அந்தச் சுமையை எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது சுமத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் இதைச் செய்து இருக்கிறார்களோ என்கின்ற ஐயம்கூட என்னைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது.

அதுமட்டுமல்ல, மின்சார வாரியத்திலே சுமார் 500 கோடி ரூபாய்க்கு திராவிட முன்னேற்றக் கழகம் இழப்பை ஏற்படுத்திவிட்டுச் சென்றது. இது எப்படி ஏற்பட்டது என்று சொன்னால், தரங்கெட்ட பொருட்களை வாங்கியதால் மின் வாரியத்திற்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இதனை Tamil Nadu Small Scale Industries Federation பத்திரிகையிலே வெளிப்படையாகவே தெரிவித்தார்கள். போக்குவரத்துக் கழகங்களில் நஷ்டத்தை ஏற்படுத்தியதுபோலவே, மின் வாரியத்தையும் நஷ்டத்திற்கு ஆட்படுத்தினார்கள். இதனால் ஏறத்தாழ 2 இலட்சம் தொழிலாளர்கள் வயிற்றிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அடித்து இருக்கிறார்கள். போனஸ் கொடுக்க முடியாத அளவிற்கு, கோடிக்கணக்கிலே நஷ்டத்தை ஏற்படுத்தியவர்களே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான். எனவேதான், இதற்கெல்லாம் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகச் சீர்கேடுதான் என்கின்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



2002 அக்டோபர் 29] [திரு. பி.எம். நரசிம்மன்]

அதுமட்டுமல்ல, அரசு ஊழியர்களுக்கு மைய அரசு அறிவித்த D.A. போன்ற ஊதிய உயர்வைத் தருவதாகச் சொல்லி முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்ததே தவிர, அந்த ஊதிய உயர்வினை 2002-2003, 2003-2004-லே தருவதாகச் சொல்லி ஏமாற்றினார்கள். அந்தச் சுமைகூட நம்முடைய அரசுமீது விழுந்து இருக்கிறது. அதற்கு 1,800 கோடி ரூபாய் செலவு செய்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய நிலையிலே இன்றைக்கு நம்முடைய அரசு இருந்துகொண்டு இருக்கிறது. அரசு ஊழியர்களை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு ஐந்தாண்டு காலத்திலே நன்றாக ஏமாற்றி இருக்கிறது. அவர்கள் இன்றைக்கு நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

தி.மு.க. ஆட்சிக் காலத்திலே போட்ட திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் ஏட்டளவிலே நின்றனவே தவிர, ஏழையெளியவர்களுக்கு வந்து சேரவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, பொது விநியோக முறையிலே முந்தைய ஆட்சிக் காலத்திலே குடும்ப அட்டைகள் வழங்குவதிலே முரண்பாடுகள் நடைபெற்றதை யாரும் மறந்து இருக்க முடியாது. ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய அட்டைகள் எல்லாம் வசதி படைத்தவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது. இதனாலே அரிசி கடத்தப்படுவதற்குக்கூட வழிவகுக்கப்பட்டது. அம்மா ஆட்சியிலே 10 இலட்சம் போலி அட்டைகளைக் கண்டுபிடித்ததை இந்த நாடு அறியும், இங்கேயுள்ள பிரதான எதிர்க்கட்சி அங்கம் வகிக்கிற டெல்லி அரசு, தமிழ்நாட்டிலே 48 இலட்சம் பேர்தான் ஏழைகள் என்ற கணக்கினைச் சொல்கிறார்கள். தி.மு.க. ஆட்சியிலே கணக்கெடுக்கிறபோது, 1 கோடியே 40 இலட்சம் பேர் ஏழைகள் என்று கணக்கு எடுத்தார்கள். இந்த முரண்பாட்டினால் இலட்சக்கணக்கான போலி அட்டைகள் நடமாடின. அதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம். இதனால் நம்முடைய அரசுக்கு 1,400 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. அரிசி விலையை ஏற்றக்கூடிய நிர்ப்பந்தம்கூட— முந்தைய ஆட்சியின் இத்தகைய நிர்வாகச் சீர்கேட்டினாலேதான். இந்த அரிசி விலையேற்றத்திற்குக்கூட இதுதான் காரணம் என்கின்ற குற்றச்சாட்டினை இங்கே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்திலேதான் மிகக் குறைந்த விலைக்கு அரிசியை ஏழையெளியவர்களுக்கு இவ்வரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

தி.மு.க. ஆட்சியிலே, பொது நிறுவனங்களிலே பல கோடி ரூபாய் நஷ்டம். கூட்டுறவு நூற்பாலைகளில் மட்டும் சுமார் 352 கோடி ரூபாய் நஷ்டம். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் சுமார் 610 கோடி ரூபாய் இழப்பு. இப்படி இருந்தால், தொழிலாளர்களுக்கு எங்கே போனஸ் கொடுக்கமுடியும் என்பதை இந்த நாட்டு மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

1995-96 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை சுமார் 1,255 கோடி ரூபாய். தி.மு.க. ஆட்சியை விட்டு இறங்கும்போது, 2001-ல் நிதிப் பற்றாக்குறை சுமார் 5,781 கோடி ரூபாய். அரசுக்கு எந்த அளவுக்கு நிதிச் சுமை இருக்கிறது என்பதற்கு இதைவிடச் சான்று வேறு என்ன வேண்டும்? இங்கே அரசுக்கு வருமானம் இல்லையா என்று கேட்கிறார்கள். அரசின் வருமானத்திற்கு மேல் பல மடங்கு கடன் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே வாங்கப்பட்டது. தற்போது அரசின் 36,000 கோடி ரூபாய் ஒட்டுமொத்தக் கடனுக்கு நாளொன்றுக்கு சுமார் 11 கோடி ரூபாய் வட்டி கட்டும் நிலையை உருவாக்கியிருப்பது தி.மு.க. ஆட்சியினுடைய நிர்வாகச் சீர்கேட்டால்தான். ஆகவே, இப்படி நிதிச் சுமை இந்த அரசுக்கு இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீர்மிகு திட்டங்களை, புரட்சிகரமான திட்டங்களை, புதுப் புதுத் திட்டங்களை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான், பொதுத் தேர்தலுக்குப் பின்னாலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரு மாபெரும் வெற்றி, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்தியபோது கிடைத்தது. அதற்குப் பின்னாலே, ஆண்டிப்பட்டியிலே ஒரு மாபெரும் வெற்றி கிடைத்தது. அதற்குப் பின்னாலே, வாணியம்பாடி, சைதாப்பேட்டை, அச்சரப்பாக்கம் ஆகிய மூன்று சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களில், யாருடைய உதவியும் இல்லாமல், தன்னந்தனியாகத் தேர்தலைச் சந்தித்தபோது, 3 தொகுதிகளிலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாபெரும் வெற்றியைப் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு சிறப்பான திட்டங்களை, சீர்மிகு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு, நல்ல திட்டங்களுக்கு இந்த மாபெரும் வெற்றிகள், இடைத் தேர்தல் வெற்றிகள் எல்லாம் சான்றுகளாக அமைந்திருக்கின்றன, ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது



என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த 2002-2003 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் 7 மணித்துளிகள்தான் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால், பிற்பகல் 1-30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தவேண்டும். அதைக் கருத்தில் கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** எனக்கும் அப்படித்தானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உறுப்பினர் இல்லையா? எல்லோருக்கும்தான்.

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போதுதான் தொடங்குகிறேன், உங்களுக்கு 7 நிமிடங்கள்தான் என்று சொல்கிறீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அதிகமான நேரத்தைக் கொடுப்பதைவிட, அதைக் குறைத்துக் கொண்டு எங்களுக்கு அதிக நேரம் கொடுத்தால், ஏதாவது பேசக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும். வேண்டுமானால், பேசாமல் விட்டுவிடலாம் என்றாலும் விட்டுவிடுகிறோம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை, நீங்கள் பேசுவதற்குப் பதிலாகப் பேசவேண்டிய பாயிண்டைப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இந்த முதல் துணை நிதி நிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், முதலிலே தொகுதியைப் பற்றிய கோரிக்கைகளை வைத்துவிடுகிறேன். எங்களுடைய வேலூருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைத் தந்து. துணை வேந்தரையும் இப்போது நியமித்து, பதிவாளரையும் நியமித்ததற்காக இப்போது நான் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய விரைவிலே பல்கலைக்கழகத்தைச் செயல்பட வைப்பதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு ஆணைகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டு, இப்போது ஆஸ்பத்திரி கட்டுவதற்காக 5 கோடி ரூபாயை இரண்டு நாட்களுக்கு முன்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் வழங்கியிருக்கிறார்கள். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, அரசு சட்டக் கல்லூரி, ஏற்கெனவே வேலூருக்கு அறிவித்து, பிறகு 1999, 2000 ஆம் ஆண்டு என்று தள்ளிப் போய்விட்டது. அதையும் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூருக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டும். அதைப்போல, வேலூர் தொகுதியில் அலமேலுமங்காபுரம் கிராமத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும். வேலூருக்குப் புதிதாக ஒரு பஸ் ஸ்டாண்ட் வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வேலூர் நகராட்சியில் இரண்டு மாதங்களாக கமிஷனர் இல்லாமல் அந்த இடம் காலியாக இருப்பதால், காலியாக இருக்கக்கூடிய அந்த கமிஷனர் பதவிக்கு, தாம்பரத்தில் இருக்கக்கூடிய கமிஷனரை வேண்டுமென்று நான் பல முறை அமைச்சர் அவர்களிடமும் கேட்டிருக்கிறேன். இன்னும் அதற்கான விடிவுகாலம் வரவில்லை. கமிஷனர் இல்லாமல் இப்போது எங்களுடைய நகராட்சி தள்ளாடிக்கொண்டிருக்கிறது. அதற்கும் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய வேலூரில் இருக்கும் ஜெயிலில், ஊரில் இருக்கும் அத்தனை குற்றவாளிகளையும் கொண்டு வந்து போட்டுவிடுகிற காரணத்தாலே, சட்டம்-ஒழுங்குப் பிரிவில் காவல் துறையில் இருக்கக் கூடிய காவல் துறையினர் பூராவும், அவர்களுக்கு escort-க்குப்



போய்விடுகிற காரணத்தால்—எங்களுடைய மாவட்டத்தில் கிட்டத்தட்ட 30 சதவிகிதம் காவலர்கள் escort பணிக்கே போய்க்கொண்டிருக்கிற காரணத்தால்— எங்களுக்குப் போதிய அளவில் போலீஸ் இல்லை. ஆகவே, ஒரு Batallion-ஐ நீங்கள் வேலூரிலே வைத்து escort செய்வதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழக அரசு, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்ற ஒன்றை— அதற்கு Chairman அதேபோல, members எல்லாம் போட்டுவிட்டு— மின்சார வாரியம், இலவச மின்சாரம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுவதையெல்லாம் ரத்து செய்யக்கூடிய ஓர் அச்சுறுத்தல் இப்போது இருந்துகொண்டே இருக்கிறது. ஆகவே, அது இல்லை என்கின்ற ஓர் அறிவிப்பைத் தயவுசெய்து நீங்கள் நாட்டு மக்களுக்குத் தெரிவித்தால்தான்— ஏற்கெனவே கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே செத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு ஒரு நல்ல செய்தியாக இருக்கும். அதை நீங்கள் தாருங்கள். 16,07,976 பம்புசெட்டுகள் இருக்கின்றன. அத்தனை பம்புசெட்டுகளுக்கும் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்தியாவிலேயே இரண்டு மாநில அரசுகள்தான் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கி வந்தன. ஒன்று, தமிழ்நாடு; மற்றொன்று, பஞ்சாப். பஞ்சாபிலே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்து இருக்கின்ற காங்கிரஸ் கட்சி ஆட்சிதான் நடைபெறுகிறது. அண்மையில்தான் பஞ்சாபில் காங்கிரஸ் மாநில அரசு, விவசாயிகளுக்கு வழங்குகின்ற இலவச மின்சாரத்தை ரத்து செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், பஞ்சாபை இங்கே எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்கள். அது காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலம்; இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், பஞ்சாபில் வற்றாத ஐந்து ஜீவ நதிகள் ஓடுகின்றன. ஒவ்வொரு விவசாயினுடைய வீட்டிலேயும் டிராக்டர் இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழகத்திலே

இருக்கக்கூடிய விவசாயிகளிலே— இந்த 16.07,976 பம்புசெட்டுகளிலே— 14 ஆயிரம் பேர்களைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் அன்றாடச் சோற்றுக்கே லாட்டரி அடிக்கக்கூடிய விவசாயிகள். அவர்களிடம் டிராக்டர்கள் கிடையாது. அவர்களிடம் ஏர் ஓட்டினால், ஒரு நாளைக்கு 100 ரூபாய் கூலி கேட்கிறார்கள். அந்த 100 ரூபாய் கூலி கொடுக்கக்கூட லாயக்கு இல்லாதவர்கள். அப்படிப்பட்ட விவசாயிகள் அவர்கள். நம்முடைய மாநிலம் வேறு; அந்த மாநிலம் வேறு. அங்கே பார்த்தால், எல்லோரும் நல்ல செல்வச் செழிப்பிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்தில், இலவச மின்சாரத்தை ரத்து செய்தால், அதை ஒரு பெரும் பொருட்டாக எடுத்துக் கொள்ளக்கூடியவர்கள் அங்கே இல்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து அதை உதாரணம் காட்டி, இங்கே இருக்கிறவர்களை நீங்கள் அடித்துவிடாதீர்கள். இங்கு இருக்கக்கூடிய ஏழையெளியவர்கள்மீது நீங்கள் கொஞ்சம் பரிதாபம் காட்டுங்கள். இந்த ஒழுங்குமுறை ஆணையம் என்பது, நாம் நியமித்த ஒன்றுதான்; ஒரு Central Act கொண்டு வந்து பண்ணினால்கூட, இப்போது ஒரிசாவிலே தள்ளி வைத்திருக்கிறார்கள்; இப்போது கேரளாவிலேகூட பார்த்தீர்கள் என்றால், ஒழுங்குமுறை ஆணையத்தினுடைய, அவர்களுடைய பரிந்துரையை மீறி, இப்போது ஏற்றியதையே குறைத்து விட்டார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த இலவச மின்சாரம், ஏழைகளுக்கு ரத்து செய்யப்பட மாட்டாது; விவசாயிகளுக்கு ரத்து ஆகாது என்கிற ஓர் உறுதியைத் தரவேண்டும். அதேபோல, மின் கட்டண உயர்வு; நீங்கள் எல்லாவற்றுக்கும் மீட்டர் பொருத்த ஆரம்பித்து விட்டீர்கள். பணமே இல்லை என்கிறீர்கள். நிதி இல்லை என்கிறீர்கள். மீட்டரைப் பொருத்தி, அதற்கு வேறு ஏன் தண்டச் செலவைச் செய்கிறீர்கள் என்று தெரியவில்லை எனக்கு. கேட்டால், கணக்கு எடுக்க வேண்டும் என்கிறீர்கள். ஏற்கெனவே, இலவச மின்சாரம் கொடுத்தாகிவிட்டது. அதிலே, அமைச்சர் ஒன்று சொல்கிறார். ஏற்கெனவே இலவச மின்சாரம் தொடரும் என்று சொன்னார். இல்லை, ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மின்சார வாரியம் பரிந்துரை செய்து, ஒரு கடிதம் கொடுத்திருப்பதாக முதலமைச்சர் சொல்கிறார்கள். இப்படி, முதலமைச்சர், அமைச்சர் என்று மாறி, மாறிக் கருத்துகள் வருகிற காரணத்தினால், நாங்கள் எல்லாம் we have been confused. ஆகவே, நிதி இல்லை என்று சொல்கிற நீங்கள் தயவுசெய்து மீட்டர் பொருத்த வேண்டிய அவசியம் இல்லை; அதையும் தயவுசெய்து நிறுத்துங்கள் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு முன்னால் தி.மு.க. ஆட்சி இருந்தபோது, தி.மு.க. அரசு, மத்திய அரசிடமிருந்து நிதி வாங்கி, கடன் உதவி வாங்கி, அதற்குப் பதிலாக மீட்டர் பொருத்துகிறோம் என்று அவர்கள் தான் ஒப்புக்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியிலே சிலவற்றை அவர்களே ஒத்துக்கொண்டார்கள். சிலவற்றை, நீங்களே பல திட்டங்களையெல்லாம்— விட்டுவிட்டீர்கள். அதேமாதிரி இதையும் விடமுடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்றால், மக்கள்தான் நமக்கு முக்கியம். ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் செய்த தப்பை நாமும் செய்ய வேண்டும் என்ற அவசியம் கிடையாது. ஆகவே, I request the Hon. Chief Minister to consider this plea because actually lot of agriculturists have been affected by this one.

இரண்டாவது, மின் வெட்டு; அடிக்கடி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சருக்குத் தமிழ் தெரியும். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** ஆங்கிலமும் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வெட்டு—அடிக்கடி—எங்கள் ஊரிலே 2 நாட்களிலே Century அடித்திருக்கிறது. அந்த அளவுக்கு மின் வெட்டு நிறைய ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதையும் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளினுடைய நிலை; கரும்புக்கு ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னீர்கள். அதையும் கொடுக்க முடியாமல், இப்போது Suppost Price-ஐ இந்த அரசு கொடுக்காமல் இருக்கிறது. மத்திய அரசு கொடுத்த அந்த ஒரு டன்னுக்கு 772 ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்களேயொழிய, Support Price—ஆதரவு விலையை— இன்னும் விவசாயிகளுக்கு இந்த அரசு கொடுக்காத காரணத்தினாலே— இப்போது தீபாவளி வந்து கொண்டிருக்கிறது— விவசாயிகள் பாவம்; ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த Support Price-ஐ உடனடியாக அவர்களுக்கு நீங்கள் வழங்க வேண்டும் என்னுடைய மாவட்டத்தில் இருக்கிற எல்லாக் கூட்டுறவு ஆலைகளுக்கும் — அதேபோல மதுரையிலே இருக்கக்கூடிய,

பாண்டியராஜபுரத்திலே இருக்கிற, மதுரை மாவட்டத்து மக்கள்கூட இதுபோன்ற Support Price வராமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பணமே கொடுக்கவில்லை.

பிற்பகல் 12-40

அதுபோலத் தனியார் ஆலைகளைப் பார்த்தீர்களேயானால், சக்தி சுகர்ஸ் மில் இதுவரைக்கும், போன வருடம் ஓட்டியதற்கே பணம் கொடுக்கவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இன்னும் ஒன்றுமே வரவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒன்றரை மணிக்கு வாக்கெடுப்பு இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒன்றரை மணிக்குத்தானே வாக்கெடுப்பு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரும் பதில் சொல்ல வேண்டுமல்லவா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 2, 3 நிமிடங்கள் அவருக்குக் கூடக் கொடுங்கள்; பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 4, 5 உறுப்பினர்கள் பேசவேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சக்தி சுகர்ஸ், இவர்களுக்கு எல்லாம் போன வருடத்திலிருந்து பணமே கொடுக்காமல் இருக்கிறார்கள். திருவாலங்காடு, அரக்கோணம் பக்கத்தில் இருக்கிறது. உடனடியாக விவசாயிகளுக்குப் பணத்தை கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலை கிலோ 5 ரூபாய்க்கு எடுக்கிறான்; கிலோ 18 ரூபாய்க்கு விற்றது. இப்போது தேயிலை விவசாயிகள் எல்லாம் பெரிய போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுபோல, நெல் கொள்முதலே இல்லாமல் போய்விட்டது. விவசாயிகளினுடைய கடனைத் தள்ளுபடி செய்வதற்கு, வட்டியைத்



தள்ளுபடி செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ரியல் எஸ்டேட்டுக்கு நாம் புத்துணர்ச்சி கொடுக்கிறோம் என்று சொன்னோம். இதுவரைக்கும் ஒன்றுமே தொடவில்லை நீங்கள். ரியல் எஸ்டேட்—பணப் புழக்கத்திற்கு ஏற்பாடு பண்ணுகிறோம் என்று சொன்னால், அதற்கும் ஒன்றுமே வழி இல்லை. போதாக்குறைக்கு நிதி, நிதி என்று எல்லாவற்றையும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நரசிம்மன் அவர்கள்கூடப் பேசிக்கொண்டிருந்தார்கள். சரி, நிதி இருக்கிறதா? அவர்களால் முடியவில்லை.

சென்ற கவர்ன்மென்டில் பார்த்தீர்கள் என்றால், ரேஷன் கார்டு அல்லது வரி ரசீது, வீட்டு டாக்ஸ் ரசீதைக் கொண்டு போய்க் காண்பித்தால் மின்சார இணைப்புக் கொடுத்துவிடுவார்கள். அதில் உங்களுக்கு நிதி, ஒரு செலவும் இல்லை. அப்படியெல்லாம் கொடுத்ததால் ஒரு நல்ல பெயரை அந்த கவர்ன்மென்ட் எடுத்தது. ஆனால், நீங்கள் இப்போது Planning permission வேண்டும், Completion report வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஒரு G.O. 253, நாள் 18-2-1992-லே போட்டது. இப்போது ஒரு Writ Petition போட்டார்கள்; dismiss ஆகிவிட்டது. மீண்டும் அதை நீங்கள் restore பண்ணி, நம்முடைய அமைச்சகத்திற்கும் தெரியாமல் Electricity Board Chairman எல்லோருக்கும் circular விட்டதினாலே, இன்றைக்குக் குடிசைக்குக்கூட Planning permission கேட்டு, எங்களுடைய காட்பாடியில் இருக்கக்கூடிய மின் வாரியத்தினுடைய என்ஜினியர் லெட்டர் அனுப்புகிறார். குடிசைக்குக்கூட Planning permission எந்த நாட்டிலே எப்படி வாங்க முடியும்? ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே இருந்த முறையான, ரேஷன் கார்டையோ அல்லது டாக்ஸ் ரசீதையோ காண்பித்தால் போதும் என்று சொல்லலாம். எலக்ட்ரிசிட்டி போர்டுக்கு, உங்களுக்கு வருவாய், டெபாசிட்ஸ் மூலம் நிறையக் கிடைக்கும். இதுமாதிரி, பணத்திற்கு வழி வரக்கூடிய ஒரு நிலைக்கு எல்லாம் நீங்களே கதவைச் சாத்திவிட்டு, நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. ஆகவே, நீங்கள் G.O. 253-ஐக் Cancel செய்ய வேண்டும். அமைச்சகத்தில் இருந்துகூட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஏற்கெனவே file போய் இருப்பதாகச் சொன்னார்கள். இதுவரை அது clear ஆனதா இல்லையா என்று தெரியவில்லை. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து அதை மீண்டும் பரிசீலனை செய்து, உடனடியாக புதிய மின் இணைப்புகளுக்கு,

Planning permission-ஐ வலியுறுத்தாமல் இருப்பதற்கு, நீங்கள் தயவுசெய்து ஆவன செய்யவேண்டும்.

ரியல் எஸ்டேட்டுக்கு ஒரு புத்துணர்ச்சி கொடுப்பதாகச் சொன்னதை, நீங்கள் தயவுசெய்து புத்துயிர் கொடுப்பதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைப் பணியாளர்களை நீங்கள் வேலைநீக்கம் செய்துவிட்டீர்கள். அவர்களுக்கு உடனடியாக எப்படியாவது நீங்கள் மீண்டும் பணி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலவச வேட்டி-சேலை கொடுக்கும் திட்டத்தையே நீங்கள் நிறுத்திவிட்டீர்கள். அதை இப்போது 40 ரூபாய், 30 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டுமென்றால், யாராலும் வாங்க முடியவில்லை. ஆகவே, இந்த இலவச வேட்டி-சேலைத் திட்டத்தை மீண்டும் நீங்கள் கொண்டுவர வேண்டும்.

அதுபோல, இராமாமிர்தம் திருமண உதவித் திட்டம். தேர்தல் நேரத்திலே—தி.மு.க. அரசு முதலிலே 8-வது வரை படித்தால் கொடுக்கலாம் என்றார்கள்; பின்னர்— 10-வது படித்தவர்களுக்குத்தான் கொடுப்பது என்று சொன்னவுடனே, அதையே நாம் எதிர்த்தோம், அந்த நேரத்தில் ஓட்டு வாங்குவதற்காக. அப்படி நாம் கொடுத்த வாக்குறுதியை இன்றைக்கு மீறி அந்தத் திட்டத்தையே நிறுத்திவிட்டு இருக்கிறோம். ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், இராமாமிர்தம் திருமண உதவித் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் அரிசி விலையை இப்போது மூன்றரை ரூபாயிலிருந்து 6 ரூபாயாக ஆக்கிவிட்டீர்கள். அதிலேயும் எங்கள் ஊர்க் கடையிலே எல்லாம் பார்த்தீர்கள் என்றால், இப்போது 6 ரூபாய் அரிசியை வாங்கினால்தான், உனக்கு மூன்றரை ரூபாய் அரிசி உண்டு என்கிறான். அதிலும் பச்சரிசி போடமாட்டேன் என்கிறான். இப்படிப்பட்ட சிக்கல் எல்லாம் இருக்கிறது. ஆகவே, ரேஷன் அரிசி விலையை நீங்கள் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* ஒன்றே ஒன்று; முடித்துவிட்டேன்.

சட்டம்-ஒழுங்கு. எங்களுடைய சேலம் மாவட்டக் காங்கிரஸ் தலைவர் தாளமுத்து நடராசன் அவர்கள் இறந்து கிட்டத்தட்ட 2





மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன. ஏற்கெனவே தடயங்கள் எல்லாம் கிடைத்தும்கூட, இன்றைக்கு வரைக்கும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே, சட்டம்-ஒழுங்கு *(குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி நள்ளிரவுக்குப் பிறகு, 12 ஆம் தேதி அதிகாலையில் அவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். அவர்கள் உள்ளே நுழைவதற்கு முன்பாக, அங்கே வெளியே இருந்தவர்களும், வீட்டுக்கு உள்ளே இருந்தவர்களும், 'உங்களுக்கு எது வேண்டுமானாலும் தந்து விடுகிறோம்; தயவுசெய்து எங்களுக்கு, யாருக்கும் தீங்கு விளைவிக்காதீர்கள்' என்று கேட்டபோது, 'கொலை செய்வதுதான் நோக்கம், உங்களைக் கொலை செய்துவிட்டுத்தான் போவோம்' என்று சொல்லி, 15 பேரும் சேர்ந்து அந்தக் கதவை இடித்துத் தள்ளிவிட்டு உள்ளே சென்று கொலை செய்து இருக்கிறார்கள். அங்கே அவர்களிடத்திலே இருந்த அந்த செல்லுலார் ஃபோனை எடுத்து, செல் ஃபோன் மூலமாக சேலம் நகரத்தில் இருப்பவரோடு பேசி இருக்கிறார்கள்; 448622 என்ற நம்பருக்கு; 6 நிமிடம் 32 செகண்ட் பேசி இருக்கிறார்கள்; பதிவாகி இருக்கிறது. அந்த செல் ஃபோன் இன்னும் அவர்களிடத்திலேதான் இருக்கிறது. அதுமட்டுமல்ல, அவர்களுடைய முகவரி தெரியும்; யார் என்றும் தெரியும். ஏன் இன்று வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை? என்ன விசாரணை நடந்து இருக்கிறது? ஒரு பொறுப்பான நபர், மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர் செத்து 47 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஒரு குறிப்பிட்ட தொலைபேசிக்குத் தொடர்புகொண்டுகூட—அவர்கள் பயன்படுத்திய செல் ஃபோனினுடைய நம்பர் 98427-32547. அந்த செல் ஃபோனிலிருந்து 448622 என்ற நம்பருக்குப் பேசி இருக்கிறார்கள். 6 நிமிடம் 32 செகண்ட் பேசி இருக்கிறார்கள்—இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன்? ஹிந்தியில் பேசினார்கள் என்று சொல்கிறார்கள். 'உன்னைக் கொல்வதுதான் எங்களுடைய வேலை' என்று தமிழிலேயும் சொல்லி இருக்கிறார்கள். யார் அதற்குக் காரணம்? ஏன் இதுகாறும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பது பற்றியெல்லாம் இந்த அவை அறிந்துகொள்ள விரும்புகிறது. கண்டிப்பாகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2002 அக்டோபர் 29

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) போதும், டைம் ஆகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பார்த்தீர்கள் என்றால், மதுவிலக்குக் கொள்கையை வைத்திருக்கிறோம்; பிராந்திக் கடையும்கூட வைத்திருக்கிறோம். சாராயம் ஆங்காங்கு நிறைய இருக்கிறது. அதைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இலஞ்சம்; இன்றைக்கு எல்லா இடத்திலும் இலஞ்சம் இல்லாமல் ஒரு வேலையும் நடக்கவில்லை. ஆகவே, இலஞ்சத்தை அடக்குவதற்கும், ரௌடி இராஜ்ஜியத்தை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீரப்பன் இன்று வரை பிடிபடவில்லை. நாம், இந்த எல்லையில் இருக்கிறான், அந்த எல்லையில் இருக்கிறான் என்று சொல்லி, கடந்த கால ஆட்சியிலும் பிடிக்கவில்லை. தொடர்ந்து 11, 12 ஆண்டுகளாகப் பிடிபடாமல் இருக்கக்கூடிய வீரப்பனை நீங்கள் எப்போதுதான் பிடிக்கப் போகிறீர்கள்? ஒரு சவாலாக இருந்து கொண்டிருக்கக்கூடிய அவனைப் பிடிக்க வேண்டும் தமிழ்நாடு போலீஸ் ஸ்காட்லாண்டு யார்டுக்கு இணையான போலீஸ் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய நாம் இன்னும் அவனைப் பிடிக்காததை, இன்னும் நம்மால் முடியவில்லை என்கிற நிலை இருப்பதைத் தயவுசெய்து மாற்றியமைத்து, சட்டம்-ஒழுங்கை நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எக்மோர் hospital-ல் C.T. ஸ்கேன் வேலை செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் இராயப்பேட்டை மருத்துவமனைக்கு குழந்தைகளை எடுத்துக் கொண்டு செல்வதற்கு எக்மோர் Children Hospital-ல் சிரமப்படுகிறார்கள். லிஃப்ட் வேலை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பார்த்து, அந்த C.T. ஸ்கேனை உடனடியாக ரிப்பேர் செய்வதற்கும், லிஃப்ட் வேலை செய்வதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த 2002-2003 ஆம்



2002 அக்டோபர் 29] [திரு. ஜி.கே. மணி]

ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு என்பது, ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து இன்று வரையிலே நிதி நெருக்கடி, நிதி நெருக்கடி என்று சொல்லி, பல்வேறு திட்டங்களை எல்லாம் ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வந்த மக்களை எல்லாம், அவர்களுடைய சலுகைகளையெல்லாம் தட்டிப் பறிக்கிற நிலையைச் செய்து வருகிறது. ஆகவே, ஆட்சிப் பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டு காலத்திற்கு மேலாகியும் இன்னும் நிதி நெருக்கடியைச் சீர்படுத்தவில்லை என்று சொன்னால், இன்னும் எத்தனை ஆண்டு காலத்திற்கு நாம் இப்படியே செய்யப் போகிறோம் என்பதை இங்கே நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி நெருக்கடியைப் போக்குவதற்கு, நிதியைச் சீராக்குவதற்கு என்னென்ன வழிவகைகளை நீங்கள் மேற்கொள்ளப் போகிறீர்கள் என்பதையும் நான் இங்கே கேட்க விரும்புகிறேன். இன்றைய நிலவரப்படி நம்முடைய அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமான வரி பாக்கி ரூ.8,664 கோடி; விற்பனை வரி பாக்கி ரூ.7,224 கோடி. இதையெல்லாம் எப்போது வசூலிக்கப் போகிறீர்கள்? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதைக் கேட்க விரும்புவதோடு, இதையெல்லாம் நீங்கள் சீர்செய்வீர்கள் என்று சொன்னால், இந்த நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேரத்தின் அருமை கருதி நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இன்று தமிழ்நாடு முழுவதும் கடுமையான வறட்சி; குடிநீர்ப் பஞ்சம்; கால்நடைகளுக்குத் தீவனம் இல்லை. இன்று, தமிழ்நாட்டிலே பல்வேறு மாவட்டங்களிலே இருக்கக்கூடியவர்கள் வேளைக்கு உணவு தேடி அண்டை மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளக்கூடிய இந்த நிலையிலே, எங்களுடைய தருமபுரி மாவட்டம் தொடர்ந்து பின்தங்கிய மாவட்டமாகவும், கடுமையான வறட்சியிலே பாதிக்கப்பட்ட மாவட்டமாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட மாவட்டங்களைக்கூட இந்த வறட்சி நிவாரணப் பட்டியலிலே சேர்க்கவில்லை என்பது

மிகுந்த வருத்தம் அளிக்கிறது. வேதனை அளிக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். ஏதாவது ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லி கடந்த ஆண்டிலே ஒரு பகுதியிலே கூடுதலான மழை பெய்தது என்ற காரணம் காட்டினீர்கள் என்று சொன்னால் எப்படி, அந்த மாவட்டத்தினுடைய மண்ணின் தன்மை, பூகோளச் சூழ்நிலை என்ன என்பதை எல்லாம் நீங்கள் சரிபார்க்கவேண்டும். இப்படி தருமபுரி மாவட்டம். திருவண்ணாமலை மாவட்டம் போன்ற பல்வேறு மாவட்டங்கள் பின்தங்கி இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாடே வறட்சியினுடைய கோரப் பிடியில் இருக்கிற காரணத்தால், ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டையே வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் இங்கே நான் முன்வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு நேற்று அறிவித்தார்கள். இன்று வறட்சி காரணமாக ஏழையெளிய மக்கள் எல்லாம், அதிலும் குறிப்பாக, டெல்டா விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் தீபாவளியைக் கொண்டாடுவதற்காக, 21 கோடி ரூபாய் செலவிலே, 10 இலட்சம் பேருக்கு, 10 கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ரொக்கம் 50 ரூபாய் போன்ற ஒரு பரிசை வழங்குவதாக அறிவித்தார்கள். அதே நேரத்திலே, தமிழ்நாடு முழுவதும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கக்கூடியவர்கள் வறட்சியால் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்— நெசவாளர்கள் கஞ்சித் தொட்டி தேடி அலைந்த நிலை— ஆக, ஒட்டுமொத்தமாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழக்கூடிய எல்லோருக்கும், விவசாயத் தொழிலாளிகள், நெசவாளர்கள் அனைவருக்கும் இந்த தீபாவளிப் பரிசை வழங்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

நம்முடைய மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலே, 2000-2001, 2001-2002, 2002-2003 ஆம் ஆண்டுகளில் மின் பாதை, மின் இழப்பு -line loss- என்று சொல்லக்கூடியது 16.05 சதவிகிதம் என்று சொல்கிறீர்கள். இது உண்மையான கணக்கா? அல்லது, ஏதோ இருக்கின்ற கணக்கைப் பார்த்துத் தொடர்ந்து சொல்கிறீர்களா என்ற கேள்வி எழுந்து இருக்கிறது. காரணம், இந்த line loss என்பது, இப்போது ஆண்டுக்காண்டு கூடுதலாகிக் கொண்டு இருக்கிறது என்று சொல்லி, மின் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம்கூடச்



சொல்கிறார்கள். ஆனால் இந்த நிலை மாறி இருக்கிறது என்பதைக் குற்றச்சாட்டாகவே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமாத்திரம் அல்ல..

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் line loss என்பது 27 சதவிகிதமாக இருக்கிறது. இந்தியாவிலேயே நமது தமிழகத்தில் மட்டுதான், குறைந்த அளவு line loss- 16 சதவிகிதம் என்று இருந்துகொண்டிருக்கிறது. அதையும் குறைப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக 16.05 சதவிகிதம் என்று இருக்கிறதே? இது மாறவில்லையா என்பதுதான் கேள்விக்குறி.

அதுமாத்திரம் அல்ல, மின் திருட்டைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. மின் திருட்டு நடந்துகொண்டு இருப்பதாகக் கடந்த நிதி நிலை அறிக்கையிலேகூட சொல்லப்பட்டு இருக்கிறது. அதுவும் இங்கே குறிப்பிடப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அதே நேரத்திலே, இங்கே செலவினங்களைச் சொல்லுகின்ற நேரத்திலே, இதுவரை தேய்மானச் செலவு ரூ.653 கோடி. வட்டி, இதரச் செலவு, நிதி திரட்டுவதற்காகச் செலவு ரூ.865 கோடி. ஆக, மொத்தம் ரூ. 1518 கோடி, ஆக, இதையெல்லாம் சீர் செய்கிறோம் என்று சொன்னால், அல்லது line loss, மின் திருட்டு, இவற்றையெல்லாம் சீர்படுத்தி விட்டோம் என்று சொன்னால், ஏழை விவசாயிகளுக்கு வழங்கிக்கொண்டிருக்கிற இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கடந்த நிதி நிலை அறிக்கையின்போது சொல்கின்ற நேரத்திலே, நாங்கள் எல்லாம் கேள்வி கேட்ட நேரத்திலே, தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும், மாற்றம் இல்லை என்ற உத்தரவாதத்தை வழங்கினார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் திருட்டைப் பற்றிக் கூறுகிறார்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் மீட்டர் இல்லாமல் தரப்படுகிறது. விவசாயிகளின் பெயரிலே, தொழில் அதிபர்கள் under metering செய்து மின் திருட்டைச் செய்கிறார்கள். அல்லது கொக்கி போட்டுச் செய்கிறார்கள். அந்த மின் திருட்டைத் தடுப்பதற்கு, விவசாயிகளுக்கு electric connection கொடுக்க வேண்டும்,

மின்சார மீட்டர் பொருத்த வேண்டும். அதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது? அதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? விவசாயிகளுக்கு மீட்டர் பொருத்தி, அதன் மூலம் மின் திருட்டைக் கண்டுபிடிக்க உங்கள் கட்சி ஆதரவு தருகிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மீட்டர் பொருத்துவது என்பது, மின் திருட்டைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல. பயன்படுத்தக்கூடிய மின்சார அளவிற்கான கட்டணம் வசூலிப்பதற்காக மீட்டர் பொருத்தப்படுகிறதே தவிர, மின் திருட்டைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதைத்தான் உங்கள் அறிக்கையிலேகூடச் சொல்லி இருக்கிறீர்கள். அந்த வகையிலே தொடர்ந்து விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு சலுகை இலவச மின்சாரம். அந்த இலவச மின்சாரம் இல்லையென்று சொன்னால், விவசாயிகளினுடைய வாழ்க்கை கேள்விக்குறி; விவசாயத்தை விட்டுவிட்டு ஓடிவிடுவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலையிலே, இந்த மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தைக் காரணம் காட்டாமல், எப்பாடுபட்டாவது நிலைநிறுத்த வேண்டும். முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள் அரசு ஊழியர்கள் சலுகைகளைப் பற்றி. இப்படி எல்லோருக்கும் எத்தனையோ சலுகைகள் இந்த நாட்டில் இருந்தாலும்கூட, விவசாயிகள் நமக்குச் சோறு போடுகிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய சலுகை என்ன? அவர்களுக்குச் சலுகையே வேண்டாமா? வாழ்க்கைக்கு உத்தரவாதம் வேண்டாமா? ஆன காரணத்தினாலே, இந்த இலவச மின்சாரத்தை எப்பாடுபட்டாவது நிலை நிறுத்த வேண்டும். ரத்து செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையினை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வற்புறுத்தி இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கை எண்-1—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பிலே ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். இதுவரையிலே நம்முடைய சட்டமன்றப் பேரவையிலே, வீடியோ எடுப்பதற்காக, நிதியிலே 45 இலட்சம் ரூபாய் வாடகை என்று கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படி ரூபாய் 45 இலட்சம், இதற்கான செலவு தேவையா? அதே நேரத்தில், வரக்கூடிய காலகட்டங்களிலே வீடியோ எடுப்பதற்குக் கருவிகள் வாங்குவதற்காக ரூபாய் 3 கோடியே



20 இலட்சம் என்று ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். ஆகவே, நாமே நிதி நெருக்கடியிலே சுழன்று கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இங்கே தூர்தர்ஷன் இருக்கிறது. தனியார் டிவி-க்கள் இருக்கின்றன. அவர்களை விட்டோம் என்று சொன்னால், அவர்களும் எடுத்துக்கொண்டு, அந்த வீடியோச் சுருளை இலவசமாகக் கொடுப்பதற்குக்கூட வாய்ப்பாக இருக்கும். அந்த வகையிலே இப்படிப்பட்ட செலவினங்கள் தேவையில்லாதவை. நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இதை என்னுடைய ஆலோசனையாகவும் நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டார்கள். தனியார் தொலைக்காட்சிகளுக்கு இங்கே அவை நடவடிக்கைகள் முழுவதையும் படம் பிடிக்க நாம் அனுமதி வழங்கினால், எத்தனையோ விஷயங்களை, பேச்சுகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 'அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது' என்று சொல்கிறார்கள், அப்போது இந்தத் தனியார் தொலைக்காட்சிகள், அந்தப் பகுதிகளை எல்லாம் காண்பிக்காமல் இருப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆகவேதான், அரசே படம் பிடித்து, எடிட் செய்து, மற்றத் தொலைக்காட்சிகளுக்கு வழங்குகின்ற வழக்கத்தைக் கடைப்பிடிக்கின்றோம்.

பிற்பகல் 12-55

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நிதி நெருக்கடிக்காகச் சொல்கிறேன். இப்போதுகூட அரசுக்குச் சொந்தமான தூர்தர்ஷன் இருக்கிறது. அவர்களை எடுக்கச் சொல்லி, நீங்கள் சென்சார் செய்து கொடுக்கலாம், வாய்ப்பு இருக்கிறது. நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு தூர்தர்ஷனை எடுக்கச் சொல்லிவிட்டு, இந்த, இந்தக் காட்சிகளைத்தான் வெளியே கொண்டு செல்ல வேண்டும்; இதையெல்லாம் நிறுத்தி வைக்கிறோம் என்று சொல்லி, சென்சார் செய்துகூட நீங்கள் கொடுக்கலாம் என்ற கருத்தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதே நேரத்தில், ரேஷன் கார்டிலே ஊழல் இருக்கிறது, குறைபாடுகளை எல்லாம் களைய வேண்டுமென்று சொல்லி, கூப்பன் முறையில் வழங்குவதாகச் சொன்னீர்கள். 1,45,000 ரேஷன் அட்டைகள் இங்கு புழக்கத்தில் இருக்கின்றன. இப்போது கூப்பன் முறை கொண்டு வந்த நேரத்திலே, அதிலே 99% கூப்பன் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியென்று சொன்னால், ஊழலைத் தடுப்பதற்கு, இந்த முறைகேட்டைத் தடுப்பதற்கு, தடை செய்யப்பட்ட குடும்ப அட்டைகள் எத்தனை என்பதையும் இங்கே விளக்கமாகச் சொல்லவேண்டும். 99% வழங்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதே நேரத்திலே இன்னொன்று. கூப்பன் முறையை அமலாக்குவதற்கு ரூபாய் 4 கோடியே 36 இலட்சம் செலவு என்று சொல்லப்பட்டிருக்கிறது, மீண்டும் 1 கோடியே 40 இலட்சம் கூப்பன்கள் வழங்குவதற்கு. இதிலே ஊழலைக் கண்டுபிடிக்காமல் 99 சதவீதம் வழங்கப்பட்ட இந்தக் கூப்பன் முறைக்கு 4 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவு தேவையா என்பதையும் இங்கே நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை, நெசவாளர் பிரச்சினை. நெசவாளர் பிரச்சினையில், அவர்கள் துயர் துடைப்பதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, கொள்முதல் செய்வதாகச் சொன்னீர்கள். ஆனால், நெசவாளர்களுடைய துணிகள் தேங்கியிருப்பது ஏறத்தாழ ரூபாய் 500 கோடிக்கு மேலே இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கின்ற நேரத்திலே, ரூபாய் 25 கோடியை மட்டும் ஒதுக்கினீர்கள் என்று சொன்னால், இது 'யானைப் பசிக்குச் சோளப் பொரி' போட்டாற்போலத்தான் இருக்குமே தவிர, நெசவாளர் பிரச்சினையைத் தீர்ப்பதாக இருக்காது என்ற அந்தக் கருத்தையும் இங்கே நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அரசு 1½ ஆண்டு காலத்திலே, நெருக்கடி என்று சொல்லிக் கொண்டு எவ்வளவு பிரச்சினைகளுக்கு ஆளாகி, மக்களை எல்லாம் வாட்டி வதைத்து இருக்கிறதென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பிரச்சினை; போக்குவரத்துத் தொழிலாளர்கள், சர்க்கரை ஆலை, பஞ்சாலைத் தொழிலாள்ர்கள், காவல் துறையினர், சத்துணவு, ஊட்டச் சத்துப் பணியாளர்கள், இப்படி எல்லோருக்கும் சலுகைகள் பறிப்பு, ஆட்குறைப்பு. அதுமாத்திரமல்லாமல், சாலைப் பணியாளர்கள் நீக்கம்; மக்கள் நலப் பணியாளர்கள் நீக்கம். இந்தக் குடும்பங்கள் எல்லாம்



நடுத் தெருவிலே நிற்கின்ற காரணத்தாலே, அரசு உள்நோக்கம் இல்லாமல், மீண்டும் அவர்களைப் பணிக்கு அழைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் உரையை முடித்து விடுகிறேன்.

இப்போதுள்ள கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு, தருமபுரி, திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் தொடர்ந்து 1½ ஆண்டு காலத்திலே பால் விலை உயர்வு; பஸ் கட்டண உயர்வு; மின் கட்டண உயர்வு; இலவச வேட்டி-சேலை ரத்து; ரேஷன் அரிசி விலை உயர்வு; பல முனை வரி விதிப்பு; நுழைவு வரி விதிப்பு; மாணவர்கள் கல்விக் கட்டணம் அதிகரிப்பு; நீதிமன்றக் கட்டணம், ஸ்டாம்பு கட்டணம் கூடுதல்; 5 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையிலே அரசு பொதுத் தேர்வு; அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பணி நியமனம் இல்லை என்ற அறிவிப்பு; ஏழைப் பெண்களுடைய திருமண உதவித் திட்டம் ரத்து; அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ரத்து; அரசுப் பேருந்துகளைத் தனியார்மயமாக்கவுள்ள அந்தத் தயார் நிலைத் திட்டம்; ஏழைகளுக்கு வழங்காமல் பணக்காரர்களுக்கு வழங்கவிருக்கக்கூடிய, பண்ணையாளர்களுக்கு வழங்கவிருக்கக்கூடிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்; அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் இணைப்பதனாலே சுய நிதிக் கல்லூரிகள் போல் கல்விக் கட்டணம் பல மடங்கு உயர்ந்து, மாணவர்கள் கல்வி பாதிப்பு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை; கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தினாலே ஏற்படக்கூடிய சிறுபான்மையினருடைய பாதிப்பு; இப்படிப் பல்வேறு அவலங்கள் எல்லாம் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் கவனத்திலே எடுத்துக்கொண்டு, இப்படிப்பட்ட நெருக்கடி நிலைகளைப் போக்கவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குற்றச்சாட்டுக்காக அல்ல. இந்த நிலை தொடரக் கூடாது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், மீனவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், வியாபாரிகள் முதலிய எல்லாத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பாதிக்கப்படுகிறார்கள்

என்று சொன்னால், சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய நம்மையெல்லாம் இந்த நாட்டு மக்கள் நிச்சயமாக மன்னிக்க மாட்டார்கள். ஆகவே, இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு தீவிரக் கவனம் செலுத்தவேண்டும். அந்த நிலையைப் போக்கினால் ஒழிய, இந்த நாடு நலம் பெறாது. ஆகவே அந்த வகையிலே இப்படிப்பட்ட குறைபாடுகளை, இங்கே (மணியடிக்கப்பெற்றது) கொண்டு வந்த சட்டங்களையெல்லாம் நிவர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வற்புறுத்தி, அமர்கின்றேன்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதா ரவி.

**திரு. ராதாரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்'.

சரித்திரம் வாய்ந்த இந்தப் பேரவையில் எனக்கு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலையைப் பார்த்தால் அதன் உச்சியைத் தொடவேண்டும், கடலைப் பார்த்தால் அதன் ஆழத்தைத் தொடவேண்டும் என்ற எண்ணத்தில் உழைத்துக் கொண்டிருக்கும், பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று கூறிய தந்தை பெரியாரின் கொள்கைகளை நடைமுறையாக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை நிறைவேற்றி, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் இலட்சியங்களைச் செயல்படுத்திக் கொண்டிருப்பவர்; அவர் பேசினால் மாநாடு, நடந்தால் ஊர்வலம் என்ற அளவில் உயர்ந்து இருக்கும் தமிழ்நாட்டில் ஒன்றரைக் கோடி உறுப்பினர்களைத் தாயுள்ளத்தோடு அணைத்துச் செல்லும் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள ஆறரைக் கோடி மக்களின் நிரந்தர முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய நாட்டின் நூறு கோடி மக்களின் எதிர்காலப் பிரதமராக வருவதற்குத் தகுதி படைத்த ஒரே தலைவர்; (மேசையைத் தட்டும் ஒலி) ஆங்கிலத்தில் மொத்தம் 26 எழுத்துகள். அதில் 23 எழுத்துகளை மறந்தாலும், M.G.R. என்கிற மூன்று எழுத்துகளை மறக்காத தமிழக மக்களுக்கு,



என்னுடைய அரசியல் புரட்சித் தலைவரின் வாரிசாக விளங்கும் துணிச்சல் மிக்க தலைவி, ஆசான், நிமிர்ந்து நின்று செயல்படக்கூடிய தாயுள்ளம் கொண்ட தலைவி, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்கி என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போயஸ் தோட்டத்திலே பூத்த மலர்களில் ஒரு மலரான ராதா ரவியாகிய என்னை, சைதை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, மக்கள் பணி செய்ய வாய்ப்பளித்து, பாரம்பரியம் மிக்க சட்டசபையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியையும், பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குப் பெருவாரியான வாக்குகளை அளித்து, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய சைதை தொகுதி மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட, மாவட்ட, வட்ட, பகுதி, இளைக் கழகச் செயலாளர்களுக்கும் மற்றும் கழகத்தின் மற்ற அணியைச் சார்ந்தவர்களுக்கும், கழகத்தில் உள்ள அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலையுலகம் என்னை வளர்த்தது. உலகிற்கு நடிகனாக விலாசம் தந்தது. அந்தக் கலையுலகம் காவிரி நீர்ப் பிரச்சினைக்காக, தமிழக அரசின் நியாயமான போராட்டத்திற்காக அரசுக்கு ஆதரவு அளித்தது. திரையுலகே ஓர் அணியாகத் திரண்டு, நெய்வேலிக்குப் பேரணி செல்ல முடிவு செய்தபோது, சட்டம்-ஒழுங்கு; பாதுகாப்பு என்று சில பிரச்சினைகளைக் கூறி, அந்தப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பலர் முயற்சித்தபோதும், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டி, கலையுலகத்தினருக்குத் தேவையான நியாயமான, முழுமையான பாதுகாப்பைத் தாயுள்ளத்தோடு வழங்கி, அந்தப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்த, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கலையுலகின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் இறுதி ஊர்வலத்திற்கு அரசு மரியாதை கொடுத்துக் கௌரவப்படுத்திய தாங்கள், நடிகர் திலகம் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட, சென்னை, அடையாறில்

அரசு சார்பில் இடம் அளித்தீர்கள். அதற்குக் கலையுலகத்தின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரைபபடங்களில் பின்னணிக் குரல் கொடுக்கும் கலைஞர்களுக்கு அரசு சார்பில் விருது வழங்கலாம் என்ற கோரிக்கையைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

28 ஆண்டுகளாகப் பட்டா வழங்கப்படாத சைதை தொகுதி, 137, 139-வது வட்டங்களில் உள்ள மஸ்தான் தோட்டத்து 50 வீடுகளுக்குத் தாங்கள் தாயுள்ளத்தோடு பட்டா வழங்கியதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை அந்தப் பகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மனிதாபிமான ஆட்சியில் அசாதாரணமான நிதி நெருக்கடி இருந்த போதிலும், மக்களின் தேவைகளை உணர்ந்து முக்கியமான பணிகளை நிறைவேற்றுவதற்காக, தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் சட்டசபையின் ஒப்புதலைப் பெறுவதற்காகச் சமர்ப்பித்துள்ள 2002-2003 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை, விவசாயிகள், நெசவாளர்கள், ஏழை எளிய மக்கள்மீது புரட்சித் தலைவி கொண்டுள்ள அக்கறையை எடுத்துக்காட்டுகிறது.

கடந்த கால தி.மு.க. ஆட்சியில் தவறான நிதிக் கொள்கையினால் ஏற்பட்டுள்ள 3,000 கோடி ரூபாய் அளவுக்குப் பற்றாக்குறையும், ஏறத்தாழ 31,000 கோடி ரூபாய் கடன் சுமையும், நாளொன்றுக்கு 11 கோடி ரூபாய் வட்டியாக மட்டும் செலுத்துகின்ற ஒரு கடுமையான நிதி நிலை இருக்கிறது.

பிற்பகல் 1-05

வருவாயில் பெரும் பகுதியை அரசு ஊழியர்கள் ஊதியத்திற்கே செலவிடக்கூடிய நிலை உள்ளது. இருந்தபோதிலும், ரூ. 175.99 கோடி துணை நிதி நிலை அறிக்கையில் பெரும் பகுதி விவசாயிகள், நெசவாளர்கள், முதியோர் நலனின் பொருட்டுச் செலவிடப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.



முதியோர் ஓய்வூதியம் பெறும் 71,973 முதியோர்க்கு, மாதம் ஒன்றுக்கு 10 கிலோ உணவுப் பொருட்கள் வழங்கும் அன்னபூர்ணா திட்டத்திற்குப் புரட்சித் தலைவி அரசினால் 6.03 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வறுமை நிலையில் மூத்தோர் சிக்கிச் சிரமப்படக்கூடாது என்பதில் புரட்சித் தலைவி கொண்டுள்ள அக்கறையை இது வெளிப்படுத்துகிறது.

அதேபோல், மழையின்மையாலும், காவிரி நீர் கொடுக்க கர்நாடக அரசு மறுத்து வருவதாலும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயப் பெருமக்களின் துயரத்தில் பங்குகொள்ளும் வகையில், மத்திய அரசு கொண்டு வந்துள்ள நெல் பருவ கால பொதுக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மாநில அரசு செலுத்த வேண்டிய 50 விழுக்காடு தொகைக்காக 6.61 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அரசு வழங்கி உள்ளது. அதோடு, தேசிய வேளாண்மைக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வரும் தொகுப்பு நிதிக்கு ரூ. 5.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. விவசாயப் பெருமக்களின்பால் புரட்சித் தலைவியின் அரசு கொண்டுள்ள அக்கறையை எடுத்துக்காட்டுகிறது இது.

மத்திய அரசின் தவறான ஜவுளிக் கொள்கையின் காரணமாக இந்தியா முழுமையும் கைத்தறி நெசவாளர்கள் வேலைவாய்ப்புக் குறைந்து, வறுமை நிலையில் தவிக்கிறார்கள். தமிழகக் கூட்டுறவு நெசவாளர்களும் பெரும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடியிலிருந்து நெசவாளர்களை மீட்க, தேங்கிக் கிடக்கும் வேட்டி-சேலைகளை வாங்க அவசரமாக 25 கோடி ரூபாய் ஒதுக்கியதன் மூலம், வாடி நிற்கும் நெசவாளர்கள் வாழ்வில் வாட்டம் குறைக்கப்பட்டுள்ளது. 31-12-1998-லிருந்து 2001-ஆம் ஆண்டு வரை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்கள் வாங்கிய கடனுக்காகச் செலுத்த வேண்டிய வட்டித் தொகையைச் செலுத்த 24.08 கோடி ரூபாய் அவசர நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

இப்படி விவசாயிகள், கூட்டுறவு நெசவாளர்கள், முதியோர் நலனுக்காக மட்டும் 110.14 கோடி ரூபாயைத் துணை நிதி நிலை அறிக்கை மூலம் புரட்சித் தலைவி அரசு செலவிட்டுள்ளது. சமூக மேம்பாடு, விவசாயி, நெசவாளர் நலம் போன்றவற்றில் புரட்சித் தலைவி அரசு கொண்டுள்ள அக்கறை, அன்பு எத்தகையது என்பதை இதன் மூலம் புரிந்து கொண்டிருக்கிறார்கள் நாட்டு மக்கள்.

[திரு. ராதாரவி] [2002 அக்டோபர் 29

விவசாய நிலங்களைக் காக்கவும், மருத்துவமனை வசதிகளை மேம்படுத்தவும், துணை நிதி நிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தமிழக மக்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்தார்கள். எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம், முதியோர்களுக்கான அன்னபூர்ணா திட்டம் ஆகியவற்றைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகத் தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வரைத் தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதில் இரண்டாவது கருத்திற்கு இடமே இல்லை.

எனது தொகுதியான சைதாப்பேட்டை தொகுதியில், சென்னை மாநகராட்சி மாந்தோப்புப் பள்ளிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1996 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் 16 கிரவுண்ட் நிலத்தைக் கையகப்படுத்தி, பள்ளி விளையாட்டுத் திடலுக்காக இலவசமாகத் தந்தார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மேயர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் அனைத்துப் பொறுப்பில் இருந்தவர்களும் அந்த நிலத்தை நில உரிமையாளருக்கே கிடைக்கச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கி ஊழல் செய்துள்ளார்கள். இதற்குத் தயவுகூர்ந்து விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் பள்ளி மாணவர்களுக்கு அந்த விளையாட்டுத் திடல் கிடைக்கவும் ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடையாறு ஆற்றின் கரையோரத்தில் உள்ள குடியிருப்புகளை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்க புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில், விநாயகபுரம் வரை கட்டப்பட்டுள்ள கரையை கோட்டூர்புரம் வரை இரண்டு பக்கங்களிலும் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகிற நேரத்தில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு மாற்று இட வசதி செய்து தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2002 அக்டோபர் 29] [திரு. ராதாரவி]

வெங்கடநாராயணா சாலையிலிருந்து தாடண்டர் நகர் அருகில் அடையாறு ஆற்றில் கலக்கும் மாம்பலம் கால்வாய்த் திட்டத்தைத் துரிதப்படுத்தி, கால்வாயைத் தூர் எடுக்கவும், புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுத்து சி.ஐ.டி. நகர், மேற்கு சி.ஐ.டி. நகர், காந்திபுரம், சுண்ணாம்புக் காளவாய், அப்பாவு நகர், தாடண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்கள் நீண்ட காலமாக அனுபவித்து வருகின்ற சுகாதாரச் சீர்கேட்டிலிருந்து விடுதலை பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடையாறு ஆற்றின் குறுக்கே, அதாவது கிண்டி எஸ்டேட்-சைதாப்பேட்டை இடையே வரும் ஆஸ்பத்திரி சாலையின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

140-வது வட்டம், ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் நீண்ட காலமாகச் சுடுகாட்டு வசதி இல்லாமல் மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அடையாறு ஆற்றின் கரையோரமாக அமைந்துள்ள இந்தச் சுடுகாட்டை விரிவுபடுத்தி, புதைக்க, எரிக்க, மதில் சுவர் எடுத்து, விளக்கு வசதிகள் செய்து கொடுக்க, துரித நடவடிக்கையை மேற்கொள்ள அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எனது கோரிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 1-10

'தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சைதை தொகுதியில் முக்கியக் குடிநீர்க் குழாய்கள், வீட்டு விநியோகக் குடிநீர்க் குழாய்கள், சிமெண்ட் சாலைகள் அமைத்துள்ளோம். இது எங்கள் சாதனை' என்று கூறினார்கள். ஆனால் அதுதான் இன்று சைதை தொகுதி மக்களின் வேதனை என்று தெளிவாகத் தெரிகிறது. ஏனென்றால், முக்கிய குடிநீர்க் குழாய்களின் இணைப்பு, பூமிக்கு மிகவும் கீழாகவும், வீட்டு விநியோகக் குழாய்கள் அதற்கு மேலாகவும் போடப்பட்டுள்ளன. இந்த ஊழல்களை மறைக்கும் சமாதியாக சிமெண்ட் சாலைகள் போடப்பட்டுள்ளன. இந்தச் சாலைகளைத் தோண்டி எடுத்தால், தி.மு.க. ஆட்சியின் பல ஊழல்கள் வெளிவரும். எனவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சைதை தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, சைதை தொகுதி முழுக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் குழாய்கள் மூலமும், டேங்குகள் மூலமும் வழங்குகின்ற குடிநீரின் அளவை அதிகரிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். இரண்டாம் சென்னைத்

திட்டத்தின்கீழ் 33 கோடி ரூபாய் செலவில் சைதாப்பேட்டை தொகுதிக்குத் தாராளமான குடிநீர் வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொண்டால், என்னுடைய தொகுதியினுடைய குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கும். எனவே, இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்க, இதய தெய்வம் அம்மா அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவோம் என்று கூறினார்கள். ஆனால் உண்மை நிலை அது சீர்கெட்டுள்ளது. சைதை தொகுதியில் உள்ள 891 சாலைகள் அனைத்தும் சீராக இல்லை. தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் சிங்காரத்தை அவர்கள் வீட்டிலும், வீட்டிற்குச் செல்கின்ற ரோட்டிலும் மட்டுமே வைத்துக்கொண்டார்கள். நாட்டிற்குச் செய்யவில்லை. எனவே, சைதை தொகுதியில் உள்ள 891 சாலைகளையும் செப்பனிட்டுச் சீராக்கத் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சிலே எல்லாவற்றையும் சொல்லக்கூடாது. அடுத்த பேச்சுக்கு வைத்துககொள்ளுங்கள்.

**திரு. ராதாரவி:** ஒரே ஒரு நிமிடம். மூன்றரை ஆண்டு காலம் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையின்கீழ் உழைத்த உழைப்பிற்கு எனக்கு அளிக்கப்பட்ட முதல் பதவி, இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் பதவி. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஒரு தலைமைக் கலை நிறுவனமாக மாற்றப்பட்டு, அதன்கீழ் மாவட்டக் கலை மன்றங்கள் செயல்படும் வகையில் நிர்வாக அமைப்பு ஏற்படுத்த வேண்டும். அங்கு பணிபுரியும் 11 நபர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்கவேண்டும். அதேபோல், அங்கு 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றிவரும் திருமதி புவனேஸ்வரி அவர்களின் தொழில்நுட்பர் பணியிடத்தை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னிந்திய நடிகர் சங்கம் என் வாழ்க்கையில் ஓர் அங்கம். அதற்குப் பதினான்கு ஆண்டுகள் தலைவராகச் செயல்படும் வாய்ப்பு



எனக்குக் கிடைத்தது. அச்சங்கத்தில் கௌரவ உறுப்பினரல்ல, ஆயுட்கால உறுப்பினர், ஓட்டுப் போடும் உரிமை பெற்றவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தாங்கள் ஆயுட்கால உறுப்பினராக உள்ள தென்னிந்திய நடிகர் சங்கத்தின் உறுப்பினர்களான நலிந்த நாடகத் திரைப்படக் கலைஞர்களுக்கு வீடு கட்ட இருபத்தைந்து ஏக்கர் நிலம் இலவசமாக வழங்க வேண்டும் என்று, தாயுள்ளம் கொண்ட உங்களைத் தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினர்களின் சார்பாகவும், அதன் முன்னாள் தலைவர், இந்நாள் செயற்குழு உறுப்பினர் என்கிற முறையிலும் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், உங்கள் தாயுள்ளம் இந்தத் தமிழ்நாட்டிற்கே தெரிந்தது என்று எங்கள் அனைவருக்கும் தெரியும்.

காவிரிப் பிரச்சினை பற்றிய தீர்மானம் இங்கே விவாதிக்கப்பட இருக்கிற சூழ்நிலையில் ஒரு கருத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வங்கதேசத்தில் பிரம்மபுத்திரா நதி உருவானாலும், அது இந்திய எல்லையில் தவழ்ந்து வர வங்கதேசம் அனுமதிக்கிறது. வங்கதேசத்திற்கு 40 சதவிகிதமும், நமக்கு 60 சதவிகிதமும் கிடைக்கிறது.

எல்லையில் சண்டையிட்டு எதிரி நாடாக பாகிஸ்தான் இருந்தபோதிலும், கங்கை நதி உருவாவது எங்கள் நாட்டில்தான் என்று அதை அடைத்துவிடவில்லை. பத்து சதவிகிதம் தன் பங்கிற்கு எடுத்துக்கொண்டு, 90 சதவிகிதம் பங்கு நமக்கு அனுப்பிவிடுகிறது. சண்டை போடும் அண்டை நாடுகளே, ஆற்று நீர் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்று உலகக் கோட்பாடுகளை உணர்ந்து செயல்படுகிறபோது, காவிரி என்றாலே அது தமிழர்களின் உயிர் நீர் என்று உள்ள நிலையில் கர்நாடக அரசு நடந்து கொண்ட விதம் கண்டிக்கத்தக்கது.

தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூடத் தரமாட்டேன் என்று மார் தட்டி மறுப்புத் தெரிவித்த கர்நாடக அரசு, இன்று உச்ச நீதிமன்றத்தில் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கிறது. இது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தனிப்பட்ட போராட்டத்திற்குக் கிடைத்த தார்மீக வெற்றி.

28 ஆண்டு காலம் ஓர் அரசியல் கட்சியில் உண்மையாக உழைத்த நான் அநாதை ஆக்கப்பட்டபோது, அ.இ.அ.தி.மு.க. என்கிற மாபெரும் இயக்கத்தில் தொட்டில் குழந்தையாக என்னைத் தத்தெடுத்து உறுப்பினராக்கி, தலைமைக் கழகப் பேச்சாளன் என்ற சத்துணவு ஊட்டி, இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் என்ற பெயர் இட்டு, உதிக்கின்ற சூரியனை யாரும் கையால் மறைக்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது, இரட்டை விரலால் அதை மறைத்து, வில்லன் நடிகனான என்னை (மேசையைத் தட்டும் ஒலி) சைதை தொகுதியின் கதாநாயகனாக்கி, சைதை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற விலாசம் தந்து, இன்று இச்சபையில் உரையாடும் வாய்ப்பளித்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி, என் உரையைச் செவிமடுத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, மீண்டும் வணக்கம்கூறி என் உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசுகின்றபோது, ஆட்சிக்கு நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்லி, இப்படிப் பல்வேறு பிரச்சினைகளில் மக்களுக்குப் பாதிப்பு உருவாகி வருகிறதே, இதற்குப் பரிகாரம் என்ன என்று கேட்டார்கள். அவைக்கு நான் ஒன்றைத் தெளிவாக விளக்க விரும்புகிறேன். ஐந்து ஆண்டு காலம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட நிதி நிலைச் சீரழிவை ஓராண்டு காலத்திலேயே சரிசெய்துவிட முடியும் என்பது பொருளாதார ரீதியாக முடியாத ஒன்று என்பதனை மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் உணர வேண்டும் என்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுக்கு நன்றாகத் தெரியும், மைய அரசைப் பொறுத்தவரைக்கும், பல்வேறு அணுகுமுறைகளை மேற்கொண்டிருக்கிறது. 11-வது Finance Commission-ஐப் பொறுத்தவரைக்கும், மாநில அரசுக்கு, குறிப்பாகத்



தமிழக அரசுக்கு ஒதுக்கிய நிதியை, ஒத்துக்கொண்ட நிதியை, 10-வது நிதிக் குழு ஒத்துக்கொண்ட நிதியை—6.637 சதவீதம் என்ற நிதியை 5.385 சதவீதமாகக் குறைத்துவிட்டார்கள். அப்படி 5.385 சதவீதமாகக் குறைத்த காரணத்தினால், நடப்பு ஐந்தாண்டு காலத்திற்கு 2,946 கோடி ரூபாய் இந்த ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்புக்கு வந்த பிறகு—மைய அரசிடமிருந்து நமக்கு வர வேண்டிய நிதிப் பகிர்விலே வர வேண்டிய அந்தப் பணம்— நமக்குக் கிடைக்காமல் போய்விட்டது. சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 590 கோடி ரூபாய் நாம் பணத்தை இழந்து விடுகிறோம். அந்த 590 கோடி ரூபாய் நமக்கு வருமேயானால், மைய அரசிலே அங்கம் வகிக்கின்ற நீங்களோ, மைய அரசை ஆட்டிப் படைக்கின்ற நிலையிலே இருக்கின்ற தி.மு.க.வோ, மைய அரசினுடைய மனதை மாற்றி, அந்தப் பணத்தை நமக்கு, மாநில அரசுக்கு மீண்டும் பெற்றுத் தந்தால், கட்டாயமாக அந்த 590 கோடி ரூபாயில், நீங்கள் சொல்கிறீர்களே, ஊழியர்கள் போராட்டம், நீங்கள் சொல்கிறீர்களே, வேறு சில பிரச்சினைகள், அந்தப் பிரச்சினைகள் எழாத முறையில் மாண்புமிகு அம்மா அவர்களால் காக்க முடியும். இந்தப் பொறுப்பு உங்களுக்கும் இருக்கிறது என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல, மைய அரசைப் பொறுத்தவரைக்கும் இன்னும் ஒன்றைச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்புக்கு வந்த பிறகு 590 கோடி ரூபாய், இப்படி 6.637 சதவீதத்தை 5.385 சதவீதமாகக் குறைத்ததனால் குறைப்பு. அதுமட்டுமின்றி, நடப்பு ஆண்டுக்கு மட்டும் மேலும் 540 கோடி ரூபாயை அவர்கள் நமக்குத் தராமல் குறைத்துவிட்டார்கள். ஒட்டுமொத்தமாக, 1,100 கோடி ரூபாய்க்கு மேல் மைய அரசிடமிருந்து இந்த ஆண்டு மட்டும் வர வேண்டிய பணம் நமக்கு வராமல் போய்விட்டது. அந்த 1,100 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு பல்வேறு திட்டங்களை நாம் தீட்டியிருக்க முடியும். சமுதாய நலத் திட்டங்களைத் தீட்டியிருக்க முடியும். அதுமட்டுமல்ல, அப்படி இந்த 1,100 கோடி ரூபாயை மாநில அரசுக்கு மைய அரசு தந்திருக்குமேயானால் அல்லது இருக்குமேயானால், அரசு ஊழியர்களுக்கு ரத்து செய்யாமல் இருந்திருக்க முடியும். அதேபோல காலத்தில் D.A.-வை நாங்கள் வழங்கியிருக்க முடியும். அந்த surrender leave encashment-ஐக் கட்டாயம் நாங்கள் தந்திருக்க முடியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரைக்கும், ஏழைகளுக்கும் உதவ வேண்டும், அரசு ஊழியர்களுக்கும் உதவ வேண்டும் என்ற பொது நோக்கோடு

பிரச்சினைகளை அணுகிக் கொண்டு வருகிறார்கள். இப்படி 1,100 கோடி ரூபாய் பணத்தை மைய அரசு குறைத்த காரணத்தினால் 3.50 ரூபாய்க்கு விற்க வேண்டிய அந்த அரிசியின் ஒரு பகுதியை 6 ரூபாய்க்கு உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது.

டெல்லியிலே தி.மு.க., P.M.K. போன்ற நீங்கள் எல்லாம் ஆளுகின்ற அந்த அரசினுடைய தவறான பொருளாதார அணுகுமுறை; மாநிலங்களுடைய பண அதிகாரத்தை நசுக்குகின்ற அணுகுமுறை; மாநில அரசுகளையெல்லாம் வெள்ளைக்காரர்கள் எப்படி colonial exploitation செய்தார்களோ, அதுபோன்று இருக்கிறது. மாநில வருவாயில் நாங்கள் இங்கிருந்து பணத்தைத் தருகிறோம், நூறு ரூபாய் பணத்தை மைய அரசுக்கு மாநில அரசு வரி மூலமாகத் தருகின்றபோது, Corporate Tax, Excise Duty போன்ற பல்வேறு வரிகளாகத் தருகின்றபோது, அதிலே 1.56 சதவீதத்தைத்தான் மைய அரசு மாநில அரசுக்குத் தருகிறது. நூறு ரூபாய் நாம் மைய அரசுக்குத் தருகிறோம் என்றால், ஒரு ரூபாய் 56 காசுதான் நமக்குக் கிடைக்கிறது. இப்படிப் பண அதிகாரத்தைக் கையிலே குவித்து வைத்துக்கொண்டு, வளர்ந்துவிட்ட மாநிலம் என்று தமிழகத்தைச் சொல்லி, நமக்குத் தர வேண்டிய பணத்தை, தர ஒப்புக்கொண்ட பணத்தை, முதலிலே 590 கோடி ரூபாய், பிறகு 540 கோடி ரூபாய், இந்த ஆண்டு மட்டும் சராசரியாக 1,100 கோடி ரூபாயை அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். அதை ஈடுகட்டப் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினால் போராட்டம் செய்கிறீர்கள். ஈடுகட்ட மின் கட்டணத்தை உயர்த்தினால் போராட்டம் செய்கிறீர்கள். வெறுமனே 600 கோடி ரூபாய் வரியைப் போட்டால் நாடு தழுவிய போராட்டம் என்று அறிவித்து விடுகிறார்கள். வரியும் போடக்கூடாது என்று சொல்கிறீர்கள்.

பிற்பகல் 1-20

மைய ஆட்சியிலே உட்கார்ந்து கொண்டு அங்கேயிருந்து அவர்கள் தர வேண்டிய பணத்தையும் தராமல் தட்டிப் பறிக்கின்ற ஒரு நிலையையும் நீங்கள் உருவாக்கிவிடுகிறீர்கள். இப்படி, குழந்தையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிற பாங்கைப் போன்று, ஒரு புறம் புரட்சித் தலைவி ஆட்சிக்கு நிதியைத் தராதே என்பது; மறுபுறம் வரி போடாதே என்பது. ஒரு வேளை இ.மு.க., பா.ம.க., போன்ற அமைப்புகள் எல்லாம் மைய ஆட்சியில் இல்லாமல் இருந்திருந்தால் மைய அரசு, புரட்சித் தலைவிக்குத் தாராளமாகப்



பணத்தைத் தந்திருப்பார்களோ என்றுகூட நான் எண்ணுகிறேன். நீங்கள் அங்கே இருக்கிற காரணத்தால், அண்ணாவின் கொள்கை தங்களின் கொள்கை என்று சொல்லிக் கொண்டிருக்கும் நீங்கள் டெல்லியிலே உட்கார்ந்து கொண்டு என்ன செய்கிறீர்கள்?

'மாநிலத்திற்கு அதிக financial power வேண்டுமென்று அண்ணா சொன்னார். அண்ணாவின் கொள்கைக்காகப் போராடினோம்; திராவிட நாடு, தனி நாடு வேண்டுமென்றுகூடக் கேட்டோம்; பண அதிகாரம் வேண்டுமென்று கேட்டோம்; more Constitutional powers for the States வேண்டுமென்று எல்லாம் கேட்டோம்' என்றெல்லாம் அன்று கூறிய நீங்கள் இன்று டெல்லியிலே வாய்ப்புக் கிடைத்து அங்கே சென்று உட்கார்ந்த பிறகு, அந்த அதிகாரத்தை, புரட்சித் தலைவி ஆட்சிக்கு டெல்லியில் இருந்து நிதி வராமல் தடுப்பதற்கு மட்டுமே பயன்படுத்துவேன் என்று தி.மு.க. தலைமையின் எண்ணப்படி செயல்பட்டு வருகிறீர்கள். நீங்கள் அதற்கு ஒத்துழைக்கிறீர்கள். ஏனென்று எனக்குப் புரியவில்லை. இந்த நிலை மாற வேண்டும் என்பதற்காக உங்களுக்கு இதை நான் சொல்கிறேன்.

புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது வளர்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் தந்தார்கள். நிர்வாகச் செலவுகளில் Revenue Expenditure-ஐ ஒரு control-ல் புரட்சித் தலைவி அவர்கள் வைத்திருந்தார்கள். புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்தபோது 1990-லே 1,126 கோடி ரூபாய் deficit என்ற நிலையை அதற்கு முன்னால் 1989-லே இருந்த தி.மு.க. ஆட்சி உருவாக்கிவிட்டுச் சென்றது. ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் 5 ஆண்டு காலம் ஆட்சி புரிந்து அந்த 1,126 கோடி ரூபாய் என்பது 1,255 கோடி என்ற நிலையில், வெறுமனே இட்டத்தட்ட நூற்று சொச்சம் கோடிதான் extra deficit என்ற நிலையில்— 5 ஆண்டு கால புரட்சித் தலைவி ஆட்சி—இருந்தது. காரணம், நிர்வாகச் செம்மை, நிர்வாகத் தூய்மை, நிதி நிர்வாகச் செம்மை ஆகியவற்றைப் புரட்சித் தலைவி கடைப்பிடித்து, வீண் செலவுகளைத் தடுத்து, வளர்ச்சித் திட்டங்களை அவர்கள் செம்மையாக மேற்கொண்ட காரணத்தால் deficit இல்லாமல் ஒரு பொற்கால ஆட்சியாக அந்த 5 ஆண்டு கால ஆட்சியை புரட்சித் தலைவி அவர்கள் நடத்திக் காட்டினார்கள். ஆனால், புரட்சித் தலைவியின் ஆட்சிக்குப் பிறகு வந்த தி.மு.க. 1,255 கோடி ரூபாயாக இருந்த deficit-ஐக் குறைத்ததா? குறைக்கவில்லை. அல்லது புரட்சித் தலைவி

ஆட்சிக் காலத்தில் இருந்த வெறுமனே 100 கோடி, 200 கோடி என்று சென்றதா? இல்லை. மாறாக, 5,781 கோடி ரூபாய் என்று A «R deficit, இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்குக் கேவலமான முறையிலே நிதி நிர்வாகத்தை மேற்கொண்ட காரணத்தால், முறைகேடுகள், சீர்கேடுகள் எங்கும் இருந்த காரணத்தால், விளம்பரச் செலவுகளாக அரசாங்கத்தினுடைய பணம், மக்கள் பணம் பாழடிக்கப்பட்ட காரணத்தால், deficit என்பது தி.மு.க. ஆட்சியில் 5,781 கோடி ரூபாய் என்ற நிலைக்கு எட்டிவிட்டது. எப்படி அந்தக் குறையை ஈடு செய்வது? அந்தப் பணச் சுமையை எப்படிச் சமாளிப்பது? ஒன்று, வரி போட வேண்டும், அல்லது மைய அரசு பணம் தர வேண்டும். வரி போட்டால் போராட்டம் என்கிறீர்கள். மைய அரசு பணம் தரவில்லை, தராததற்கு நீங்களும் காரணமாக இருந்துவிடுகிறீர்கள். இதுதான் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக்குத் தற்போது ஏற்பட்டிருக்கின்ற சிக்கல் என்பதனை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, கிட்டத்தட்ட (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன், புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது கிட்டத்தட்ட Cash Reserve, கஜானாவிலே 649 கோடி ரூபாய் இருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிப் பீடத்தைவிட்டு இறங்கும்போது Cash Reserve இல்லை. கஜானா டோட்டலாகக் காலி. அதுமட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 2,500 கோடி ரூபாய்க்கு மேல் வெளியிலே கடன். 250 கோடி ரூபாய் நெய்வேலிக்காகத் தரவேண்டிய பணத்தையும்— அவையிலே பல முறை சொல்லியிருக்கிறேன். அந்தப் பணத்தையும்— ஏற்கெனவே வாங்கிவிட்டார்கள். நெல்லை surplus ஆகக் கொள்முதல் செய்து, தேவைக்கு மேல் கொள்முதல் செய்து, அதன் மூலம் அரசுக்கு வந்த கடன் சுமை 1,445 கோடி ரூபாயைப் புரட்சித் தலைவி ஆட்சியின்மீது பெரும் சுமையாகச் சென்ற ஆண்டு போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். எங்கிருந்து அந்த 1,445 கோடி ரூபாயைச் சம்பாதிப்பது? அதற்கு நாம் ரூபாய் நோட்டடிக்க முடியுமா? நோட்டு அடிக்கிற அதிகாரம் மைய அரசுக்கு அல்லவா இருக்கிறது? நீங்கள் இருக்கின்ற அந்த ஆட்சியிடம் சொல்லி, ரூபாய் நோட்டு அடிக்கிற அதிகாரத்தை நீங்கள் வாங்கிக் கொடுத்துவிட்டீர்கள் என்றால், இந்தப் பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடும். தாராள மனம் உள்ள புரட்சித் தலைவி, கொடை வள்ளல்போல் இருக்கின்ற புரட்சித் தலைவி,



ஏழை எளிய மக்களுக்கு எதை வேண்டுமென்றாலும் பணம் இருந்தால் அள்ளித் தந்துவிடுவார்கள். பணம் இல்லை என்ற ஒன்றுதானே காரணம்? இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், அரசு ஊழியர்களின் போராட்டம் நடக்கிறது. மைய அரசு D.A. அறிவிக்கிறது; ஊதிய உயர்வு அறிவிக்கிறது. இந்தியாவிலே எந்த ஒரு மாநில அரசும், மைய அரசு அறிவித்ததைவிட அதிகமாக ஊதியத்தை மாநில அரசு ஊழியர்களுக்குத் தருவேனென்று அறிவிக்கவில்லை. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சி அப்படி அறிவித்தது. அதிகப்படியான D.A.-வை அறிவித்தது. ஊதிய உயர்வை அறிவித்தது. அறிவித்து என்ன செய்தது? அவர்கள் கொடுத்தார்களா? இல்லை. திரு. நரசிம்மன் அவர்கள் கூறியதைப்போல, ஒரு வேளை ஆட்சிப் பீடத்திற்கு மீண்டும் வரமாட்டோம் என்று எண்ணிக்கொண்டு அரசு ஊழியர்களுக்கு 1999-2000 ஆம் ஆண்டிலே தர வேண்டிய பணத்தைத் தராமல், 2003-2004-ல் வருகின்ற அரசு தந்துவிடும் என்று சொல்லி, அந்தச் சுமையையும் புரட்சித் தலைவி அரசுமீது சுமத்திவிட்டுச் சென்றுவிட்டார்கள். அந்த 1,823 கோடி ரூபாயை எப்படி நாங்கள் கட்ட முடியும்? எப்படி இந்த ஊழியர்களுக்குத் தர முடியும்? மைய அரசு நிதி தரவில்லை. வரி போடலாம் என்றால், அதற்கும் நீங்கள் போராடுகிறீர்கள். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 1-25

அதைப்போலத்தான், தற்போது அரிசியைப் பற்றி நீங்கள் சொல்கிறீர்கள். மூன்றரை ரூபாய் அரிசி; புரட்சித் தலைவி அவர்கள் அதற்குத் தெளிவான விளக்கத்தை ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். மூன்றரை ரூபாய் அரிசியை ஆறு ரூபாயாக நாங்கள் உயர்த்தவில்லை; உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்தை, நீங்கள் ஆளுகிற மைய அரசு உருவாக்கிவிட்டது. அந்த 1,100 கோடி ரூபாய் எங்களுக்கு வரவேண்டிய பணத்தை அவர்கள் ரத்து செய்யாமல் தந்து இருந்தால், கட்டாயம் புரட்சித் தலைவி அவர்கள் ஏழைகளுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டு, தமிழகத்தின் ஏழைகளையெல்லாம் தன் சொந்தப் பிள்ளைகள் என்று பாராட்டி, தியாக உணர்வோடு ஆட்சி புரிகிற புரட்சித் தலைவி, அந்த மூன்றரை ரூபாய் அரிசியை ஆறு ரூபாயாக ஒரு காலத்திலும் உயர்த்தியிருக்க மாட்டார்கள்; உயர்த்தக்கூடிய சூழலை உருவாக்கியது மைய அரசு, மைய அரசினுடைய பொருளாதார அணுகுமுறை.

எங்களுக்குத் தரவேண்டிய பணத்தை, 1,100 கோடி ரூபாயைத் தாராமல் விட்டுவிட்டார்கள். தமிழகத்தினுடைய மக்கள் எல்லாம் வாக்களித்துத்தான் பாராளுமன்றத்தில் வெற்றி பெற்று நீங்கள் எல்லாம் டெல்லியில் எம்.பி.க்களாக இருக்கிறீர்கள்.

தி.மு.க. பிரதானக் கட்சியாகவும், நீங்கள் அதில் சேர்ந்து, ஆக எல்லோரும் இருக்கிறீர்கள். அப்படித் தமிழகத்து மக்களுடைய வாக்குகளைப் பெற்று, பாராளுமன்றத்திலே எம்.பி.க்களாக இருக்கிற நீங்கள் அதில் சேர்ந்து, தமிழக மக்களுக்காக ஆற்றுகிற கடமை என்ன? தமிழக மக்களுடைய நன்மைக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்? (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) பேசி முடித்து விடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் இதைப் பேசி முடித்துவிடுகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, Point of order.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஐ. கணேசன்:** Time ஆகிவிட்டது என்று சொல்லி முடித்து விடுவீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) இது உங்கள் மேல் இல்லை. உங்கள் மேல் குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிட்டும்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்லி முடிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கணேசன், (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஒன்றரை மணிக்கு வாக்கெடுப்பு. அவர் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) பேசி முடிக்கட்டும். வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மணி. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. மணி அவர்களே, நான் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, P.M.K. மீதான குற்றச்சாட்டாக இதை எண்ண வேண்டாம். (குறுக்கீடுகள்) மணி, நான் சொல்லிவிடுகிறேன். பாட்டாளி மக்கள் கட்சிமீது குற்றச்சாட்டாகத் தயவுசெய்து நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். மைய அரசுமீது குற்றச்சாட்டுச் சொல்கிறோம். குறிப்பாக, பிரதானப் பங்கு வகிக்கின்ற தி.மு.க., அதனுடைய கொள்கையாக மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் முயற்சி எடுக்கவில்லை. நீங்கள் அதைத் தட்டிக் கேட்டிருக்க வேண்டும் என்று கேட்கிறேன். நீங்கள் அதுபோன்ற பொருளில் எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள்மீது குற்றச்சாட்டு என்றுகூட நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். மைய அரசு அந்தப் பணத்தைத் தராத காரணத்தால், நாங்கள் அரிசி விலையை உயர்த்த வேண்டிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. மூன்றரை ரூபாய் அரிசி ஆறு ரூபாயாக உயர்த்தப்பட்டது என்றால், அதை உயர்த்தியதற்கு அடிப்படைக் காரணம் மைய அரசுதான். மைய அரசு இந்த ஏழைகளுக்குப் பணத்தைத் தராத காரணத்தால்தான்....

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு 11 கோடி ரூபாய் வட்டி மட்டும் மக்களுக்காக இந்த அரசு கட்டி வருகிறது. ஒட்டுமொத்தமாக ஓர் ஆண்டுக்கு வட்டி மட்டும் 3,960 கோடி ரூபாய் இந்த அரசு வட்டி கட்டி வருகிறது.

[திரு. சி. பொன்னையன்] [2002 அக்டோபர் 29

கடந்த காலத்திலே வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு, வருமானத்தைப் பெருக்கி, Revenue to the Government-ஐ அதிகப்படுத்தி Revenue Expenditure-ஐக் குறைத்து, Plan Expenditure-க்கு concentrate செய்யாமல், 5 ஆண்டு காலம் உதாசீன ஆட்சியை நடத்திய காரணத்தால் 3,960 கோடி ரூபாய் ஆண்டுக்கு வட்டி மட்டும் கட்டுகிற பொறுப்பில், நாள் ஒன்றுக்கு 11 கோடி ரூபாய் வட்டி கட்டவேண்டிய ஒரு நிலையில் இந்த அரசு இருக்கிறது. இதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட பண நெருக்கடியில் இருக்கின்றபோது மாநில அரசால் மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை உருவாகி விடுகிறது.

98 சதவீதம் மக்கள் பொது மக்கள்; 2 சதவீதம் மக்கள் அரசு ஊழியர்கள்; மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பேசியபோது கூறினார்கள். அந்த 98 சதவீத மக்களில், 35 சதவீத மக்கள், மைய அரசினுடைய கணக்கெடுப்பின்படியே வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே வாழ்கிற மக்களாக இருக்கிறார்கள். பாட்டாளி மக்களாக இருக்கிறார்கள். உங்கள் கட்சியின் பெயரும் பாட்டாளி மக்கள் கட்சி. அதற்காகச் சொல்கிறேன். பாட்டாளி மக்களாக இருக்கிறார்கள். அந்தப் பாட்டாளி மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அந்தப் பாட்டாளி மக்களுக்கு ஒன்றுமே செய்ய முடியாத நிலை; அவர்கள் பரிதவிக்கின்ற நிலை. அவர்களுக்கு நாம் சலுகைகளைச் செய்ய முடியவில்லை; நல்லதைச் செய்ய முடியவில்லை. இந்த நிலையிலேதான் fiscal reforms கட்டாயம் நமக்குத் தேவை என்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி fiscal reforms நாம் செய்யவில்லை என்றால், வெளியிலே கடன் வாங்கக்கூடாது என்று டெல்லி அரசாங்கம் சொல்லிவிடுகிறது. கடன் வாங்கி ஏழைகளுக்கு உதவலாம் என்றால், அதற்கும் தடை விதித்துவிட்டன மைய அரசாங்கமும், ரிசர்வ் வங்கியும். கடன் வாங்கியும் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலே நாங்கள் இருக்கிற காரணத்தால்தான் இந்த நிலை இருக்கிறது. நிர்வாகச் சீர்திருத்தம் தேவை; நிதிச் சீர்திருத்தம் தேவை. ஏழைகளுக்காக நாம் பாடுபட வேண்டும். பாமர, பாட்டாளி மக்களுக்காக உழைக்கின்ற தானைத் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு அவை உறுதுணையாக இருக்க வேண்டும். உறுதியாக நீங்கள் உறுதுணையாக இருந்து செயல்படுகிறபோதுதான் மக்களுக்கு நாம் பாடுபட முடியும்.



2002 அக்டோபர் 29] [திரு. சி. பொன்னையன்]

கட்சி பேதம் இல்லாமல் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்தினால்தான் வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்கு வாழ்வை நாம் தரமுடியும். அதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய தீர்மானத்தை அவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"2002-2003 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 25-10-2002 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2002-2003 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் முழுமையாக வழங்கப் பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 2002-2003 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் |
|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 45,03 | .. |
| 3 | நீதி நிருவாகம் | 1,24,08 | .. |
| 4 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 3,23,32 | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 11,37,79 | .. |
| 7 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 25,00 | 30,00 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 81,16 | .. |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 9,29,05 | .. |
| 13 | எரிசக்தித் துறை | .. | 1,00,00 |
| 15 | நிதித் துறை | 15,01 | 1,50,00 |
| 16 | கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணிநூல் | 52,50,05 | 96,37 |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 6,09,21 | .. |
| 19 | உயர் கல்வித் துறை | 75,00 | .. |
| 21 | உள் துறை-காவல் | 3,54,09 | .. |
| 22 | உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 39,27 | .. |
| 23 | உள் துறை-சிறைச்சாலைகள் | 71,60 | .. |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் |
|---|---|---|---|
| 25 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 10,16,52 | 1,00,00 |
| 26 | தொழில் துறை | .. | 38,79,22 |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 3,20,00 | .. |
| 29 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு | 1,35,26 | .. |
| 36 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 15,72 | .. |
| 38 | பொதுப் பணித் துறை | 79,02 | 4,44,79 |
| 41 | பள்ளிக் கல்வித் துறை | 4,85,09 | .. |
| 42 | சிறு தொழில்கள் துறை | .. | 5,00 |
| 43 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 6,55,67 | .. |
| 45 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 75,00 | .. |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 56,75 | .. |
| | **பெருமொத்தம்** | **1,19,18,69** | **48,05,38** |

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2002 (அ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-10-2002) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 17-05-2002 ஆம் நாளிட்ட 147 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

49. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்ட விதிகள் இயற்றியது குறித்துப் பொதுப் பணித் துறையின் 24-9-2002 ஆம் நாளிட்ட 359 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 50(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

50. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 23-9-2002 ஆம் நாளிட்ட 112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/2002) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

51. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும முழுப் பங்கேற்பு) விதிகள் இயற்றியது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் 09-08-2002 ஆம் நாளிட்ட 120 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 73(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

52. தமிழ்நாடு [illegible]ல்சார் வாரியத்தின் 1999-2000 ஆம் ஆண்டின் கணக்குகள் மீதான [illegible]ணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு

கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

53. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

54. 2000—2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிட்டுக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

26. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து எட்டாவது அறிக்கை (2001—2003).

27. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை (2001—2003).

28. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை (2001—2003).

29. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினான்காவது அறிக்கை (2001—2003).

30. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

31. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225172
சென்னை-600 008
நூலகம்
P62-31-1

சு மைய அச்சகம், சென்னை - 600 079.